ndarrajan

: July - 2011

: 224

: 11.6 N.S. Book Print

: ரூ.100.00

ayam
o.28,
ts
ai
- 600 017.

ill Computers, T.Nagar, Chennai - 17.
goodwillngr@yahoo.co.in Cell:9444006583
T PRINTING CO., Chennai - 5 ✆ 28446166, 28446891

# நாக படை

## 1

**'காலில்லை - கையில்லை - வாலில்லை - கொம்பில்லை வாயொன்றே ஆதாரம்... அதனுள்ளம் ஆலகாலம்! மாயங்கள் புரிவோர்க்கும், காயங்கள் புரிந்தோர்க்கம் பாம்பென்றால் பரவசம்... மருந்தன்றோ அதன் விஷம்?'**

படகு போன்ற அந்த கார் தார்ச் சாலையை விட்டு பிரிந்து ஒரு கிராமத்தை நோக்கி செல்லும் மண்சாலை மேல் ஓட ஆரம்பித்தது. இதனால் உண்டான செம்மண் புழுதிக்கு நடுவில் சீற்றத்தோடு வந்த வெண்ணிறத் தாலான அந்தக் கார் பார்ப்பதற்கு ஒரு தனியழகோடு தெரிந்தது. காரைத் தொடர்ந்து பின்னாலேயே ஒரு ஜீப்பும் வந்தது.

அந்த மண் சாலை ஒரு சிறு குன்று போன்ற மலையை கடந்து வளைந்து திரும்பியது. அப்படி திரும்பும் இடத்தில் ஒரு பெரிய நாகர் சிலை! கிட்டத்தட்ட ஆறடி உயரம் மூன்றடி அகலம். காலகாலமாய் அதை ஜனங்கள் வணங்கி வருகின்றனர் என்பதற்கு ஆதாரமாய் அதன் மேல் எண்ணெய்ப் பூச்சும் மஞ்சள் குங்குமமும் சிதறிக் கிடந்தன. கீழே சில அகல் விளக்குகள் ஏற்றப் பட்டு வீசும் காற்றில் அணைந்தும் போயிருந்தன. அந்த

நாகர் சிலைக்கு பக்கத்திலேயே ஓர் அறிவிப்பு பலகை. அதில் நாகானாங்குறிச்சி இரண்டு கிலோ மீட்டர் என்கிற செய்தி.

அந்த நாகர்சிலையை காருக்குள் இருந்த படியே பார்த்தான் கருணாகரன். வயது முப்பத்து இரண் டாகிறது. இன்னமும் திருமணம் செய்து கொள்ள வில்லை. அதைப் பற்றி எல்லாம் நினைப்பதற்கே அவகாசமில்லாதபடி பிசினஸ் பிசினஸ் என்று அலைந்து கொண்டிருக்கிறான். அருகிலேயே அவனது உதவியாளன் கிரிதர் என்கிற கிரி...

இந்த கிரிக்கு நாற்பது வயதாகிறது. இரண்டு பெண்கள் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாகர் சிலையை பார்த்துவிட்டு கிரிதரைத்தான் பார்த்தான் கருணாகரன். கிரிதரும், "இந்த இடத்துல இருந்துதான் சார் புரோக்கர் சொன்ன நிலம் ஆரம்ப மாகுது..." - என்று காரை ஓரம்கட்டச் சொன்னான்.

காரும் நின்றது.

அவர்களும் இறங்கிக் கொண்டனர்.

பின் தொடர்ந்து வந்த ஜீப்பும் நின்று கொள்ள ஜீப்பில் இருந்து புரோக்கர் சவரிமுத்து என்பவர் இறங்கி ஓடிவந்தார். மிகச்சரியாக ஐந்தடி உயரம் இருந்தார். வெள்ளை பேண்ட் வெள்ளை சட்டை என்று தனக் கொரு பிரத்யேக ஸ்டைலை வடிவமைத்துக் கொண் டிருந்தார். பட்டையான கறுப்பு பெல்ட் வெளித்தெரிய அவர் இன் செய்து கொண்டிருந்த விதமே அலாதியாக இருந்தது.

"வாங்க சவரிமுத்து... இங்க இருந்துதானே அந்த இடம் ஆரம்பம் ஆகுது?" என்று கேட்டான் கிரிதர்.



"ஆமாம் சார்... இங்க இருந்துதான் ஆரம்பம்... இங்க இருந்து நாகனாங்குறிச்சி ஊர் வரை உள்ள இரண்டு கிலோ மீட்டர் நீளமும் நாகனாங்குறிச்சி ஜமீனுக்குதான் சொந்தம்... செம்மண் களரி இடம். இந்த இரண்டு கிலோ மீட்டர் நிலத்துக்குள்ள இரண்டு இடத்துல வாய்க்கால் குறுக்கிடுது. அதுபோக பன்னெண்டு கிணறுங்க இருக்குது.

"கிணத்துல தண்ணி இருக்குதா?"

"தாராளமா... தளும்பத் தளும்ப தண்ணீர் இருக்குதுங்க..."

"அப்புறம் ஏன் இந்த இடம் இப்ப காய்ஞ்சு கட்டாந்தரையா இருக்கு. குறைஞ்சபட்சம் சவுக்கு நட்டுருந்தாகூட நல்லா வந்துருக்குமே...?"

"வந்துருக்கும்... ஆனா..." - சவரிமுத்து இழுத்தார்.

"என்ன ஆனா...?"

"ஜமீன்தாருக்கு எதைச் செய்யவும் இஷ்ட மில்லைங்க. இந்த இடத்தை வித்துட்டா அவர் சிங்கப்பூருக்கு கிளம்பிடுவார். இப்பகூட அவர் வருஷத்துல பாதி நாள் அங்கதான் இருக்கார்."

"அங்க யார் இருக்கா?"

"அவரோட மனைவி மகள் இரண்டு பேரும் அங்கதான் இருக்காங்க..."

"நிலபுலன்லாம் இங்க இருக்குது. இவரு மட்டும் குடும்பத்தோட சிங்கப்பூர்ல இருக்காரா... ஆச்சரியமா இருக்கே?"

"என்ன இருந்தாலும் இது கிராமமாச்சுங்களே... சிங்கப்பூர்னா சிட்டி லைஃப் ஆச்சே?" - கிரிதர் சொன்ன

பதில் கருணாகரனுக்கு அவ்வளவு திருப்தியை தர வில்லை. வேறு ஏதோ காரணம் இருக்க வேண்டும் போல் தோன்றியது...

"இதோட சாயில் டெஸ்ட் ரிப்போர்ட் இருக்கா?" - கிரிதரிடம் கேட்டான். கிரிதரும் வேகமாய் காரில் இருந்த தன் ஃபைலில் இருந்து எடுத்து நீட்டினான்.

"சூப்பர் சாயில் சார்... பூந்தோட்டத்துக்கு ரொம்பவே ஏத்த இடம்னு விவசாயம் பண்ணையிலயும் சொன்னாங்க..." - கிரிதர் நீட்டியபடியே சொன்னதை கேட்டு சவரிமுத்துவும் உற்சாகமானார்.

"ஆமாம் சார்... நாகனாங்குறிச்சியே ரோஜா, சாமந்தி மருக்கொழுந்துன்னு தோட்டங்களுக்கு பேர் போன ஊர்... இங்க இருந்து இந்த பக்கமா முப்பது மைல் போனா கிருஷ்ணகிரி இந்த பக்கமா ஐம்பது அறுபது மைல்ல பெங்களூர் ஆரம்பமாயிடுது க்ளைமேட் எப்பவும் நல்லா இருக்கும் மழைக்காலங் கள்ள நல்ல மழையும் பெய்யும் இந்த ஊரோட ஸ்பெஷாலிட்டியே க்ளைமேட்தான் சார்... இந்த க்ளைமேட்டுக்காகத்தா இந்த பகுதியில பூந்தோட்டமே போடறாங்க தமிழ் நாட்டுக்கே இங்க இருந்து தான் பூக்கூடைங்க போகுது. அதுபோக வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி ஆகுது...."

- சவரிமுத்து அந்த தகவல்களை நான்காவது முறையாகச் சொன்னார். அது கிரிதருக்கு எரிச்சலை தந்தது. முறைத்தான்.

சவரிமுத்துவுக்குப் புரிந்தது.

கருணாகரன் பார்வை நிலத்தின் மேல் இருந்தது.



அப்போது ஒரு மாட்டு வண்டியில் வந்த இரண்டு பெண்கள் அந்த நாகர் சிலை அருகில் இறங்கி அதன் முன் விளக்கேற்றி விழுந்து கும்பிடுவதைப் பார்த்தான்.

கொஞ்சம் சிரிப்பும் வந்தது.

"என்ன இதெல்லாம்...?"

"சாமிங்க..."

"அது தெரியுது... இப்படி பொதுவான இடத்துல ஒரு கல்லை நட்டு போக்குவரத்துக்கு இடைஞ்சலா...?"

"ஊரை சேர்ந்த யாரும் அதை இடைஞ்சலா நினைக்கலங்க..."

- சவரிமுத்து தனக்கு தெரிந்த பதிலை கூறிவிட்டு நெளிந்தார்.

மாட்டு வண்டியில் வந்தவர்கள் கும்பிட்டு முடித்து விட்டு கருணாகரனின் காரைக் கடந்து போகத் தொடங்கினார்கள்.

அப்போது அந்த மாட்டுவண்டியை ஓட்டி வந்தவன் சவரிமுத்துவை ஒரு மாதிரி பார்க்கவும் சவரிமுத்து பார்வையை திருப்பிக் கொள்ள முயன்றார்.

"என்னா புரோக்கரு... யாரு பார்ட்டியா?" என்று சற்று வண்டியை இழுத்து நிறுத்தியபடியே கேட்டார்.

"அ....ஆமாய்யா... நீ போய்யா. போய் உன் வேலைய பார்."

"அது எனக்கு தெரியும். பணத்துக்காக நீயும் தினம் ஒருத்தரை கூட்டிகிட்டு வர்றே. ஆனா இந்த சாபம் பிடிச்ச இடத்துக்கு தான் ஒரு வழி பொறக்க மாட் டேங்குது..." என்று அந்த வண்டிக்காரனின் பதிலுக்குள் இருந்து செய்தி கருணாகரனை சற்று நிமிர்த்தியது.

"சாபம் பிடிச்ச இடமா... என்ன சொல்றார் இவர்" - என்று கேட்டான். சவரிமுத்துவுக்கு அந்த வண்டிக்காரன் மேல் கோபம்தான் வந்தது.

"மூடிக்கிட்டு உன் வேலைய பாத்துகிட்டு போய்யா... உன்கிட்ட இப்ப யாராச்சும் வந்து கேட்டாங்களா?" - என்று பாய்ந்தார்.

"நான் இப்ப சொல்லும்போது கோபமாதான் வரும். பாம்பு கடிபட்டு சாகும்போது தெரியும். எனக்கென்ன...?" என்றவன் மாட்டு வாலை முறுக்கவும் மாடும் சிண்டிக் கொண்டு புறப்பட்டது. கிரிதரும் கருணாகரனும் மட்டும் ஒரு மாதிரி ஆகிவிட்டனர்.

"என்ன சார் யோசிக்கிறீங்க... நான் விபரமா எல்லாம் சொல்றேன் சார். முதல்ல இடத்தை பாத்து முடிங்க சார்..."

"அதான் பாத்துட்டோமே... அது என்ன விபரம்... முதல்ல சொல்லுங்க..." - கிரிதர் குரலில் ஒரு கட்டளையே இருந்தது.

"சார் இந்த ஊரே ஒரு காலத்துல ஜமீன்தார் ஒருத்தருக்கு தான் சொந்தமா இருந்தது. இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைச்சு ஜமீனெல்லாம் ஒழியவும் ஜமீன்தாரோட பிடில இருந்த இந்த ஊர் ஜனநாயகப்படி நடக்க ஆரம்பிச்சிடுச்சு. இருந்தாலும் ஜமீன்தார் மேல ஒரு மதிப்பு மரியாதை இன்னிக்கு வரை இருக்கு. இப்ப ஜமீன்தார் உயிரோட இல்லை. அவரோட பேரன் துரைசிங்கம்கறவர்தான் இப்ப இருக்கார். அவரும் சிங்கப்பூருக்கு போயிட்டார். இந்த இடத்துல ஒரு காலத்துல ஒரு பெரிய நாகப்பாம்பு புத்து ஒண்ணு இருந்ததாவும் அதை அப்ப இருந்த ஜமீன்தார் இடிச்சுட்டு அங்க ஒரு கட்டடம் கட்ட ஆசைப்பட்டாராம்.



அந்த புத்தை இடிச்சப்போ அதுக்குள்ள ஒரு ஆண் நாகமும் பெண் நாகமும் இருந்துச்சாம். அந்த பாம்புங்களோட குட்டிங்களும் இருந்துச்சாம்! அதுங்கள எல்லாம் ஜமீன்தார் ஆட்கள் அடிச்சு கொன்னுட்டாங்களாம். அதுல இருந்தே ஜமீன் குடும்பமும் சரிய ஆரம்பிச்சிச்சு. அதுக்கு பிறகு இந்த இடத்துலயும் அவங்களால எதுவும் செய்ய முடியாம போயிடிச்சு..."

- சவரிமுத்து சொன்ன விஷயம் ஏதோ ஒரு காமிக்ஸ் புத்தக கதை போலத்தான் இருந்தது கருணாகரனுக்கு.

"சரி இங்க சாபம் எங்க இருந்து வந்தது - கிரிதரன் இறுக்கிப் பிடித்தார்.

"என்ன சார் அப்படி கேட்டுட்டீங்க செத்துப் போன பாம்புங்கதான் இந்த இங்க எந்த காலத்துலயும் முன்னுக்கு வரகூடாதுன்னு சாபம் கொடுத்துடிச்சின்னு சொல்றாங்க."

"இதெல்லாம் எப்ப நடந்தது?"

"ஒரு ஐம்பது ஐம்பத்து அஞ்சு வருசம் முந்தி சார்..."

"சுதந்திரம் நம்ம நாட்டுக்கு கிடைத்த பிறகு..."

"ஆமாம் சார்..."

"அது சரி... இத்தனை வருஷமாவா அந்த சாபத்துக்கு சக்தி இருக்கு..."

"அது சார்..." சவரிமுத்து மேற்கொண்டு பேச முடியாதபடி தேங்கினார்.

"எதுய்யா.... சொல்லுங்க."

"இல்ல சார்... இரண்டொருத்தர் இந்த இடத்தை வாங்கி உங்களை போலவே பூந்தோட்டம் போட வந்தாங்க. ஆனால் அவங்களை எல்லாம் பாம்புங்க

கடிச்சு செத்துப் போயிட்டாங்க! அதனால ஒரு பய உருவாயிடிச்சுங்க... இதான் விசயம்..."

"ஓ.... அப்ப இந்த இடம் மார்க்கெட் ரேட்டை வி பல மடங்கு மலிவா இருக்கறதுக்குக் காரண இதுதானா?"

- கிரிதரிடம் ஒரு இளக்காரமும் கோபமும் மெல்ல வெளிப்படத் தொடங்கியது.

"என்ன சார் நீங்க...... இந்த மாதிரி விசயங்கள படிச் நீங்களுமா நம்பறீங்க?"

"இப்ப அது விஷயமில்ல... இந்த விஷயத்தை நீங்க ஏன் இந்த இடத்தைப் பத்தி சொல்லும்போதே சொல்லலை?"

"நீங்க இடத்தை பாத்த பிறகு சொல்வோம்னு நினைச்சேன் சார். அதோட நான் இதை எல்லாம் நம்பத்தயாரா இல்லை. இவ்வளவு நல்ல இடம் இந்த கட்டுக்கதையாலயே பாதிக்கு பாதி குறைஞ்சு போச்சு. துணிஞ்சு நீங்க வாங்குனா பொன்னா கொழிக்குங்க இது உறுதி..."

- சவரி முத்து குரலில் ஒரு அழுத்தமும் தீர்க்கமும் வெளிப்பட்டது. கிரிதர் பார்வை அடுத்து கருணாகரன் பக்கம்தான் சென்றது.

காற்று குசுகுசுவென்று வீசியபடி இருந்தது.

குளிர்மானி இருந்து அளர்ந்து பார்த்தால் ஒரு இருபது டிகிரி செல்ஷியஸ் இருக்கலாம். அந்தக் காற்றில் கருணாகரனின் சுருண்ட தலைமுடி பட படத்தபடி இருந்தது.

"சார்..." - கிரிதரன் குரல் கலைத்தது.



"சொல்லுங்க கிரி..."

"என்ன சார் பண்ணலாம்?"

"நீங்க சொல்லுங்க. என்ன பண்ணலாம்?"

"நானா சார் பணம் கொடுக்கப் போறேன் நீங்க தானே?"

"நீங்க கொடுக்கப் போறதாவே நினைச்சு சொல்லுங்க..."

"அப்படின்னா வேண்டாம் சார்..... திரும்பப் போயிடலாம்."

- கிரிதர் சட்டென்று ஒரு முற்றுப்புள்ளி வைத்தது சவரிமுத்துவைத்தான் குத்தியது போல் இருந்தது.

"என்ன சார் நீங்க.... சார் கேட்டதுக்கு தைரியமா வாங்குங்கன்னு சொல்லாம... இந்த சுத்து வட்டாரத்து லயே இப்படி பன்னெண்டு கிணறுங்களோட வாய்க்கால் பாசனத்தோட ஒரு இடம் கிடைக்கவே கிடைக்காதுங்க சார்..."

"மிஸ்டர் சவரிமுத்து கொஞ்சம் வாயை மூடுங்க... உங்களுக்கு லட்சக்கணக்குல கமிஷன் கிடைக்கறதுங் கறதுக்காக ஒரு வில்லங்கம் புடிச்ச இடத்துல நாங்க கஷ்டப்படணுமா?"

- கிரிதர் படுகோபமாக பாய்ந்தார்.

"வில்லங்கமா... சார் சுத்தமான பத்தரம் சார். எத்தனை வருஷத்துக்கு வேணா வில்லங்கம் போட்டு பாத்துக்குங்க..."

"நான் ஒண்ணும் அந்த வில்லங்கத்தை சொல்லல..."

"வேற எதை வில்லங்கம்னு சொல்றீங்க?"

"இந்த இடத்தை வாங்க வந்த இரண்டு பேர் பாம்ப- கடிச்சு செத்து போனாங்கன்னு சொன்னீங்கல்ல?"

"சார்... அது ஒரு தற்செயலான விசயம் சார். அந்- விசயமே வேற சார்."

"போதும்..... இடம்கறது எங்க வரைல ரொம்ப- பெரிய விஷயம். அது எவ்வளவு விலை வேணா- விக்கலாம். அதுல பணம் ஒரு விஷயம் கிடையாது- மத்தபடி அது ராசியான இடமாவும், நல்ல நீர் ஆதாரத்- தோட இருக்கறதும்தான் எங்க வரைல முக்கியம்."

"இங்க தான் நல்ல நீர் ஆதாரம் இருக்குங்களே...?"

"அது போதாது.... இந்த மண் மேல நாகங்களோட சாபம் இருக்குன்னு தெரிஞ்சு இதை வாங்கிட்டு அவஸ்தைப்பட நாங்க தயாரா இல்லை."

- கிரிதர் வெகு தீர்க்கமாக பேசினார். அதே வேகத்தில், "வாங்க சார் நாம திரும்பிப் போயிடலாம்..." என்று கூறவும் கருணாகரன் சிரித்தான்.

"என்ன சார் சிரிக்கிறீங்க?"

"கிரிதர்.....நீங்க ஒரு சென்டிமென்டான ஆளுங்கறத நிரூபிச்சிட்டீங்க..."

"என்ன சார் சொல்றீங்க?"

"உங்களை டெஸ்ட் பண்ணத்தான் உங்களையே முடிவெடுக்கச் சொன்னேன். ஆனா நீங்க இவ்வளவு பிற்போக்கா யோசிப்பீங்கன்னு நான் எதிர்பார்க்கல."

- கருணாகரரின் பேச்சு சவரிமுத்துவுக்குள் ஒரு புதிய தெம்பை அளிக்கத் தொடங்கியது.

"அப்ப இதை வாங்கறது தான் உங்க முடிவா சார்."



"டெஃபனட்லி.... மிஸ்டர் சவரிமுத்து. நீங்க உங்க ஜீப்புல முன்ன போங்க. நாங்க அப்படியே ஃபாலோ பண்ணிக்கிட்டே வரோம். ஆமா ஜமீன்தார் துரைசிங்கம் இப்ப இங்க இருக்காரா இல்லை சிங்கப்பூர்ல இருக்காரா?"

"ஊர்ல அவங்க மாளிகைலதான் இருக்கார் சார்..."

"அவரையும் பாத்து இன்னிக்கே அட்வான்ஸும் கொடுத்துடலாம். ஆனா ஒரு கண்டிஷன்.

"என்ன சார்..."

"நீங்க சொல்லியிருக்கிற ரேட்டை விட இன்னும் 15% குறைச்சுக்கணும்..."

- கருணாகரன் இது தான் சாக்கு என்று விலையை குறைக்கவும் சவரிமுத்துவின் முகம் ஒரு மாதிரி சுணங்கியது. நடக்க இருப்பதை கவனித்தால் போதும் என்று கிரிதர் வாய்மூடி மௌனியாகிவிட்டார்.

"சார்..... இதுக்கு ஜமீன்தார் துரைசிங்கம் ஒத்துக்கணுமே சார்..."

"ஒத்துக்கிட்டா இடம் என்னுடையது. இல்லாட்டி அவரோடது...."

"சரி சார்.... வாங்க பேசிப் பார்ப்போம்" என்ற சவரிமுத்து தன் சகாவோடு ஜீப்பில் ஏறிக்கொள்ள ஜீப் நாகனாங்குறிச்சி நோக்கி ஓடத் தொடங்கியது!

# 2

'அரவம் எனில் அச்சம் -
அரவமே
அச்சத்தில் உச்சம்
படையும் இதன் முன்
நடுங்கும் - வீரர்
தொடையும் இதைக்காண
நடுங்கும்....'

**நா**கனாங்குறிச்சிக்கான மண் சாலை வளைந்து வளைந்து சென்றது. இருபுறமும் கத்தாழைகளும், முட்செடிகளும் மண்டிக் கிடந்தன. நடுநடுவே பாம்புப் புற்றுகளும் கண்ணில் பட்டன. சில புற்றுகள் ஒரு சிறு வீடு போல பதினைந்து இருபது அடிகளெல்லாம் இருந்தன.

கருணாகரனுக்கு அந்த மாதிரி காட்சிகளே புதிது... ஒரு கிலோ மீட்டர் தூரம் வந்துவிட்ட நிலையில் ஓடை ஒன்று குறுக்கிட்டது. ஓரளவு அதில் தண்ணீரும் ஓடிக் கொண்டிருந்தது. அந்த ஓடைக்கரையில் நிறைய விதம்விதமான பூச்செடிகள்... அந்த பூச்செடிகளுக்கு அப்பால் உள்ள நிலப்பரப்பில் வரிசையாக குடிசைகள். குடிசைகளுக்கு முன்னால் நண்டும் சிண்டுமாய் ஏராளமான சிறு பிள்ளைகள்! சரிபாதி பேருக்கு மேல் நிர்வாணமாகத்தான் இருந்தனர். சில சிறுமிகள் மட்டும் பாவாடை மட்டும் உடுத்தியிருக்க சிறு சிறுவர்கள் ஒரு பெரியவர் அணியும் பனியனையே கீழுக்கான மறைப்புமாக அணிந்திருந்தனர். அந்த பனியனெல்லாம் கூட அங்கங்கே ஓட்டை விழுந்து அரதப் பழசாக இருந்தது.



ஆனால் அந்த பிள்ளைகள் உற்சாகமாக விளையாடிக் கொண்டிருந்தனர். அதில் ஒரு பத்து வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் ஒரு பருமனான ஆறடி நீளமுள்ள பாம்பு ஒன்றை கழுத்தின் மேல் மாலை போல் போட்டுக் கொண்டு அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்தான்.

அதை பார்க்கவும் கருணாகரனுக்கு சற்று குபீர் என்று வியர்த்தது. கிரிதரும் விக்கித்துப் போனார்.

"என்ன கிரிதர் இது.... இவங்கள்ளாம் யாரு?"

"தெரியலியே சார்.... சவரிமுத்து கிட்டையே கேட்போம் சார்..."

"பாக்க பழங்குடி மக்கள் மாதிரி இருக்காங்க.... அதுவும் நாம வாங்கப்போற நிலத்துல ரோட்டோரமா குடிசை போட்டு உட்கார்ந்திருக்காங்க. என்க்ரோச்மென்ட்டா இருக்குமோ?"

"இருக்கலாம் சார்... இல்லன்னா இவ்வளவு மலிவான விலைக்கு இடத்தை விக்க ஜமீன்தார் முன் வருவாரா?"

"நாம வாங்கற பட்சத்துல இவங்களை எல்லாம் காலி பண்ண வெச்சா தான் பணம் தருவோம்னு சொல்லிடணும்." ஓடிக் கொண்டிருந்த காருக்குள் கருணாகரன் சொன்ன பதில் கிரிதரை யோசிக்க வைத்தது.

"என்ன கிரிதர்?"

"இல்ல சார்...... நீங்க வாங்க முடிவு பண்ணிட்ட மாதிரிதான் என் மனசுக்கு படுது.."

"அஃப்கோர்ஸ்.... நீர்வளம் இருக்கு..... க்ளைமேட்டு ரொம்ப நல்லா இருக்கு. விலையும் ரொம்ப மலிவு. இ எப்படி கிரிதர் விடச் சொல்றீங்க?"

"கூடவே பாம்போட சாபம் - என்க்ரோ மென்ட்டுங்கற ஆக்ரமிப்புன்னு தலைவலிகளு இருக்கே?"

"இந்த சாபத்தை தூக்கி உடப்புல போடுங்க. அ எல்லாம் நான் நம்பத் தயாரா இல்லை. என்க்ரோ மென்ட் ரியலா ஒரு பிராப்பளம்தான். இதை தீர்த் தரவேண்டியது ஜமீன்தார் பொறுப்பு..."

- இருவரும் பேசிக் கொண்டபோது ஒ மொபட்டில் ஒருவர் நடுரோட்டில் நின்றபடி இருந்தா மொபட்டின் டயர் பஞ்சராகி விட்டிருந்தது.

அங்கே கார் தேங்கி நின்றது.

கிரிதர் எட்டிப் பார்த்து கத்தினார்.

"யாருப்பா அது.... கொஞ்சம் ஒதுங்கி நிற்கலாம்ல?

"கியர்ல சிக்கிக்கிச்சுங்க. இறங்கி வந்து ஒரு கொடுங்க. அப்படியே தூக்கி வெச்சுடலாம்" - என்றா அவர்.

ஒற்றை நாடி தேகம். எட்டு முழ வேட்டி கட்டி முழுக்கை சட்டை போட்டிருந்தார். காலில் டய செருப்புகள். நெற்றியில் மிக திருத்தமாக போட்டிருந் விபூதிப்பட்டை.... கிரிதருக்கு அவர் தோற்றமே சற்று நாகரீகமாக தோன்றியது. இறங்கி உதவி செய்யு படியான முகபாவனைகளோடு கார் டிரைவரை பார்க்கவும் அவன் இறங்கிச் சென்று உதவி செய்தான்.

மொபட்டும் ஓரமாக ஒதுங்கிட பாதையில் வழ கிடைத்தது.



அப்போதுதான் சவரிமுத்துவின் ஜீப் எப்படி அவரை கடந்து போயிற்று என்கிற கேள்வியும் எழும்பியது. அதற்கு அவரிடம் இருந்தே பதில் வந்தது.

"ஒரு ஜீப்காரர் இடிக்காத குறையா என்னை கடந்து போயிட்டாரு. ஆனா நீங்க இறங்கி வந்து உதவி செஞ்சிருக்கீங்க. உங்களுக்கு என் நன்றி..." என்றார்.

அவர் நன்றி சொன்னவிதமே அவருக்குள்ள ஒரு பண்பையும் வெளிக்காட்டவும் கருணாகரனுக்கு அவரிடம் பேச வேண்டும் போல தோன்றியது.

"சாருக்கு இந்த ஊர் தான் சொந்த ஊரா?"

"ஆமாங்க.... நான் இந்த நாகனாங்குறிச்சியிலேயே பிறந்து வளர்ந்தவன். கிருஷ்ணகிரியில் ஒரு பள்ளிகூடத்துல தமிழாசிரியரா இருக்கேன்."

"இங்க இருந்து கிருஷ்ணகிரி ரொம்ப தூரமாச்சே?"

"தூரம்தான்... தினமும் பஸ்ல போய்டுவேன்... மெயின்ரோடு வரை இந்த மொபட்ல போய் இதை அங்க போட்டுடுவேன். இதுக்கும் வயசாயிடுச்சு. 1996 ஆம் வருஷ மொபட் இது..."

"ரொம்ப ஆச்சரியமா இருக்கு..... பைதபை இப்ப இந்த மொபட்டை எப்படி எடுத்துக்கிட்டு போவீங்க...?"

"ஏதாவது மாட்டுவண்டி வரும். தூக்கி போட்டுகிட்டு போக வேண்டியதுதான்.."

"உங்க பேர்?"

"என் பேர் நாகேஸ்வரன்... ஆமா நீங்கல்லாம் யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?"

"தாராளமா... என் பேர் கருணாகரன்! பைவ் ஸ்டார் என்டர்பிரைசஸ்னு ஒரு கம்பெனி நடத்தறேன். அது போக ஷேர் பிசினசும் பண்றேன். எங்க கம்பெனி சார்பா இந்த ஊர்ல ஒரு பூந்தோட்டம் போட்டு பூக்களை உற்பத்தி பண்ணி எல்லா இடத்துக்கும் ஏத்துமதி செய்யலாம்னும் ஒரு இடம் இருக்கு.."

"ஓ.... அப்ப ஜமீன் இடத்தை வாங்க வந்துருக்கீங்களா?" - அந்த தமிழாசிரியர் வேகமாய் விஷயத்துக்கு வந்துவிட்டார்.

"ஆமாம்.... உங்களுக்கு ஜமீன்தாரை தெரியுமா?"

- கருணாகரனும் அவரிடம் விஷயத்தை வாங்கத் தொடங்கினான்.

"ஏன் தெரியாம.... அதுலயும் இப்ப இருக்கற ஜமீன்தார் துரைசிங்கம் என் பால்ய ஸ்னேகிதன். நானும் அவனும் ஒண்ணாதான் பள்ளிப் படிப்பை முடிச்சோம்..."

"அடடே... ஆமா எதனால இப்படி இவ்வளவு பெரிய இடத்தை அவர் எதுவுமே செய்யாம வெச்சிருக்காரு?"

"ஏன்... உங்களுக்கு இது பத்தி நிஜமா எதுவும் தெரியாதா?"

"ஏதோ சாபன்னு கேள்விப்பட்டோம். ஆனா அதை எல்லாம் நம்ப முடியல..."

"அப்ப உங்களுக்கு கடவுள் நம்பிக்கை இல்லையா?"

"கடவுள் நம்பிக்கைக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?"

"அவங்கதான் இப்படி எல்லாம் பேசுவாங்க..."



"இந்த சாபத்தை நம்பாதவங்கள நீங்க நாத்திகன்னு நினைச்சா நானும் ஒரு நாத்திகன்தான்..."

"எதுக்கும் நல்லா யோசிச்சுக்குங்க..."

"எதை பத்தி?"

"ஜமீன்தாரோட இடத்தை பத்திதான் சொன்னேன்..."

"நான் இங்க தோட்டம் போட்டா உங்க ஊர் ஆட்களுக்கு தான் வேலை கொடுப்பேன். அதனால உங்க ஊர் தான் டெவலப் ஆகும். ஆனா நீங்க யோசியுங்கன்னு சொன்ன எப்படி... நீங்க தான் யோசிக்கணும்..."

"அப்புறம் உங்க இஷ்டம்...?"

- அந்த தமிழாசிரியர் பெருமூச்சு வெளியேறச் சொன்னபோது முன்னதாக சென்றுவிட்டிருந்த சவரிமுத்து போன ஜோரில் ஜீப்பில் திரும்பி வந்து கொண்டிருந்தார்.

"என்ன சார் இங்க நின்னுட்டீங்க... நான் ஊருக்குள்ள போய்ட்டு திரும்பி பாத்துட்டு நீங்க வரலேன்னு தெரிஞ்சு திரும்பி வந்துருக்கேன்..."

"சாரி... இவருக்கு கொஞ்சம் உதவி செய்யப் போய் லேட் ஆயிடிச்சு. அப்ப தமிழாசிரியரே நாங்க வர்றோம்..."

"பாத்து போய்ட்டு வாங்க..."

- அவரும் அச்சம் விலகாமலே விடை கொடுத்தார். கருணாகரனிடம் ஒரு புது உற்சாகம் தெரிந்தது. ஆனால் கிரிதர் நடக்க நடக்கப் பார்ப்போம் என்பது போல இருந்தார்.

சவரிமுத்துவும் ஜீப்பை அப்படியே திருப்பி முன் போலவே முன்னே செலுத்த தொடங்கினார். கருணாகரனின் வெண்ணிற கார் ஜீப்பை பின்தொடரத் தொடங்கியது!

# 3

'உயிரோடு உண்ணுவது
இயல்பு - சிறு
உயிர்களையே
விழுங்குதே பாம்பு!
கயிறாக காட்சிதரும்
சர்பம் - கொன்றாலோ
உயிருக்குள் ஊடுருவும்
சாபம்...'

வேகமாய் சென்று கொண்டிருந்த சவரிமுத்துவின் ஜீப் ஒரு இடத்தில் கிரிச்சிட்டு நின்றது. பின்தொடர்ந்து சென்ற கருணாகரனின் காரும் நின்றது.

சவரிமுத்து ஜீப்பை விட்டு இறங்குவதைப் பார்த்து கருணாகரனுடன் கிரிதரும் இறங்கினர். அவரையும் நெருங்கினர். அப்போது அவர்கள் கண்ட காட்சியில் கண்கள் விரிந்தது.

அந்த மண் சாலை நடுவில் ஒரு நல்ல பாம்பு படம் விரித்தபடி காட்சி தந்தது. பெரிய பாம்பு... கிட்டத்தட்ட 10,12 அடி நீளமிருக்கும்.

ஒண்ணரை அடி உயரத்திற்கு தலையை உயர்த்திக் கொண்டு அச்சமூட்டுவது போல பார்த்தது. சாலையின் ஒரு பக்கத்தில் ஒரு பெரிய புற்று. அதனுள் இருந்துதான் வந்திருக்க வேண்டும்.



"என்ன சார்... இப்படி நின்னா என்ன அர்த்தம்? ஜீப்பை எடுங்க ஓரமா நாம போற வழிய பாப்போம்..."

"அதுக்கில்ல சார்... எவ்வளவு தைரியமா பாக்குது பாருங்க. இந்த ஜீப்பை அப்படியே இது மேல ஏத்துனா சட்னி ஆயிடும். ஆனா அந்த பயமே இல்லை பாருங்க.."

"அது சரி.... நாம ஒதுங்கிப் போவோம். நீங்க ஜீப்பை எடுங்க."

"அட என்ன சார் நீங்க... ஒரு விஷப் பூச்சிக்கு பயந்து நாம ஒதுங்கிப் போறதா... பாருங்க வேடிக்கையை..."

- சவரிமுத்து சொன்ன சூட்டோடு தன் ஜீப்பில் ஏறிக் கொண்டு ஜீப்பையும் வெகு வேகமாய் எடுத்தார். கிரிதருக்கு புரிந்து விட்டது.

அடுத்த சில நொடிகளில் அந்த பாம்பு இருந்த இடத்தில் தரையோடு தரையாக அது சிதைந்து போயிருந்தது.

"இது தப்பு சார்.... ஒதுங்கிப் போயிருக்கலாம்..." - என்றார் கிரிதர்.

"அந்த பாம்புக்கும் இந்த தைரியம் ஆகாது கிரிதர். சரி சரி நாமளும் ஃபாலோ பண்ணுவோம்..."

- பின் அந்த வெள்ளைக்காரும் பின்தொடரத் தொடங்கியது.

நாகனாங்குறிச்சி - ஊர் தொடக்கத்தில் ஒரு சிதைந்து போன பெயர் பலகை. அதை கடந்து ஊருக்குள் ஜீப்பும் காரும் நுழைவதை ஊருக்குள் பலர் ஆச்சரியமாக பார்த்தனர்.

ஓரளவு பெரிய ஊர் தான்... எல்லா வீடுகளும் கூட தார்சு கட்டிடம் தான்... ஊருக்குள் தெருக்களில்

சிமெண்ட் சாலை போடப்பட்டிருந்தது. சவரிமுத்துவி
ஜீப் புகுந்திருந்த தெருவுக்கு சிங்கராயர் தெரு என்
பெயர்... வளைந்து திரும்பிய அடுத்த தெருவுக்கு பெய
வேங்கைராயர் தெரு!

"இங்க என்ன தெருப் பெயரெல்லாம் ராஜா
பெயரா இருக்கு?"

"அனேகமா ஜமீன்தார் குடும்பத்த சேர்ந்
வங்களா இருக்கலாம்."

- கருணாகரனும், கிரிதரும் தங்களுக்குள் கூறி
கொண்டனர்.

எல்லா வீடுகளின் முகப்பிலும் வாசலுக்கு மே
பாம்புகளின் உருவங்கள் வார்க்கப் பட்டிருந்தன
சில வீட்டு கதவுகளில் கூட பாம்பு உருவங்கள் செதுக்கப்
பட்டிருந்தன.

"நாகனாங்குறிச்சிங்கற பேருக்கு ஏற்ப எங்க
பார் பாம்பா இருக்கு. பாம்புக்கும் இந்த ஊருக்கும்
அப்படி என்னதான் தொடர்போ தெரியல..." என்று
கருணாகரன் சிலாகித்துக் கொண்டான்.

முன்னால் சென்று கொண்டிருந்த ஜீப் இடது
பக்கம் திரும்பி ஒரு பெரும் மதில் சுவரை ஒட்டி நின்றது

கருணாகரனின் காரும் நின்றது. காரை விட்டு
கருணாகரன் இறங்கவும் கொலுசு சப்தம் அவன்
காதுகளை தீண்டவும் சரியாக இருந்தது. சப்தம் வந்த
திசையை பார்த்தான். அழகுப் பதுமையாக ஒரு
இளம் பெண் ஒல்லியான ஒற்றை நாடி தேகம். இடுப்பை
தொட்டுவிட்ட கூந்தல். ரத்தச் சிவப்பு சேலை உடுத்தி
யிருந்தாள். பால் வெளுப்பு இருந்த அவள் உடலமைப்
புக்கும் அந்த சிவப்பு புடவைக்கும் ஒரு அசாத்ய கவர்ச்சி



இருந்தது. அவள் முகத்திலும் நல்ல திருத்த அவயவங்கள் ஒவ்வொன்றும் அளகு செய்ததுபோல் இருந்தது.

கருணாகரன் எவ்வளவோ பெண்களை பார்த்திருக்கிறான். ஆனால் மின்னலுக்கு பிறந்த மாதிரி தெரிந்த அந்த பெண்ணை பார்க்கவும் அவன் மனதுக்குள் ஒரு பெரும் கிளர்ச்சி.

அந்த பெண்ணின் கையில் பூக்கூடை போல் ஒன்று இருந்தது. அதில் தேங்காய் பழம் என்று பிரசாதங்கள். அனேகமாக கோயிலுக்கு போய்விட்டு வந்திருக்க வேண்டும்.

அவளும் கருணாகரனை வைத்த கண் வாங்காதபடி பார்த்தாள். பின் மெல்லிய ஒரு புன்முறுவலுடன் தலையை தாழ்த்தி கொண்டு மதில் சுவற்றை ஒட்டிய வாயில் வழியாக உள் செல்லத் தொடங்கினாள்.

கருணாகரனின் திகைத்த நிலையை சவரிமுத்துவும் கிரிதரும் கவனித்தபடியே அருகில் வந்தனர்.

"என்ன சார் ஸ்டன்னாயிட்டீங்க... ஜமீன்தாரோட மூத்த பொண்ணு பூர்ணிமா தேவி சார்..." என்றார் சவரிமுத்து.

"மூத்த பொண்ணா...?"

"ஆமா சார்.... முப்பத்தியொரு வயசாகுது. இன்னும் கல்யாணம் ஆகலை."

"கல்யாணமாகலையா?" - என்று திருப்பிக் கேட்டதில் அவனிடம் ஒரு சந்தோஷம் பீறிட்டது.

"வாங்க போகலாம்... இதுதான் நாகனாங்குறிச்சி ஜமீன் பங்களா.... மதில் சுவரெல்லாம் கோட்டை மதில் கணக்கா எப்படி இருக்கு பார்த்தீங்களா?"

- சவரிமுத்து விளக்கத்தோடு அழைத்துச் செல்லத் தொடங்கினான்.

மதில் சுவரை கடந்து உள்ளே இருபுறமும் பூந்தோட்டம் நடுவில் சிமெண்டு பூசிய சாலை. ஒரு நூறடி நீளமிருந்த சாலையின் முடிவில் பிரம்மாண்டமாய் காட்சி தந்தது பங்களா!

அந்த பங்களா முகப்பில் ஒரு ஐந்து தலை நாகம் படம் விரித்து நிற்பது போல் பங்களாவின் நெற்றியில் காரையிலேயே வடிவமைக்கப்பட்டிருந்தது. அந்த நெற்றிக்கு அப்படி சில அடிகள் மேலே பால்கனி. அந்த பால்கனியில் ஜமீன்தார் துரைசிங்கம் நின்று கொண்டிருந்தார்.

சிமெண்ட் தளத்தின் மேல் சவரிமுத்துவோடு கருணாகரனும் கிரிதரும் வருவதைப் பார்த்தார். துரைசிங்கமும் அவரைப் பார்த்து விட்டு கையசைத்தார்.

அவரது மூத்த மகள் என்று துரைசிங்கத்தால் கூறப்பட்ட சிவப்பு சேலையணிந்த பெண் இப்போது அவர் இருக்கும் இடத்திற்கே சென்று பிரசாதத்தையும் அவரிடம் தந்தபடி இருந்தாள்.

"அவர்தான் ஜமீன்தார் துரைசிங்கம்..." - என்ற சவரிமுத்து கருணாகரனையும் கிரிதரையும் பங்களாவுக்குள் அழைத்துச் சென்றார்.

உள்ளே செல்ல படிகளில் ஏறிய போது படிகளின் இருபுறமுள்ள கைப்பிடி சுவர் கூட ஒரு அனகோண்டா பாம்பை நினைவு படுத்துவது போல அந்த உருவம் மேல் பக்கம் தெரியும்படி வடிவமைக்கப்பட்டிருந்தது.

உள்ளே சென்று விஸ்தாரமான பிரம்மஸ்தான பாகத்தில் உள்ள சோபாவில் மூவரும் அமர்ந்து கொள்ள



பால்கனியை விட்டு ஜமீன்தார் துரைசிங்கமும் இறங்கி வந்து எதிரில் அமர்ந்தார். பார்க்க அத்தனை வசீகரம் இல்லை. கண்களில் ஒரு சோகம் தெரிந்தது. கருணாகரன் அதை தான் முதலில் உணர்ந்து கொண்டான்.

"வணக்கம் சார்..... சார் பேர் தான் கருணாகரன். ஃபைவ் ஸ்டார் என்டர்பிரைசஸ்னு ஒரு கம்பெனி நடத்தறார். நம்ம இடத்தையும் வாங்கி பூந்தோட்டம் போட விரும்பறார்." - என்று சவரிமுத்துவும் அறிமுகத்தோடு காரண காரியத்தையும் சொல்லி முடித்தார்.

ஜமீன்தார் துரைசிங்கத்தின் பார்வை கருணாகரனை ஊடுருவத் தொடங்கியது. கூடவே இருந்த கிரிதரையும் ஒரு பார்வை பார்த்தார். அப்போது மீண்டும் கொலுசின் ஓசை! அவர் மகளான பூர்ணிமா தேவி பக்கவாட்டில் மாடியில் இருந்து இறங்கி ஒரு அறை நோக்கி சென்றபடி இருந்தாள். அதை பார்த்த சவரிமுத்து அடுத்த நொடி கருணாகரனைத்தான் பார்த்தான்.

கருணாகரனும் பூர்ணிமா தேவி மேலேயே கண்ணாக இருந்தான். அதை கவனித்த துரைசிங்கமும் ஒரு முடிவுக்கு வந்தவர் போல.

"அம்மாடி கொஞ்சம் இப்படி வா - என்று அழைத்தார். அவளும் அவர் அருகில் சென்று நின்றாள்.

"இது என் பொண்ணு... பேர் பூர்ணிமா தேவி" - என்று கருணாகரனுக்கும் அறிமுகம் செய்து வைத்தார்.

கருணாகரன் நவீன முறையில் ஒரு 'ஹாய்' என்றான். அவளும் பதிலுக்கு ஹாய் என்றாள்.

"சரிம்மா நீ போய் உன் வேலையை பார்..." என்றார்.

அவளும் விலகிடத் தொடங்கினாள்.

சவரிமுத்துவும் வந்த விஷயத்தை பேச தொட னார்.

"ஐயா... வர்ற வழியிலேயே நம்ம நிலத்தை இவ களுக்கு காட்டிட்டேன் அப்படியே நிலத்தை இவ ஊருக்குள் இருக்கற பேச்சையும் சொல்லிட்டே ஏன்னா நான் மூடி மறைச்சு இவங்க தலைல இடத் கட்ட பார்த்தேன்னு யாரும் சொல்ல கூடாது பாருங்

"சவரிமுத்து.... இந்த மாதிரி நீங்க பல தடவை ப பேரை கூட்டிகிட்டு வந்து பேசிட்டீங்க. ஆனா விஷய தான் முடிய மாட்டேங்குது. எனவே எதைப்பத்தியு பேசாம விஷயத்துக்கு வாங்க..."

"இல்லீங்க... இந்த தடவை கட்டாயம் விஷய நல்லபடியா முடிஞ்சிடுங்க. தம்பி கருணாரகன் ரொம் முற்போக்கானவர். இந்த சாபம் பாவத்து மே எல்லாம் நம்பிக்கை இல்லாதவர்... அதை அவ சொல்லிட்டாரு..."

கருணாகரன் சார் நீங்களும் சொல்லுங்க."

"ஆமாங்க... நான் இந்த சாபக் கதையை எல்லா நம்பத் தயாரா இல்லை. கையாலாகாதவங்கதான் சாபம், பாபம்னு எதையாவது பேசுவாங்க. பை த பை மிஸ்டர் சவரிமுத்து இடம் வாங்க நான் தயாரா இருக்கறத சொன்னார். அவர் சொல்ல மறந்துட்ட இரண்டு விஷயங்கள நான் சொல்ல விரும்பறேன்..."

"என்ன தம்பி அது....? எதுவா இருந்தாலும் சொல்லுங்க...?"

"வர்ற வழில இடத்தை பார்த்தபோது ஆக்ர மிப்புகளை பார்த்தேன். அவங்கள நீங்க தான் அகற்றித்



தரணும். அடுத்து இப்ப சொல்லியிருக்கற விலையில் இருந்து இன்னும் ஒரு பதினைஞ்சு பர்சன்ட் குறைச் சுக்கணும்." - கருணாகரன் நேரடியாக வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்கிற மாதிரி பேசி முடித்தான். துரைசிங்கமும் யோசிக்கத் தொடங்கினார்.

சவரிமுத்துவுக்கோ விஷயம் முடிந்து விடும்போல தோன்றியது.

தனக்குத்தானே ஏசுவே என்று சிலுவை போட்டுக் கொண்டு கட்டை விரல் நுனியை முத்தமிட்டுக் கொண்டார். ஜமீன்தார் சம்மதித்தால் கிட்டத்தட்ட நாற்பது ஏக்கர் இடமும் ஒரே கைக்கு மாறிவிடும். ஒரு ஏக்கருக்கு மார்க்கெட் விலை பத்து லட்சம் போகிறது.. ஜமீன்தார் ஐந்து லட்சம் சொல்கிறார். அதையும் குறைத்து மூணரை லட்சத்துக்கு கேட்கிறான். நாற்பது ஏக்கருக்கு ஒரு கோடியே நாற்பது லட்ச ரூபாய் விலையாகிறது. அதற்கு இரண்டு பர்சன்ட் கமிஷன் என்றாலும் இரண்டு லட்சத்து எண்பதாயிரம் ரூபாய்... ஏசுவே இந்த பிசினஸ் நல்லவிதமா முடிய வேண்டும்...! என்று மனமுருக பிரார்த்தனை செய்து கொண்டார்.

ஜமீன்தாரும் நிமிர்ந்தார்.

"யெஸ் மிஸ்டர் கருணாகரன்... உங்க கோரிக் கையை நான் ஏத்துக்கறேன். அந்த ஆக்ரமிப்பை பத்தி கவலைப்பட வேண்டாம். அவங்கள இடத்தை காலி பண்ணுங்கன்னா பண்ணிடுவாங்க. ரொம்ப காலமா இருக்காங்க... மறுத்தாக்கா போலீசுக்கு போய் சட்டப் படி என்ன நடவடிக்கை எடுக்கணுமோ அதை எடுப் போம். பை த பை உங்களுக்கு நானும் ஒரு கண்டிஷன் போட விரும்பறேன்.

- துரைசிங்கம் என்ன சொல்ல போகிறாரோ என்
ஒரு பயம் சவரிமுத்துவிடம் தெரிந்தது.

“இந்த இடத்துக்கான தொகையை நீங்க ஒன் டை
செட்டில்மென்ட்டா கொடுத்துடனும். அதையும் அ
பட்சம் பத்து நாளைக்குள்ள முடிச்சு கொடுத்துடனு
ஏன்னா நான் என் மகளோட சிங்கப்பூருக்கு அவசர
போயாகணும். இந்த இடத்தை கொடுத்துட்டா இ
பங்களாவையும் நான் வித்துடுவேன். இந்த ஊர்ல நா
வாழ்ந்தது போதும்னு நினைக்கிறேன்...” என்றார்.

“அப்ப இந்த பங்களாவையும் விக்கப் போறீ
களா?”

- என்று ஆவலாய் கேட்டான் கருணாகரன்.

“ஆமாம்.... இவ்வளவு பெரிய பங்களா இனி எங்
ளுக்கு எதுக்கு? அதிகார பலத்தோட ஆனை கட்
போரடிச்சோம். இந்த ஊரே ஒரு காலத்துல எங்
ளுடையதா தான் இருந்தது. ஆனா இப்ப அதிகாரமு
போய் எல்லாமும் போயிடிச்சு. என் மகளுக்கு ஒ
கல்யாணம் பண்ணிட்டா என்னுடைய கடமையு
முடிஞ்சிடும்... இடத்தை வித்து வரப் போற பணத்து
தான் நான் கல்யாணம் பண்ணனும். சிங்கப்பூர்
பண்ணிக்கிட்டு இருக்கிற பிசினஸ்லயும் பயங்க
நஷ்டம்...” ஜமீன்தார் துரைசிங்கம் மெல்ல மன
திறந்தார்.

“சாருக்கு அங்க என்ன பிசினஸ்னு தெரிஞ்சுக்
லாமா?”

“தாராளமா... கரும்புச்சக்கைல இருந்து பேப்ப
தயாரிக்கற மில் நடத்தறேன். அந்த மில் முந்தி ஒ
மலேசியாகாரர்கிட்ட இருந்தது. அதை நான் விலைக்கு
வாங்கி நடத்தறேன். ஆனா என்னால அதை லாபகரமா



நடத்த முடியலை. அதனால அங்க எனக்கு கோடிக் கணக்குல கடன்...”

- துரைசிங்கம் பெருமூச்சோடு சொல்லும் போது எங்கிருந்தோ உடுக்கை சப்தம் பலமாய் ஒலிக்க ஆரம்பித்தது. அதைக் கேட்ட நொடி ஜமீன்தார் துரைசிங்கம் முகத்தில் ஒரு மாற்றம்.

வேலைக்காரன் ஒருவனை ‘பீமண்ணா’ என்று பலமான குரலில் அழைத்தார். தடியாய் ஒருவன் ஓடி வந்தான்.

“பூர்ணிமாவை எந்தக் காரணம் கொண்டும் அவ வெளியே வர விடாதே. இங்க என்ன நடந்தாலும் அவ வரக்கூடாது. ஜாக்கிரதை” என்றார். அவனும் ஓடினான்.

துரைசிங்கம் அடுத்து கருணாகரனைப் பார்த்து, “நல்லது மிஸ்டர் கருணாகரன்... எங்க குல தெய்வம் கோயில் பூசாரி வறாரு. நீங்க புறப்படுங்க. ரிஜிஸ்த்ரேஷனை நாளைக்கே கூட வெச்சுக்கலாம். இடத்தோட பத்திர நகல், வில்லங்கம் எல்லாம் உங்கள தேடி வரும். நீங்க யார்கிட்ட வேணும்னாலும் போய் காட்டிக்கலாம்.

இருபத்தி நாலு காரட் தங்கம் மாதிரி இடமும் சொக்கத் தங்கம். அதுல எந்த சட்டச்சிக்கலும் கிடையாது - என்று மளமளவென்று சொல்லி முடிக்கவும் உடுக்கை சப்தம் பங்களா வாசலுக்கே வந்துவிட்டது.

கருணாகரனுக்கு அந்த பேச்சு அவ்வளவு சீக்கிரம் முடிந்ததில் ஒரு ஏமாற்றம். கூடவே துரைசிங்கத்தின் திடீர் மாற்றமும் பதட்டமும் மிகவும் ஆச்சரியத்தை தந்தது.

"சவரிமுத்து... புறப்படுய்யா..." என்று திரும்பவும் ஒருமுறை வேகப்படுத்தினார்.

சவரிமுத்துவும் "சரிங்கய்யா...." - என்ற கருணாகரனுடன் நகரக் காலெடுத்தார். கிரிதருக்கு நடப்பதெல்லாம் ஒரு புதிராகத்தான் இருந்தது!

## 4

'லிங்கம் என்றால்
உலகெலாம் அடக்கம்
ரங்கம் என்றால்
உலகெலாம் பெருக்கம்
சிங்கம் என்றால் வீர தீரம்
அடக்கம்
நாகம் என்றால்...?'

கருணாகரனும் கிரிதரும் பிரம்மாண்ட அந்த பங்களாவின் வாயிற்புறம் வந்தனர். கூடவே சவரிமுத்துவும்...

அவர்கள் எதிரில் புதர் போன்ற தாடி மீசையோடு கையில் உடுக்கையோடு பூசாரி ஒருவர், அவருக்கு அருகில் இருவர். அவர்கள் கைகளில் தீச்சட்டி இருந்து அது புகைந்து கொண்டிருந்தது. அவர்கள் இருவரும் மஞ்சள் துண்டு மட்டும் இடுப்பில் கட்டியிருந்தனர்.

பூசாரி ஒரு விநாடி கருணாகரனையும் கிரிதரையும் பார்த்தார். பின் பார்வை சவரிமுத்து பக்கம் திரும்பியது.

சவரிமுத்துவை பார்த்த நொடி உடம்பெல்லாம் நடுங்கவும் ஆரம்பித்தது. கண்கள் இரண்டும் இடுங்கின.



"ஏய்ய்ய்..." என்றார் உச்சக் குரலில்... சவரிமுத்துவுக்கு சர்வ நாடியும் நடுங்கி விட்டது.

"பாவி... பாவி.... படுபாவி..." என்றார் அடுத்து... உள்ளிருந்து ஜமீன்தாரும் ஓடி வந்து நடப்பதைப் பார்த்தார்.

"ஏண்டா... யானை எதிர்ல வழிமறிச்சா அதை நீ ஏறி மிதிப்பியா...?" - என்று ஒரு கேள்வியும் கேட்டார். சவரிமுத்துவுக்கு புரியவில்லை.

"சர்ப்பம் வழி மறிச்சா மட்டும் அதை மோதிக் கொல்லுவியோ நீ...?"

கருணாகரனுக்கு உடனேயே புரிந்து விட்டது.

கிரிதருக்கு கழுத்தெல்லாம் நசநச வென்று வியர்வை.

"நீ இந்த ஊரை உயிரோட தாண்ட மாட்டே... செத்துப் போனது ஆண் சர்பம்... அதுக்கு பழிவாங்கப் போகுது பெண் சர்ப்பம்... நீ தப்ப முடியாது... தப்பவே முடியாது..." என்றார்.

- ஆவேசமாய் பேசியதாலோ என்னவோ அப்படியே அங்கேயே மயங்கி விழுந்து விட்டார்!

ஜமீன்தார் முகத்திலும் மாறுதல்கள்.

"என்னய்யா.... வழியில பாம்பு ஏதாவது பாத்தீங்களா?"

- என்று சற்று பதட்டத்தோடு கேட்டார்.

"ஆமாம்யா... நடு ரோட்ல ஒரு பாம்பு படம் எடுத்து நின்னுக்கிட்டிருந்துச்சு. விலகும்னு பாத்தோம் விலகலை. ஜீப்பை எடுத்துகிட்டு நான் மட்டும் விருட்டுன்னு வந்துட்டேன்.. அதுல அடிபட்டு செத்து

போயிடிச்சுங்க..." - சவரிமுத்து குரலும் லேசாக த
யடித்தது.

ஆனால் ஜமீன்தார் துரைசிங்கத்திடம் பெரி
எந்த பதிலுமில்லை. என்ன சொல்வது என்பது தெரிய
தவிப்பு மட்டும் முகத்தில் அலையடித்தது.

கருணாகரனுக்கு ரோட்டில் நடந்ததை பூசா
சொன்னது ஆச்சரியமாக இருந்தது.

"கிரிதர்... இங்க நடக்கறதெல்லாம் ஆச்சரிய
இல்லை. ரோட்ல நடந்ததை இந்த பூசாரி எப்ப
கரெக்டா சொல்றாரு?" - என்று காதோரமா
கிசுகிசுத்தான்.

சட்டென்று உதறிக் கொண்டு நிமிர்ந்த ஜமீன்தா
துரைசிங்கம், "சரி மிஸ்டர் கருணாகரன் நீங்
கிளம்புங்க..." என்றார்.

"அப்ப நான் எல்லா ஏற்பாடும் பண்ணிட்டு போ
பண்றேன் சார்."

"பண்ணுங்க... பண்ணுங்க..." என்றவர் சவ
முத்துவை பார்த்து

"நீ போகாதய்யா... இங்கையே இரு" என்றா
சவரிமுத்துக்கு முள் குத்தினாற் போல் இருந்தது.

"ஐயா நான் போகணும்க.. ஊர்ல வேற நிறை
வேலை இருக்குங்க."

"எவ்வளவு வேலை இருந்தாலும் சரி.
போகாதே! இந்த வீட்டுக்குள்ள நீ இருக்கற வ
தான் உனக்கு பாதுகாப்பு. அப்புறமா நான் வெளி
போகும்போது என் கூட வா அப்ப கூட நீ ரொம்
ஜாக்ரதையா இருக்கணும்."



- துரைசிங்கம் சொல்லும்போது பூசாரி மயக்கம் கலைந்து எழுந்துவிட்டிருந்தார். எழுந்த வேகத்தில் துரைசிங்கத்தை பார்த்தார். "யசமான்.." என்று கைகளை மார்புக்கு முன்னால் மிக பணிவாக கட்டிக் கொண்டார்.

மயக்கம் போடுவதற்கு முன்பாக மிக ருத்ரமாக ஆவேச ஆட்டம் போட்டவரா இப்படி என்று ஆச்சரியமாகவும் இருந்தது.

அவரிடம், "இன்னிக்கும் வரும்போதே ஆவேசமா பூசாரி.."

- என்று கேட்டார் துரைசிங்கம்.

"நான் என்னங்க பண்ணுவேன் சாமி இறங்கிட்டா எதுவும் தெரிய மாட்டேங்குது.. இப்ப கூட நான் என்ன பேசுனேன்னே தெரியல..."

"சரி.. உள்ள போய் பாலும் பழமும் சாப்பிடுங்க. நான் வந்துட்றேன்..." என்ற துரைசிங்கம் திரும்பவும் சவரிமுத்துவை பார்த்து "நீயும் உள்ள போய்யா..." என்றார்.

"ஏங்க எனக்கு ஏதாவது ஆயிடும்னு பயப்பட றீங்களா?"

"ஆமாம்... பூசாரி சொன்னதை கேட்டேல்ல?"

"என்னங்க நீங்க... உங்க வீட்டு சாபக் கதையையே நாங்க நம்பலை. இந்த பூசாரி பேசுவதை தானா நம்பப் போறேன்?"

"யோவ் சவரிமுத்து... தயவு செய்து என் பேச்ச கேளுய்யா..."

"அட என்னங்க நீங்க.. எனக்கு எதுவும் ஆகாதுங்க. நான் போய் ரிஜிஸ்தர் ஆபீஸ்ல பத்திரம் எழுதறதுல

இருந்து எவ்வளவோ காரியங்கள் பாக்க வேண்டியிருக்கு அத பாக்கறேங்க..."

"ஆமாம் சார்... அவர் வரட்டும். இவருக்கு தா சர்வே நம்பர்ல இருந்து எல்லாம் தெரியும்."

"அதுக்கில்ல மிஸ்டர் கருணாகரன். நான் என்ன சொல்ல வரேன்னா...?"

"புரியுது சார்... நீங்க இந்த பூசாரி சொன்னதை நம்பி பயப்படறீங்க... ஆண் நாகம் செத்தா பெண் நாகம் பழிவாங்கறதெல்லாம் சினிமாலதாங்க.. நிஜத்துல கிடையாது..."

"இல்ல மிஸ்டர் கருணாகரன்... உங்களுக்கு இந்த ஊரைப் பத்தி சரியா தெரியலை. நான் இங்க இல்லாம சிங்கப்பூருக்கே என் குடும்பத்தோட போயிட்டதுக்கு காரணமிருக்கு. நானும் உங்கள பால யோசிச்ச ஒருத்தன் தான். ஆனா இந்த ஊர்ல நம்ம அறிவுக்கு அப்பாற்பட்ட சில விஷயங்கள் இருக்கு. அதனால நான் பாதிக்கப்பட்டவன். அதனால நான் சொல்றத கேளுங்க..."

"சரி சார்... சவரிமுத்து இங்க உங்க கூட இருக் கேன்னா - இருக்கட்டும். எனக்கு ஒரு சின்ன சந்தேகம்...?

"என்ன...?"

"இல்ல அந்த பெண் நாகம் இங்க உங்க வீட்டுக் குள்ள மட்டும் எதுவும் பண்ணாதா?" - கருணாகரன் கேள்வி துரைசிங்கத்தை சலனப்படுத்தியது.

"எதுவும் பண்ணாது தான் மிஸ்டர் கருணாகரன் நான் இந்த வீட்டுக்குள்ள சர்பக் கட்டுக்குள் இருக்கேன் நீங்க இந்த பங்களாவை ஒரு சுத்து சுத்தி வாங்க புரியும்



என்ற துரைசிங்கம் அடுத்து "பீமண்ணா" என்றார் உரத்த குரலில்.

அந்த தடித்த மனிதனும் ஓடி வந்தான்.

"இவரை வீட்டை சுத்தி கூட்டிகிட்டு போய் காட்டிட்டு வா..." என்றார். அவனும் கருணாகரனை ஒரு பார்வை பார்த்துவிட்டு முன்னால் நடந்தவன் கிரிதருக்கோ விஷயம் எங்கோ செல்வது போல் தோன்றியது மௌனமாய் அவரும் அவனை பின் தொடர்ந்தார்.

பங்களாவுக்கு வெளியில் வந்தவர்கள் அப்படியே வலப்பக்கம் திரும்பினார்கள். அங்கிருந்து வரிசையாக பாத்தி கட்டியது போல செடிகள்.

"ஐயா இதெல்லாம் சிரியா நங்கைங்கற செடிங்க... இதுங்க கிட்ட சர்பம் வராது..." என்றான் அந்த பீமண்ணா.

அப்படியே வலதுபக்கம் முடிந்து பின் பக்கம் திரும்பினார்கள். அங்கே கூரையில் ஒரு அடிக்கு ஒரு அடி இடைவெளியில் துண்டு துண்டாக வேர்களைப் போல ஏதோ ஒன்று தொங்கியபடி இருந்தது.

"ஐயா இதெல்லாம் நாகதாளி வேருங்க... இது இருக்கற இடத்துல்யும் சர்பம் வராதுங்க." அவன் சொன்னபடியே நடந்தான்.

அவன் காலில் கூட ஒரு வேர் துண்டை கட்டியிருந்ததை கருணாகரன் கவனித்தான். இரண்டு காலிலும் கணுக்காலுக்கு மேல் கொலுசு அணியும் இடத்தில் கறுப்பு கயிற்றில் இரண்டு துண்டுகள். அதேபோல கையிலும் முழங்கைக்கு மேல் இரு துண்டுகள்!

"சார்... இங்க நடக்கற எதுவும் எனக்கு சரியா படலை சார். இந்த ஊர்ல இருக்கற இவங்களே இப்படி வேரை கட்டிகிட்டு வாழ்ந்தா நம்ம கதி[...] யோசிச்சு பாருங்க..." - என்று நடக்கும்போதே இ[...] கிசுத்தார் கிரிதர்.

"ஆமாம் கிரிதர்... எனக்கும் மனசுக்கு எதுவு[...] சரியா படலை. விலை மலிவான இடம்னு பார்த்[...] ஏதோ கற்காலத்துக்கே போயிட்ட மாதிரி இருக்[...] ஜமீன்தார் கிட்டயும் நிறைய முரண்பாடுகள். நா[...] பேசாம கிளம்புவோம். இந்த இடம் வேண்டாம்கற[...] சவரிமுத்து மூலமாக அப்புறம் சொல்லி விடுவோம்[...] என்று அங்கேயே தனது முடிவையும் கூறிவிட்டா[...] கருணாகரன்.

பங்களாவையும் ஒரு சுற்று சுற்றி முடிந்தா[...] விட்டது.

ஒரு விஷயம் மட்டும் மிக பிடித்திருந்தது.

பங்களாவின் கட்டுமானம்தான்... கருங்கல் சுவர்கள். தேக்கு மரம் கொண்டு இழைக்கப்பட்ட கூரை. அதில் அந்த நாளைய ஜெர்மன் ஓடுகள்... நிறைய ஜன்னல்கள் இருந்து வெளிச்சமும் காற்றும் கொஞ்சி விளையாடிக் கொண்டிருந்தது.

ஆனால் அத்தனை அற்புத பங்களாவின் பின்புலத்தில் இப்படி அச்சமூட்டும் பாம்பு பயம்... மனதுக்குள் அந்த எண்ணங்களோடு திரும்பவும் ஆரம்பித்த இடத்திற்கே வரவும் ஜமீன்தார் காத்துக் கொண்டிருந்தார்.

"பாத்தீங்களா?"



"பாத்தேங்க... சிரியா நங்கை, நாகதாளி வேர்னு பாம்புகளுக்கு எதிரான விஷயங்கள் இருக்கு. இதெல்லாம் இல்லேன்னா இந்த பங்களாக்குள்ளேயும் பாம்புகள் வந்துடுங்களா?"

- கருணாகரனுக்கு அந்த கேள்வியைக் கேட்க வேண்டும்போல் இருந்தது. கேட்டும் விட்டான். துரைசிங்கம் அதைக் கேட்டு மிடறு விழுங்கினார். அவர் எந்த பதிலும் கூறாமல் மௌனமும் சாதித்தார். அவர் ஆமோதித்திருந்தால்கூட கருணாகரன் அதை பெரிதாய் எண்ணியிருக்க மாட்டான். ஆனால் அவர் மௌனிக்கவும் அது அவனை யோசிக்க வைத்தது.

தொடர்ந்து கேள்விகளால் அவரைப் போட்டுக் குடையாமல் விடைபெற்றுக் கொள்ள தயாரானான்.

"அப்ப நான் புறப்பட்றேன்..."

"பார்த்து போயிட்டு வாங்க." - துரைசிங்கம் விடை கொடுத்தார். சவரிமுத்துவும் பரிதாபமாக பார்த்தபடி அவர்களோடு செல்ல திரும்ப முயற்சி செய்தார். துரைசிங்கத்துக்கு கோபம் வந்துவிட்டது.

"இதா பாருய்யா... நான் கண்டிப்பா சொல்றேன். நான் சொல்றவரை நீ இந்த வீட்டை விட்டு போகக் கூடாது. அவங்க போகட்டும். பத்திர வேலைல இருந்து எல்லாத்தையும் அவங்களே பாக்கட்டும். என்ன பாத்துடுவீங்க தானே?" என்று கேட்டவர் உள்ளே சென்று ஒரு பிளாஸ்டிக் ஃபைலோடு வந்தார்.

"இந்த ஃபைலுக்குள்ள நீங்க வாங்கப்போற நிலம் சம்மந்தமான எல்லா விவரங்களும் இருக்குது. எல்லாமே ஜெராக்ஸ் காப்பிதான். இடத்தோட சுத்தத்துக்கு நீங்க யார்கிட்ட போய் எதை கேட்கணும்னாலும் கேட்டுக்குங்க... இதுக்கு மேல இந்த இடம் தொடர்பா

நான் பேசவோ நீங்க கேட்கவோ எதுவுமில்லை. நீ
புறப்படலாம்” என்றார்.

சவரிமுத்து மாட்டிக் கொண்டுவிட்டது போ
பார்த்திட கருணாகரனும், கிரிதரும் புறப்பட்டனர்.

## 5

‘ஈரேழு பதினான்கு
லோகம்... இதில்
நாகத்தின் லோகம் ஒரு
பாகம்!
ஊரோடு
உறவிருந்தாலும்....
சர்பசாபத்தால்
வேரோடு எல்லாமே
போகும்...’

**நா**கனாங்குறிச்சி தெருவில் கருணாகரன்
வெள்ளைக் கார் திரும்பிக் கொண்டிருந்தது. பல
வீதியில் நின்றபடி வேடிக்கை பார்த்தனர்.

அந்தக் கால வீடுகள்...! இன்னமும் சுண்ணாம்
வெளுப்பில் தான் இருந்தன. நாகரிகமான விஷயங்க
அவ்வளவாக உள்ளே நுழையவில்லை. அங்கொன்று
இங்கொன்றுமாகத்தான் டி.வி.டிஷ் ஆன்டனாக்கே
கண்ணில் பட்டன.

ஊரை வெறித்தபடியே வந்தான் கருணாகரன்
கிரிதர் முகத்தில் ஒருவித பயம் தெரிந்தது.

கருணாகரன் அதை கவனித்துவிட்டு வா
திறந்தான்.



“என்ன கிரி.. எதுவுமே பேசாம வரீங்க...”

“என்னத்த சார் பேச.... அதான் நீங்க இடத்தை வாங்க ஒத்துகிட்டீங்களே... இனி பேப்பர்ல ஏதாவது பிரச்சினை இருந்தா தானே பேச்சு..?”

“எப்ப... ஃபைலை தூக்கி போட்டு நல்லா செக் பண்ணிக்குங்கன்னு சொல்லிட்டாரோ அப்பவே எனக்கு இடத்து மேல இருந்த சந்தேகமெல்லாம் நீங்கிடிச்சு... ஆனா இந்த பாம்புங்களுக்கு பயப்பட்றது தான் எனக்கு பெரிய நெருடலா இருக்கு..”

“ரொம்ப தேங்கஸ் சார்... ஏதோ இந்த மட்டுல நெருடல் இருக்குன்னாவது ஒத்துகிட்டீங்களே...”

கிரிதரின் பதிலில் கோபம் கலந்த கிண்டல் தொனித்தது.

“என்ன கிரி.... உங்களுக்கு இங்க இடம் வாங்கறதுல விருப்பம் இல்லையா?”

“சுத்தமா விருப்பம் இல்லை சார்... நான் இதை பாம்புகளுக்கு பயந்தோ இல்லை சாபத்துக்கு பயந்தோ சொல்லலை. இந்த ஊர்ல எனக்கு சொல்லத் தெரியாத மர்மம் ஒண்ணு இருக்கு சார்...”

“மர்மமா?”

“ஆமா...அதை அப்படிதான் சொல்லணும்.”

“சரி.. அதனால நாம இங்க இந்த இடத்தை வேண்டாம்னு சொல்லிடலாமா?”

“சார் நாம நம்ம பிசினஸ்ல முழுமையா கவனம் செலுத்தி வளர வேண்டிய நிலைல இருக்கோம். இந்த பூந்தோட்டம்கறது நமக்கு புது விஷயம். இது பிடிபடவே நமக்கு பல வருஷமாகும். நடுவுல இங்க நிலவற மர்மமான

விஷயங்களால நம்பளால திட்டமிட்டு வளர முடி
போகலாம். ஆகையால இந்த ஊரையே நீங்க ம
துட்றதுதான் எனக்கு சரியா படுது..."

- கிரிதர் வெட்டு ஒன்னு துண்டு ரெ
என்பதுபோல பேசவும் கார் கிரிச்சிட்டு நிற்கவும் சரிய
இருந்தது. சாலையில் ஒன்றுக்கு மூன்று பாம்புகள்! அ
பக்கமாய் தபால்காரர் சைக்கிளை ஸ்டாண்டு போட்
நிறுத்திவிட்டு நடுரோடு என்றும் பாராமல் கற்பூ
ஏற்றுவதில் முனைப்பாக இருந்தார்.

கருணாகரனை ஆச்சரியம் அப்பி எடுத்தது.

பார்த்துக் கொண்டிருக்கும்போதே கற்பூரம் பற்
எரிந்தது. அந்த தபால்காரர் படபடவென்று கன்ன
திலும் போட்டுக் கொண்டார்.

வேடிக்கையாகவும் இருந்தது.

அந்த பாம்புகளும் விலகிச் செல்லத் தொடங்கி

தபால்காரரும் அப்பாடா என்று சைக்கி
எடுத்தார். கருணாகரன் காரை அவர் அருகே கொண்
செல்லச் சொன்னான். அவரை ஒரு தினுசாக பார்த்தா

"என்ன சார் சிரிக்கிறீங்க... இந்த பாம்புகள நா
கும்பிட்ட மாதிரி நீங்க கும்புடலையா?"

"ஓ... அப்படி வேற இருக்குதா?"

"ஆமாம் சார்... இல்லாட்டி போற காரியம் உரு
படாது."

"அந்த பயத்துலதான் ரோடுன்னுகூட பார்க்கா
கற்பூரம் ஏத்துனீங்களா?"

"நீங்க இந்த ஊருக்கு புதுசு போல இருக்கு. அதால
விபரம் புரியாம கேள்வியா கேட்கறீங்க. நான் கூட



ஆரம்பத்துல விஷப்பூச்சிங்க... இதை கும்புட்றதான்னு இளக்காரமா தான் நினைச்சேன். ஆனா பாடா பட்டதுக்கு பிறகுதான் புத்தி வந்துச்சு."

"அப்ப இப்ப நாங்க கும்புடாததால எங்களுக்கும் ஏதாவது ஆயிடும்னு சொல்ல வர்றீங்களா?"

"அதை நான் சொல்றதவிட நீங்க அனுபவிச்சு தெரிஞ்சுக்கறது தான் சரி.... நேரமாச்சு நான் வரேங்க..."

- தபால்காரர் போகிற போக்கில் ஒரு பயத்தை உருவாக்கிவிட்டு போனார். திரும்பவும் சிரிப்பு வந்தது கருணாகரனுக்கு.

"என்ன சார்.... அந்த தபால்காரர் சொன்னதை நீங்க நம்பலையா?"

"நீங்க நம்பறீங்களா கிரிதர்?"

"என்னால நம்பவும் முடியல... நம்பாம இருக்கவும் முடியல..."

"எனக்குள்ள எந்த குழப்பமும் இல்லை. இதை எல்லாம் நான் ஒரு பர்சன்ட் கூட நம்ப தயாரில்லை."

"அப்ப அவர் பாடா பட்டதா சொன்னது பொய்யா?"

"அது என்னன்னு சொல்லலையே.. இயற்கையா வந்த கஷ்டத்தை இதோட தொடர்பு படுத்தி சொல்லியிருப்பார். நாம புறப்படுவோம்..."

- கார் திரும்பவும் சிற ஆரம்பித்தது. போகும் போது பார்த்த அதே காட்சிகள்.

"கிரிதர்...... இங்க இருந்தே வேலி போட்டுடணும். நல்ல ஆறடி உயர முள்வேலி... பதினைஞ்சடிக்கு ஒரு சிமிண்ட் பில்லர். கணக்கு போட்டுகிட்டே வாங்க.

ரஃப்பா ஒரு எஸ்டிமேட் போடுங்க." - என்று நி
பார்த்தபடியே கிரிதரிடம் கூறினான். கிரிதர் தலை
ஆட்டி ஆமோதித்தார். காரும் நல்ல வேகம் எடு
ஊரின் பெயர் பலகையை ஒட்டிய அந்த நாகர்
அருகே வந்து வளைந்து திரும்பும்போது
கழுதை ஒன்று எதிர்பாராமல் பக்கவாட்டில் இ
வரவும் டிரைவர் அதிர்ந்து போய் பிரேக் பிடித்
ஆனால் பயனில்லை. காரின் இடது பக்க ஹெட்
பாகம் கழுதை மேல் மோதிட கழுதை பக்கவாட்
தெரித்து விழுந்தது. காரும் வலது பக்கமாக ஒது
பட்டு சாலையை விட்டு கீழே இறங்கி மழை
சகதிக்குள் செருகிக் கொண்டு நின்றது.

அதன் பின் கதவை திறந்து கொண்டு
இறங்கி சாலைக்கு வருவதே பெரும் பாடாகிவிட்ட
அடிபட்ட கழுதையோ நொண்டிக் கொண்
கருணாகரன் வாங்கிப் போட ஆசைப்பட்ட நி
பரப்பில் போய்க் கொண்டிருந்தது.

அதைப் பார்த்த கிரிதரிடம் லேசாய் வெளிறல்

அப்போது பக்கவாட்டுப் புதரில் இருந்து பிச்சை
காரன் போல ஒருவன் கையில் தடியோடு வெ
பட்டான்.

"என்ன கழுதை மோதி கார் சேத்துல இ
கிடிச்சா. பாத்து வர்றதில்லையா?" என்று கேட்டான்.

"எல்லாம் பாத்து தான் வந்தோம். கழுதை இப்ப
குறுக்க வரும்னு யார் கண்டா?"

"அப்ப ஏதாவது சாமி குத்தம் பண்ண
யிருப்பீங்க....?"

"சாமி குத்தமா?"



"பொறவு... நாகனாங்குறிச்சி எல்லையை நல்ல விதமா தாண்ட முடியலைன்னா சாமி குத்தம்னுதான் அர்த்தம்..."

- அவன் பேச்சு கிரிதர் முகத்தை கோணலாக்கியது. அர்த்த புஷ்டியோடு கருணாகரனைப் பார்த்தான்.

"அய்யா பெரியவரே... காரை இப்ப வெளிய எடுக்கணும். அதுக்கு ஒரு வழி சொல்லுங்க... ஒரு நாலைஞ்சு பேர் வந்து தள்ளுணா வண்டிய கிளப்பிடலாம்..."

"முதல்ல சாமிய விழுந்து கும்புடுங்க. கும்புடாம நூறு பேர் வந்தாலும் வண்டி நவுறாது..."

"என்ன பெரியவரே மிரட்றீங்க..."

"உள்ளத சொன்னேன்... கேட்டா கேளுங்க இல்லாட்டி விடுங்க. ஆமா எங்க வந்தீங்க...இடம் வாங்கவா?"

"ஏன் இந்த ஊருக்கு இடம் வாங்கறவங்க தான் வருவாங்களா?"

"உங்கள பாத்தா அப்படித்தான் தெரிஞ்சிச்சு. யதார்த்தமா தான் நானும் கேட்டேன்..."

"ஆமாம்.. இப்ப காரை எடுக்க ஒரு வழிய சொல்லுங்க..."

"அதத்தான் நான் அப்பவே சொல்லிட்டேனே... கை எடுத்து கும்புடாம எதுவுமே நடக்காது..." - அந்த மனிதன் சர்வ அலட்சியமாக பேசிவிட்டு தடியை ஊன்றியபடி ஊருக்குள் செல்லும் சாலை மேல் நடக்கத் தொடங்கினான்.

"என்ன சார் இப்ப பண்றது?"

"வாங்க நாம மூணு பேரும் ட்ரை பண்ணுவோம்..."

- கருணாகரன் கிரிதரோடு டிரை
சேர்த்துக் கொண்டு வண்டியை பின்னால்
முயன்றான்.

ஆனால் ஒரு நூலளவுகூட அது அசை

உடம்பை போத்துக் கொண்டு வியர்வை
கொட்டியது. மூச்சும் வாங்கியது.

கிரிதருக்கும் பயம் அதிகரிக்கத் தொடங்கியது

"சார்... இனம் புரியாத ஏதோ ஒரு விஷயம் இ
இருக்கத்தான் சார் இருக்கு. நாம ஈகோவோட அ
மோதாம வளைஞ்சு கொடுத்து போயிடுவோம்
அந்த நாகர் சிலையை போய் கும்பிடுவோம்..."

- கிரிதர் கருணாகரனை மெல்ல வார்த்தை
இழுத்தார். கலகலவென்று கேலியாக சற்று அ
மாகவே சிரித்து விட்டான் கருணா! அதற்கு மேல் கி
அவனை வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால் அ
அந்த சிலையை நோக்கி சென்றார். அதன் முன் நி
கை எடுத்து கும்பிட்டவர் ரோடு என்று கூட பா
காமல் மண்டி. போட்டு வணங்கினார்.

பின் நாகர் சிலை மேல் சிந்தியிருந்த குங்குமத்
ஒரு துளியை எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்
திரும்பி வந்தார்.

"என்ன கிரிதர் இனிமே நம்ம வண்டி இ
இடத்தை விட்டு கிளம்பிடுமா?" என்று சிரிப்பு விலகா
படி. கேட்டான்.

"பார்ப்போம் சார்..."

"பார்ப்போமா... கிளம்பியாகணும். இல்ல நீங்
என் கால்ல விழுந்து கும்பிட்டு உங்க முட்டாள்தனமா
பயத்துக்கு சாரி கேட்டுக்கணும்."



- கருணாகரனின் குதர்க்கமான பேச்சு கிரிதரை என்னவோ செய்தது. தன் பயம் கலந்த நம்பிக்கை எங்கே பொய்யாகிவிடுமோ என்று கொஞ்சம் மனது பயப்படவும் செய்தது.

அப்போது பார்த்து தடதடவென்கிற சப்தத்தோடு டிராக்டர் ஒன்று வந்தது. அந்த டிராக்டரும் கூட ஊருக்குள் இருந்துதான் வந்தது. கிட்டே அது வரவும்தான் அதில் டிரைவருக்கு பக்கத்தில் சவரிமுத்து உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

டிராக்டரும் கருணாகரன், கிரிதரைப் பார்த்து நின்றது.

"என்ன சார்... எப்படி இப்படி. ஆச்சு?"

"அதுவா இப்ப முக்கியம். இறங்கி வந்து வண்டியை வெளிய எடுக்க ஹெல்ப் பண்ணுங்க. ஆமா எங்க உங்க ஜீப்?"

"அதை ஏன் சார் கேக்கறீங்க. நான் ஜமீன்தாருக்கு தெரியாம வந்துருக்கேன். அவர்தான் என்னை போகவே கூடாதுன்னு சொல்லிட்டாரே..."

"ஆமால்ல... பரவால்ல உங்களுக்கு தைரியம்தான்."

"இந்த ஊர்ல இது ஒரு இம்சை சார். ரொம்பவே பயமுறுத்திடுவாங்க..." - என்று சவரிமுத்து டிராக்டர்காரனையும் உதவி செய்யும்படி கேட்டுக் கொள்ள அவன் பின்பக்கமாய் ட்ரெய்லருக்குள் கிடந்த கயிற்றை எடுத்து வந்து காரின் பின்பக்கத்தில் சரியான இடமாப் பார்த்து கட்டிவிட்டு பின் மறுமுனையை டிராக்டரில் கட்டி டிராக்டரையும் இயக்கினான்.

கார் ஷணத்தில் வெளியேறி ரோட்டிலும் வந்து நின்றது. கிரிதருக்கும் தன் நம்பிக்கை ஜெயித்த

...தோஷம். அப்பாடா என்று பெரு...
கருணாகரனுக்கும் அப்போதுதான் வெ...
வர ஆரம்பித்தது.

“கிரிதர்... நீங்க கும்பிட்டதுலயும் சந்...
மாதிரி தான் தெரியுது.”

- டிராக்டர்காரன் கயிற்றை அவிழ்த்து எ...
கொண்டு புறப்பட்டுவிட சவரிமுத்து அவ...
சேர்ந்து கொண்டார். செல்போனில் தன...
டிரைவரை தொடர்பு கொண்டு, “நீயும் வந்து...
என்றார்.

“சரிங்க நீங்க போய்கிட்டே இருங்க. ந...
பின்னாலயே வரேன்...” என்று பதிலும் வந்து சேர்...

மூவருமாய் காரில் ஏறிக் கொள்ளுமுன் உடை...
போன ஹெட்லைட்டை பார்த்து கருணாகரன் மு...
கணங்கியது.

“சார் முதல்ல கிளம்புவோம்... அடுத்து ஏதாவ...
ஆவிடப் போகுது” என்று கிரிதர் பரபரத்தார்.

“ஆமா எப்படி சார் இப்படி ஆச்சு?” - என்...
கேட்டபடியே சவரிமுத்துவும் காரில் ஏறிக் கொள்...
காரும் புறப்படத் தொடங்கியது.

“சவரிமுத்து இந்த ஊரே வினோதமான ஊரா...
தான் இருக்கு. எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியல...
என்றான் கருணாகரன்.

“சார் என்கிட்ட மட்டும் பணம் இருந்தா இந்...
இடத்தை நான் வாங்கிடுவேன் சார். ஆனா நான்...
கமிஷன் புரோக்கரா போய்ட்டேன். இப்ப சொல்றேன்...
சார்... நீங்க இங்க தோட்டம் போட்டு ஓஹோன்னு...



தொழில் நடக்கும்போது கட்டாயம் என்னை நினைச்சுப்பீங்க.

மத்தபடி யார் எதை சொன்னாலும் காதுல வாங்கிக்காதீங்க. நானே எதுக்காக ஜமீன்தாருக்கு தெரியாம ஓடி வந்தேன்னா அவர் பயத்தை போக்கறதுக்காதான். அப்புறம் நீங்களும் சந்தோஷமா இடத்தை வாங்கணுமே அதுக்காக...”

“சந்தோஷம் சவரிமுத்து... உங்க தைரியத்த நான் ரொம்பவே பாராட்டறேன் என் வரைல முன்ன வெச்ச காலை நான் பின்ன வைக்கறதா இல்லை. ஆனா பாவம் என் உதவியாளர் கிரிதர். அவருக்குதான் இந்த ஊரும் பிடிக்கல இந்த இடமும் பிடிக்கல...”

- காருக்குள் பயணித்தபடியே கருணாகரன் கிரிதரை மாட்டிவிட்டான்.

“என்ன கிரிதர் சார்... படிச்ச நீங்களே இப்படி பயந்தா எப்படி சார்...?”

“இல்ல சவரிமுத்து... இந்த ஊர்ல ஏதோ இருக்கு... இப்பகூட நான் போய் சாமி கும்பிடவும்தான் வண்டியை எடுக்க முடிஞ்சிச்சு...”

“அட என்ன சார் நீங்க... காக்கா உக்கார பனம்பழம் விழுந்த கதையா இருக்கும். பாம்புங்கறது ஒரு நீளமான விஷ புழு சார் அவ்வளவுதான். அதுக்கு காது கிடையாது, மூக்கு கிடையாது, கால் கிடையாது கை கிடையாது. பாவம் சார் அது.... இந்த பழி வாங்கறது கொலை பண்றதுல்லாம் மனுஷங்களுக்கு மட்டும் தான் சார்.” சவரிமுத்து நிஜமாலுமே ஹாயான ஒரு உணர்வுடன் தான் பேசினார். ஆனால் கருணாகரன் எந்த பதிலும் கூறாமல் வெளியே பார்த்தபடியே

அமர்ந்திருந்தார். பார்க்கும் தூரத்தில் நாகலா
ஊரின் எல்லைக்கல்லும் கண்ணில்பட்டது

டிரைவர் வேகமான போது 'ஸ்ஸ்ஸ்' என்ற
சீற்றமான சப்தம். கருணாகரன் சவரிமுத்து
அப்படி பெருமூச்சு விடுவதாக நினைத்துக் கொ
சவரிமுத்துவோ அது கருணாகரனாக இருக்கும் எ
நினைத்துக் கொள்ள திரும்பவும் சப்தம் பெரிய அள
கேட்டது.

இருவருமே ஒருவரை ஒருவர் நெருக்கு
பார்த்துக்கொள்ள முன் சீட்டில் டிரைவருக்கு பக்கத்
அமர்ந்து கொண்டிருந்த கிரிதரும் திரும்பிப் பார்த்

அவர் பார்க்கும்போது இன்னமும் பலமாய் அ
சப்தம் கேட்கவும் மூவரிடமுமே ஒருவித பீதி.

சவரிமுத்துவின் காலடியில் ஏதோ வழவழவெ
இருக்கவே மெல்லக் குனிந்து பார்த்தபோது டிரைவ
சீட்டுக்கு கீழே அந்த சீட்டின் இரும்புக் கால்க
வளைத்துக் கொண்டு கருநாகம் ஒன்று!

அதுதான் தலையை வளைத்து மேலே பார்
படி சீறிக் கொண்டிருந்தது. அதன் வால் பகுதி மே
சவரிமுத்துவின் காலும் இருந்தது.

அதைப் பார்த்துவிட்ட கருணாகரனுக்கு ஒ
வினாடி நெஞ்சைத் துறுவியது போல் இருந்தது. அ
பார்த்தபடியே, "டிரைவர் காரை நிறுத்துப்பா..." என்
அலறினான். டிரைவரும் காரை நிறுத்தவும் வேகமா
கதவை திறந்து கொண்டு இறங்கியவன், கிரிதரு
புரிந்து கொண்டு இறங்கிவிட டிரைவரும் இறங்கினா
ஆனால் சவரிமுத்துவால்தான் காலை அப்படி இப்ப
அசைக்க முடியவில்லை. பயம் நெஞ்சுக் கூட்டுக்கு
கோலி சோடா போல அடைத்துக் கொண்டிருந்தத



துளி காலை அசைத்தாலும் அந்த பாம்பு கொத்திவிடும் ஆபத்து.

அதற்காக அசையாமலும் இருக்க முடியாது.

சவரிமுத்து பதைப்பின் உச்சிக்கு போய் "சார் ஏதாவது செய்யுங்க சார்..." என்று கத்தியபடியே காலை மேலே இழுக்கவும் அதுவும் ஒரு போடு போடவும் சரியாக இருந்தது.

அடி வாங்கிய வேகத்தோடு வெளியே விழுந்த சவரிமுத்து 'சார் பாம்பு கடிச்சிடுச்சி... என்று உயிர் பயத்தோடு கத்தத் தொடங்க கருணாகரன் வேக மானான்.

மளமளவென்று இடுப்பு பெல்ட்டை அவிழ்த்து கால் பாகத்தில் கடிபட்ட இடத்திற்கு மேல் கட்டுப் போட்டவன் திரும்பிப் பார்த்தபோது அந்த கருநாகம் காரை விட்டு இறங்கிச் சென்று கொண்டிருந்தது.

"கிரிதர் காரை நல்லா செக் பண்ணுங்க. உள்ள இன்னும் ஏதாவது பாம்புங்க இருக்கான்னு..." - என்று குரல் கொடுக்க டிரைவரும் கிரிதரும் பார்த்தனர். டிக்கியையும் திறந்து பார்த்துவிட்டு "இல்ல சார்" என்றிட சவரிமுத்துவை தூக்கிப் போட்டுக் கொண்டு கார் வேகமெடுத்தது. கிரிதர் பரிதாபமாக கருணா கரனைப் பார்த்தார். "புரியுது கிரிதர். நான் இந்த ஊர்ல இடம் வாங்கற எண்ணத்தை விட்டுட்டேன். இப்ப நம்ம நோக்கம் சவரிமுத்துவை எப்படியாவது காப்பாத்தறது தான்" என்று கருணாகரன் கூறவும்தான் கிரிதருக்கு உயிரே வந்தது.

# 6

'சக்தியின் சின்னமே நாகம்
" அதை
பக்தியுடன் பார்த்தல்
யோகம்!
புத்தியோ கொள்வது
குரோதம் - இதனால்
சுத்தி வரும் பெரும்
சாபம்.'

ஆஸ்பத்திரி! சவரிமுத்துவை ஸ்ட்ரெச்சரில் வைத்
அழைத்துச் செல்லும்போது விஷம் கட்டுப் போட்
இடத்தை விட்டு மேலேற முயன்றபடி இருந்த
சவரிமுத்துவையும் மயக்கம் வந்து ஆக்ரமித்திருந்தது

நல்லவேளை...

அந்த ஆஸ்பத்திரியில் பாம்புக்கடிக்கான வி
தடுப்பூசி ஸ்டாக்கில் இருந்தது. அதைப் போட்
சவரிமுத்துவுக்கு இனி ஆபத்தில்லை என்று சொன்
பிறகுதான் கருணாகரனுக்கும், கிரிதருக்கும் உயிர
வந்தது.

சோர்வாக ஆஸ்பத்திரியை விட்டு இருவரு
வெளியில் வந்தனர். கிரிதர் விடைபெற்றுக் கொள்
தயாரானார்.

"சார் அப்ப நான் வீட்டுக்கு கிளம்பறேன்..."

"போய்ட்டு வாங்க கிரிதர்... இன்றைய தினத்
நம்மால மறக்க முடியாதுல்ல?"

"மறக்கறதா... உயிர் உள்ளவரை ஞாபகம் இருக்கும்..."



"சரி... பார்த்து போய்ட்டு வாங்க... நாளைக்கு எப்பவும் போல ஆபீசுக்கு வந்துடுங்க."

"ஷ்யூர் சார்.... நீங்க போறவழில அந்த ஜமீன்தாருக்கு ஒரு போனை போட்டு எங்க ப்ரபோசல் கேன்சல்னு சொல்லிடுங்க சார்."

"இல்ல கிரிதர்... இதை நான் சொல்றத விட நீங்க சொல்றதுதான் சரியா இருக்கும்..."

"ரைட் சார்... இதோ இப்பவே உங்க எதிர்லயே சொல்லிட்றேன். அவர் ஏதாவது கேட்டா அதுக்கும் நானே பதில் சொல்லிக்கறேன்."

- என்றபடியே கிரிதர் துரைசிங்கத்துக்கு போன் செய்தார். எதனாலோ நாட் ரீச்சபிள் என்றே வந்தது.

"சார்... நாட் ரீச்சபிள்னு வருது... நான் அப்புறமா ட்ரை பண்ணி சொல்லிட்றேன். நீங்க கிளம்புங்க சார்..."

கிரிதர் கருணாகரனை வழியனுப்பி விட்டு ஆட்டோ ஒன்றை பிடிக்க முனைந்தார். ஒரு ஆட்டோ வந்து நின்றது. நாகம்மா என்று அதன் முகப்புப் பெயரை பார்க்கவும் சற்று திக்கென்றது.

"நீ போப்பா. உன் ஆட்டோ வேண்டாம்" என்றார்.

"சார் உங்க மனசு போல கொடுங்க சார். காலைல இருந்து போணியே ஆவல" என்றான் அவன். சிக்கென்று பாக்கெட்டில் கைவிட்டு ஒரு ஐம்பது ரூபாயை நீட்டியவர்

"இந்தா இதை வாங்கிக்கிட்டு கிளம்பு... ஆனா நான் மட்டும் உன் வண்டில ஏறவே மாட்டேன்" என்றார்.

ஆட்டோகாரனுக்கோ இப்படியும் ஒரு கிறுக்கனா என்றுதான் தோன்றியிருக்க வேண்டும்!

கருணாகரனின் அந்த ரதம் போன்ற வெ...
கார் சாலையில் மிதந்தபடி. சென்று கொண்...
உள்ளே பின் சீட்டில் அமர்ந்திருந்த கருணாகரன் ...
வாட்டில் நகரின் காட்சிகளை பார்த்தபடி ...
திருந்தான். அவனுக்கு பக்கத்தில் துரைசிங்கத்தின் ...
ஃபைல்!

கார் ஒரு வளைவில் திரும்பும்போது அந்த ஃபை...
வழுக்கியபடி. அவன் காலடியில் விழுந்தது. குனி...
எடுத்தபோது ஒரு நான்காக மடிக்கப்பட்ட ஒரு கா...
மட்டும் தனியே பிரிந்து விழுந்தது.

அதையும் குனிந்து எடுத்தவன் விரித்தான்.

அது ஒரு கடிதம். முத்து முத்தான எழுத்துக்கள்...

'அன்புள்ள நண்பருக்கு!

வணக்கம்.

நான் பூர்ணிமாதேவி பேசுகிறேன்.

ஜமீன்தார் துரைசிங்கத்தின் மூத்த மகள் பூர்ணி...
தேவி தான் பேசுகிறேன். முதலில் துணிச்சலான எங்...
இடத்தை வாங்க வந்த உங்களை எண்ணி நான் மகி...
கிறேன். எவ்வளவோ பேர்... பாம்புகளுக்கு பயந்தே ஓடி...
போனார்கள். ஆனால் நீங்கள் அவர்கள் போ...
இல்லாமல் நிலத்தை வாங்கச் சம்மதிக்கவும் எனக்...
மிகுந்த ஆச்சரியம்.

காரணம்.... இந்த இடம் விற்காமலே கிடக்கு...
எனக்கும் ஒரு வாழ்க்கை கிடைத்து விடிவென்ப...
ஏற்படப் போவதில்லை. என்றுதான் நான் நினை...
திருந்தேன்.

ஆம்... இந்த இடம்தான் எனக்கான சொத்து...



நான் என் தந்தைக்கு முதல் மனைவி வயிற்றில்
பிறந்தவள். என் அம்மாவை கூட பாம்பு கடித்து
அதனால் தான் இறந்து போனார்களாம். அதன்பின்
அப்பா மிகவும் சிரமப்பட்டே மறுமணம் செய்து கொண்
டார். அப்போது கூட உள் நாட்டில் பாம்புகளுக்கு
பயந்து கொண்டு யாரும் அப்பாவுக்கு பெண் தர
வில்லை. மலேசியாவை சேர்ந்த ஒரு உடல் ஊனமுற்ற
பெண்ணைத்தான் அப்பா அதன் பிறகு மணந்து
கொண்டார். அவர்தான் என் சித்தி ரேஷ்மா! சித்திக்கும்
இரண்டு மகன்கள்.

சித்தியை அப்பா இங்கே அழைத்து வரவே
யில்லை. வந்தால் சித்தியும் இறந்து விடக் கூடும்
என்கிற பயன்தான் காரணம். அதேசமயம் இங்குள்ள
சொத்தை விற்கவும் முடியவில்லை. என்னை கரை
யேற்றவும் அப்பாவால் முடியவில்லை.

காரணம் எங்கள் குடும்ப சாபம்தான்!

இரண்டு தேவநாகங்கள் குடியிருந்த புற்றை
இடித்து அவைகளில் ஒன்றை மட்டும் அடித்துக்
கொன்றதால் வந்த வினை. அன்றிலிருந்து இன்று வரை
ஏதோ ஒரு புழுவைப் போலத்தான் நாங்கள் வாழ்
கிறோம். தினந்தோறும் பூசாரி என்று ஒருவன் வந்து
படம் போட்டு விபூதி பூசிவிட்டு போவான். பிறகுதான்
சாப்பிட வேண்டும், தூங்க வேண்டும். ஒரு நாள் அவன்
வராவிட்டாலும் பட்டினிதான். எதற்கு இப்படி சீரழிந்து
கொண்டு இங்கே வாழ வேண்டும். என்னையும்
மலேசியாவுக்கு அழைத்து சென்றுவிடுங்கள் என்றேன்
அப்பாவிடம் ஆனால் அதற்கு பூசாரி மூலமாக சாமி
உத்தரவு தரவேண்டும். ஆனால் அதுவோ தர மறுக்
கிறது. வேறு வழியே இல்லாமல் ஒரு சிறை கைதி போல
நான் வாழ்ந்து வருகிறேன். இந்த நிலையில்தான்

உங்களை இன்று பார்த்தேன். உங்கள் துணிச்சலு
பேச்சும் என்னை வெகுவாக கவர்ந்துவிட்டது. உங்க
பாராட்டவே இந்தக் கடிதம். அதே சமயம் உங்கள
ஒரு வேண்டுகோளும் கூட... தயவு செய்து உங்களுக்
இடத்தை நீங்கள் வாங்க வேண்டாம். அந்த இடத்தி
சட்டபூர்வமாக ஒரு சிக்கலும் இல்லை. ஆனால் எங்க
இரண்டு பாம்புகளை என் தாத்தா அழித்ததற்காக என்ற
பாம்பு இனமே என் வீட்டை பகைவர்களாக இ
கின்றது. இந்த இடத்தை வாங்குபவர்களையும் கரு
விடாது. எனவேதான் உங்கள் மேலுள்ள அக்கறையி அ
எங்கள் சாபம் எங்களோடு போகட்டும் என்று கரு
இதை எழுதியபடி உள்ளேன். இந்த 21 ஆம் நூ
றாண்டில் இப்படி எல்லாம்கூட நடக்குமா என்
எண்ணி ஆச்சரியப்படும்படியாக பல விஷயங்கள் எங்க
ஊரில் நடந்து வருகிறது. இதை ஒரு மூடத்தனமா
கருதிய பலர் இன்று உயிருடன் இல்லை. மூடத்தனமோ
புத்திசாலித்தனமோ எங்கள் ஊரின் நாகப்படை
எங்களையும் அடக்கி ஒடுக்கி வைத்திருப்பதோடு
புதிதாக யாராவது வந்தால் அவர்களையும் மிரட்டி
அனுப்பிவிடுகிறது. நீங்களும் இந்த படையால் சிரமத்
துக்கு ஆளாகி எங்கே உங்களையே இழந்துவிடுவீர்
களோ என்று மிகவே பயமாக உள்ளது. எனவேதான்
இந்த கடிதம். அப்பா தந்த ஃபைலை போகிற வழியில்
வீசி எரிந்துவிட்டு போங்கள். நல்லவேளையாக நீங்கள்
அட்வான்ஸ் என்று எதையும் தரவில்லை. ஒருவேளை
தந்திருந்தாலும் பணத்தோடு போகட்டும் நீங்கள்
தப்பித்துக் கொள்ளுங்கள் என்றுதான் கூறுவேன்.

இப்படிக்கு

பூர்ணிமா தேவி.



கடிதத்தை படித்த உடனேயே கருணாகரனை ஒருவித பரிதாபமும் பச்சாதாபமும் ஆட்கொண்டு விட்டது. கடிதத்தை திரும்பத் திரும்ப படித்தான்.

இந்த பூர்ணிமாவுக்குத்தான் எத்தனை நல்ல மனது...? ஆள்தான் அழகாயிருக்கிறாள் என்றால் மனதும் அழகாக உள்ளதே...! என்று எண்ணியவன் லேசாக கலங்கவும் செய்தான். அப்படியே நெடுநேரம் சிந்தித்தவன் மளாரென்று போனை எடுத்து கிரிதரை தொடர்பு கொண்டான்.

“கிரி...”

“என்ன சார்...”

“வெரி சாரி கிரி.... அந்த இடம் விஷயமா என் முடிவுல ஒரு மாற்றம்...”

“என்ன சார்... திரும்ப வாங்கினா என்னன்னு தோணுதா?”

“ஆமாம்...”

“எதனால சார் இப்படி திடீர்னு...”

“ஜமீன்தார் ஃபைல்ல அவர் மகளோட லெட்டர் இருந்தது. அதை படிச்சேன். மனசு உருகிடிச்சு...”

“சார் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. சீறும் பாம்பு நம்பு - சிரிக்கும் பெண்ணை நம்பாதேன்னு சிட்டில ஓட்ற பல ஆட்டோவோட பின்புறத்துல எழுதப்பட்டிருக்கு நீங்களும் பார்த்திருப்பீங்க...”

“வாஸ்தவம்தான். ஆனால் பூர்ணிமா சிரிக்கற பெண் இல்ல. பெரிய சிக்கல்ல இருக்கற பெண். அதனால நான் அவங்களுக்கு உதவ நினைக்கறேன்....”

"சார்... நீங்க அவங்கள முதன்முதலா பார்த்த பவே நான் சந்தேகப்பட்டேன். கடைசில எ சந்தேகத்தை உறுதிப் படுத்திட்டீங்களே சார்..."

"சாரி கிரிதர்... நீங்க என்னை தப்பா புரிஞ் வெச்சிருக்கீங்க. எனக்கு இப்ப அந்த பெ மேல காதலெல்லாம் கிடையாது. இது நூறு பர்சன்ட் பரிதாபம்... இன்ஃபாக்ட் அந்த பெண் எழுதியிருந் லெட்டர்ல நீங்க தயவு செய்து இந்த இடத்தை வாங்காதீங்கன்னுதான் இருக்கு... அவங்க எனக்கு வார்னிங் தான் கொடுத்துருக்காங்க..."

"சரி சார்.... நான் இனி எதை சொன்னாலும் நீங் கேட்க மாட்டீங்க. இனி உங்க இஷ்டம் தான் சார்."

"தேங்க்ஸ்... ஜமீன்தாருக்கு போன் பண்ணிடாதீங்க அப்படியே நாளைக்கு பத்திர பதிவுக்கும் ஏற்பாடு பண்ணுங்க."

"........"

"கிரி என்ன பதிலைக் காணோம்..."

"யெஸ் சார்...."

"நல்லா சுறுசுறுப்பா சியர்ஃபுல்லா சொல்லுங்க எதுவும் ஆயிடாது. தைரியமா இருங்க."

- என்றபடி போனை முடக்கினான். அவன் பங்களா வும் வந்துவிட்டிருந்தது. கார் போர்ட்டிகோவுக்குள் புகுந்து நின்றது. சூட்கேஸ் மற்றும் துரைசிங்கம் தந்த ஃபைலை மார்போடு அணைத்தபடி நடந்தான் கருணாகரன்.

எதிரில் அவனது தாயான சாரதா... அவள் நெற்றி கொள்ளாதபடி குங்குமம் மற்றும் விபூதி. ஏதோ கோவிலுக்கு போய்விட்டு வந்திருந்தாள்.



"அம்மா..."

"என்னாச்சுப்பா போன காரியம்?"

"இடம் நல்லாருக்கும்மா... முடிச்சுடலாம்னு இருக் கேன்."

"அப்படியா... அந்த ஊரைப்பத்தி நம்ம வேலைக் காரி பாரிஜாதம் தப்பு தப்பா சொன்னாளே..."

"தப்பு தப்பான்னா...?"

"அந்த ஊர்ல எங்க பார் பாம்பா இருக்குமாம். எல்லாராலயும் அங்க இருக்க முடியாதாமே..."

"அதெல்லாம் சும்மாம்மா.... ஊர் சும்மா எவ் வளவு அழகா ஜில்லுங்கற க்ளைமேட்டோட இருக்கு தெரியுமா?"

"எது எப்படியோ உனக்கு பிடிச்சிருந்தா சரி."

"அம்மா உங்ககிட்ட நான் சில கேள்விகள் கேட் கணும்." - சோபாவில் அமர்ந்து கால் ஷூவை கழற்றிய படியே பலமான பீடிகை போடத் தொடங்கினான் கருணா.

"கேளுப்பா.... என்ன கேக்கப் போறே?"

"எல்லாம் உங்களுக்கு பிடிச்ச சப்ஜெக்ட்தான்."

"எனக்கு பிடிச்ச சப்ஜெக்டா... என்னப்பா சொல்றே?"

"இல்ல. இந்த நல்ல பாம்புங்கள சாமின்னு கும்பிட்றவங்கள பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?"

கருணாகரன் நல்ல பாம்புகளை தொட்டு கேட்டு சாரதாவுக்கே என்னவோ போல் இருந்தது. அது அவள் முகம் போன போக்கில் நன்றாக தெரிந்தது.

"இப்ப எதுக்குப்பா இந்த கேள்வி...?"

"காரணமாத்தாம்மா.."

"அதான் என்ன காரணம்?"

"நான் இன்னிக்கு நாகனாங்குறிச்சிங்கற ஊ இடம் பார்க்கப் போயிருந்தேன்ல?"

"அந்த ஊரைப்பத்தி இங்க வேலைக்கா என்கிட்ட எவ்வளவோ விஷயம் பேசியிருக்கா... அ என்ன இப்போ?"

"அந்த ஊர்ல பாம்புகள பத்தின நம்பிக்கை ரொம்ப அதிகமாக இருக்கும்மா. மனு மாதிரியே பாம்புங்களும் அங்க சர்வ சாதார நடமாடிகிட்டிருக்கு.."

"அதுக்கு மண் வாகு காரணமாக இருக்கல பக்கத்துல நிறைய குளம் குட்டைங்க இருந்தா பாம்புங்க நிறைய வரும். ஏன்னா தேங்கியிருக் தண்ணிலதான் தவளைகள் நிறைய குஞ்சு பொறிக் பாம்புக்கு தான் தவளைன்னா ரொம்ப இஷ்டமாச்

"சும்மா நீ சொல்றதெல்லாம் ஜியாக்ரஃபி காரணங்கள். ஆனா நான் கேள்விப் பட்டதெல்லா நம்பிக்கை சார்ந்த விஷயங்கள்."

"அதுவும் எனக்கு தெரியும்மா... நீ அங்க இட வாங்க பயப்படறியா - அதை சொல்லு."

"அப்படி சொல்ல முடியாது... ஆனா எனக் ஏற்பட்ட சில அனுபவங்கள் எதுக்கு வம்புன்னு என்ன யோசிக்க வெச்சதும்மா... என்னோட உதவியாள கிரிதரும் எதுக்கு சார் வம்பு... நிம்மதியா தொழி பண்றதுக்கு இது ஏத்த இடம் இல்லேங்கற மாதி பேசினார்..."



"நீ என்ன தான் முடிவு பண்ணே?"

"நானும் இறுதில வேண்டாம்னுதாம்மா முடிவு பண்ணேன். ஆனா ஒரு கடிதம் என் முடிவை மாத்திடிச்சு..."

- என்றவனாக பூர்ணிமாதேவியின் கடிதத்தை எடுத்து சாரதா முன் நீட்டினான். அவளும் மூக்குக் கண்ணாடியை தேடி எடுத்து வந்து அணிந்து கொண்டு அந்த கடிதத்தை ஆவலாக படித்து முடித்தாள்.

பின் மூக்கு கண்ணாடியை கழற்றிய படியே அவனை ஏறிட்டாள்.

"என்னம்மா சொல்றீங்க?"

"நீ எடுத்த முடிவுதான் சரி. பாவம் இந்தப் பொண்ணு..."

"ஆமாம்மா.... நான் இந்த பொண்ணை நேர்ல பார்த்தபவே ஒரு பரிதாப உணர்ச்சி ஏற்பட்டது... நல்ல அழகும்மா... குத்து விளக்கை புளி போட்டு தேச்ச மாதிரி இருந்தா..."

- அவன் ரசனையோடு சொன்னதை சாரதாவும் ரசித்தாள். அவன் இப்படி ஒரு பெண்ணைப் பற்றி ரசனையோடு பேசி இப்போதுதான் கேட்கவும் செய்கிறாள்.

கல்யாணப் பேச்சை எடுக்கும் போதெல்லாம் முதலில் தொழிலில் ஒரு ஸ்திரத்தன்மை பிறகுதான் வாழ்க்கை என்று வாயை அடைத்து விடுவான். ஒரு முறை ஒரு பெண்ணின் போட்டோவை காட்டி இந்தப் பெண்ணை நான் முடிவு செய்துவிட்டேன் என்று சாரதா சொன்னபோது கோபித்துக் கொண்டு வீட்டுக்கே வராமல் ஆபீஸே கதி என்று இருந்து சாரதாவை தன்

வழிக்கு கொண்டு வந்தவன். அவனாக இ
ஒரு பெண்ணைப் பற்றி பேசுகிறான் என்றால்
பெண்ணை இவனுக்கு பிடித்திருக்கிறது என்
அர்த்தம் செய்து கொள்ள வேண்டும்?

அவளிடமும் மனதுக்குள் சில தீர்மான
அதோடு, "கருணா நீ அடுத்து எப்ப அந்த
போகப் போறே?" என்று கேட்டாள்.

"ஏம்மா..."

"நானும் உன் கூட வரலாம்னுதான்..."

"நான் வாங்கப் போற இடம் நல்ல இடமா
பாக்கவா?"

"ஆமாம்..." - அவன் இடம் என்று சொன்ன
சாரதா மனதுக்குள் பெண் என்று மாற்றிக் கொண்ட

"ஏம்மா.... உனக்கு இந்த விஷயத்துல
மில்லையா?"

அவன் கேள்விக்கு மெல்லிசாக சிரித்தாள். அ
இல்லை என்று சொல்லி விட்டது.

"ஆச்சரியமா இருக்கும்மா..."

"ஏம்பா எல்லா அம்மாக்களையும் பே
பாம்புன்னா உடனே பயந்துடுவேன்னு நினைச்சியா?

"நிச்சயமா... பாம்புன்னா யார்தான் பயப்ப
மாட்டாங்க?"

"அது பாம்பை விஷ ஜந்துவா மட்டும் பாக்
தாலதான்..."

"அது ஒரு விஷப் பூச்சிதானேம்மா?"

"அப்புறம் ஏம்பா அதோ விஷயத்துல மருந்
கண்டு பிடிக்கறாங்க...?"



"நீங்க என்ன சொல்ல வர்றீங்க?"

"பாம்பு விஷப் பூச்சி கிடையாது. அது சக்தியோட சின்னம். அது தெரியுமா உனக்கு?"

"என்னம்மா இது புது விளக்கம்..."

"இது ரொம்ப பழைய விளக்கம்பா... நீ இப்ப முதன் முதலா கேக்கறதால உனக்கு இது புதுசா தெரியுது..."

"நீங்க பேசறத பார்த்தா பாம்புக்கு பின்னால நாம தெரிஞ்சுக்கவும் புரிஞ்சுக்கவும் நிறைய விஷயங்கள் இருக்கும் போல தெரியுதே..."

"நிறைய்ய..."

"உங்களுக்கு எப்படிம்மா இதெல்லாம் தெரியும்?"

"அது சரி... இந்த குடும்பத்துக்கே ஒரு பேர் உண்டு. அது என்னன்னு தெரியுமா உனக்கு...?"

"குடும்பத்துக்கு பேரா... மனுஷங்களுக்குத்தானே பேர்... குடும்பத்துக்கு எதுக்கு பேர்..."

"பைத்தியக்காரா... எல்லாக் குடும்பத்துக்கும் ஒரு பேர் நிச்சயம் இருக்கும். வேணும்னா இந்த ஒரு முப்பது நாப்பது வருஷத்துலஅது மெல்ல மறைக்கப் பட்டிருக்கலாம். கல்யாணப் பத்திரிகையை எடுத்துப் பார்த்தா தெரிஞ்சிடும். அந்த வகைல நான் பத்தமடை பிள்ளையார் குடும்பத்தை சேர்ந்தவ... பத்தடைங்கறது ஊர்... பிள்ளை யார்ங்கறது எங்க மூதாதையர்கள்ள ஒருத்தர் பேர். இரண்டையும் சேர்த்து பத்தமடை பிள்ளையார் குடும்பம்னு சொல்லுவோம். உங்கப்பா குடும்பம் கல்லிடைக் குறிச்சி நஞ்சுண்டார் குடும்பம்..."

"புரியுது.. கல்லிடைக்குறிச்சி அப்பாவோட...
ஊர், அப்பாவோட தாத்தாக்கள்ள யாரோ ஒருத்...
நஞ்சுண்டன்னு பேர் அப்படி தானே?"

"அதேதான்... இப்படி இந்த தமிழ்நாட்...
இருக்கற எல்லா குடும்பங்களுக்கும் நிச்சயமா...
பேர் இருக்கும். அந்த வகைல நஞ்சுண்டார் குடும்ப...
இந்த குடும்பத்துக்கு ஏன் பேர் வந்தது தெரியுமா?"

"அதான் சொன்னேனே தாத்தா பேர்...
சுண்டான்... அதனாலதான் இருக்கும்."

"அதனால மட்டும் கிடையாது... இரு...
வருஷத்துக்கு முந்தி உன் கொள்ளு தாத்தா ஒருத்...
மேகமலை ஜமீன்தார்கிட்ட 'கார்வாரா' (கணக்...
பிள்ளை) இருந்தார். அப்ப ஜமீன்தாரோட வை...
மோதிரம் ஒண்ணு திருட்டுப் போயிடிச்சு. அந்த ப...
உன் தாத்தா மேல விழுந்தது. எப்படின்னா அவ...
சோதனை போட்டப்போ உன் தாத்தாவோட பை...
அந்த வைர மோதிரம் இருந்தது. திருடினவன் உ...
தாத்தாவை மாட்ட வைக்கறதுக்காக மோதிரத்த...
அவர் பைல போட்டுட்டான். உன் தாத்தாவுக்கு...
தெரிஞ்சு போச்சு. இந்த நிலைல ஜமீன்தார் உ...
தாத்தாவுக்கு தண்டனை விதிச்சார். எந்த கையால...
மோதிரத்தை திருடினியோ அந்த கையை பாம்...
புத்துக்குள்ள உடணும்னு..."

- சாரதா சொன்ன அந்த செய்தி கருணாகரனை...
நிமிர்த்தியது. மிகவும் பரபரப்பானான்.

"அப்புறம்?" என்று ஆவலுடன் காதுகளையும் கூ...
தீட்டிக் கொண்டான்.

"உன் தாத்தாவோ கொஞ்சம் கூட அசரலை...
அவர் ஜமீன்தார்கிட்ட ஒரு விஷயத்த மட்டு...



சொன்னார். இந்த தண்டனையை நான் சந்தோஷமா
ஏத்துக்கறேன். நாகராஜா தான் எங்க குல தெய்வம்.
அந்த நாகராஜன் தப்பு செய்யாத என்னை நிச்சயம்
தண்டிக்க மாட்டான். அதேசமயம் என் பைல இந்த வைர
மோதிரத்தை போட்டது யார்னு எனக்கு தெரியும்.
அவரும் என் கூட இந்த சந்தர்ப்பத்துல பாம்புப் புத்துக்
குள்ள கை விடணும்ன்னு சொன்னார். ஜமீன்தாரும்
யாருன்னு கேட்கவும் அவர்கூட இருந்த ஜமீனோட
சொத்துக்களை பராமரிக்கற ராயசம்கறவரை
கைகாட்டினார். ராயசம் தான் நிரபராதின்னு சொல்லிப்
பார்த்தார். அது பாம்பு சொல்லட்டும்னு சொல்லி
மேகமலை சிவன் கோவில் பாம்பு புத்துக்குக் எல்லாரும்
போனாங்க. உன் தாத்தா ஆஸ்திக மந்தரம்னு ஒரு
மந்திரமிருக்கு... அதை சொல்லிக்கிட்டே முதல்ல புத்துக்
குள்ள கையை விட்டார். அதேபோல அவரும் இன்
னொரு பக்கம் கையை விட்டார். அவரை தான் பாம்பு
கடிச்சது. உன் தாத்தா கைல அதே பாம்பு கொஞ்சி
விளையாடினது. அப்ப தான் ஜமீன்தாருக்கும்
புரிஞ்சிச்சு..."

- சாரதா சொல்லச் சொல்ல கருணாகரன்
முகத்தில் ஒரு பிரகாசம்.

"அம்மா இதை எல்லாம் நீ ஏன் என்கிட்ட
முந்தியே சொல்லல?" - என்று கேட்டான்.

"அவசியம் ஏற்படும்போது தானேப்பா பேச
முடியும்?"

"அப்புறம் என்ன ஆனது?"

"என்ன ஆகும்... உன் தாத்தாவுக்குத்தான்
நல்ல பெயர். அப்ப தான் அவர் சொன்னாராம்... என்
குடும்பத்துல யாரையும் பாம்புகள் எதுவும் செய்யாது.

காரணம் நாங்க ஆஸ்தீகர்ங்கற முனிவரோட வ
துல வந்தவங்க... நாங்க நஞ்சாகிய விஷத்தையே
சாலும் உயிர் போகாது. 'நஞ்சுண்டாலும் நன்
சுண்டு எமக்குன்னு' பாட்டாவே பாடினாராம்."

- சாரதா பெருமிதம் பொங்க கூறினாள்.

"நஞ்சுண்டாலும் நன்னெஞ்சுண்டு எமக்
நல்லாத்தாம்மா இருக்கு இந்த வரிங்க."

"பின்ன... உன் தாத்தா ஒரு கவிஞரும்கூட
அவர் பேரன். நஞ்சுண்டார் வம்சம். எந்த பாம்
உன்னை எதுவும் செய்யாது... தைரியமா போ. இன்
சொல்லப் போனா அந்த ஊர்ல நீ செய்யப் போ
பிசினஸ்தான் உனக்கு நிறைய பணத்தையும், புகழை
தரும்..."

- சாரதாவின் நம்பிக்கை ததும்பும் பே
கருணாகரனுக்குள் ஒரு புது ரத்தத்தையே பாய்ச்
தொடங்கியது.

"சும்மா நீ தாத்தா பத்தி சொன்னப்போ
ஆஸ்தீகர்னு ஒரு முனிவரைப் பத்தி சொன்னி
யாரும்மா அது?"

"அதுக்கு நான் உனக்கு ஒரு புராண கதையை
சொல்லணும். சுருக்கமா சொல்றேன். பரீஷித்துன்
ஒரு ராஜா இருந்தான். இவன் ஒரு நாள் வேட்டைக்
போனப்ப காட்டுல தவம் செய்துகிட்டிருந்த முனிவ
கழுத்துல ஒரு செத்துப் போன பாம்பை மாலைய
போட்டுட்டு வந்துட்டான். அவர் கண்ண மூ
தவத்துல இருந்தார். இவன் அவரை கூப்பிட்
பாத்துருக்கான் அவர் தவம் கலையலை. இவனுக்கே
நானொரு ராஜா கூப்பிட்டேன். நீ என்னை மதிக்கா
கண்ண மூடிகிட்டா இருக்கேன்னு கோபம். அப்பதா



பக்கத்துல ஒரு பாம்பு செத்துக் கிடந்தது. பார்த்தான். அதை எடுத்து அந்த முனிவர் கழுத்துல போட்டுட்டு இந்த அவமானமே உனக்கு போதும்னு சொல்லிட்டு புறப்பட்டு போயிட்டான்.

ஒரு நாள் முனிவர் தவம் கலைஞ்சு கண் விழிச்சார். கழுத்துல செத்த பாம்பு கிடக்கவும் ஞான திருஷ்டியால யார் அப்படி செய்ததுன்னு தெரிஞ்சு கிட்டார். அப்ப அந்த முனிவரோட மகனும் வந்து அதை பார்த்து கோபத்தோட உச்சிக்கே போய்ட்டான்.

அந்த காலத்துல முனிவர்களுக்கும் குடும்பம் குழந்தைகள்ளாம் இருந்தாங்க. பிரம்மச்சர்யத்தைவிட இல்லறம் மேலானதுங்கற ஒரு கருத்தும் இருந்தது. ஆகையால தான் அந்த முனிவரும் குடும்பஸ்தரா இருந்தார். அவர் மகனும் அவருக்கு ஏற்பட்ட அவமானத்தால பாதிக்கப்பட்டு, "என் அப்பாவோட கழுத்துல யார் இந்த பாம்பை மாலையா போட்டிருந்தாலும் சரி.. அவனை பாம்பு கடிச்சு கொல்லும்னு சாபம் கொடுத்துட்டான். இந்த சாபத்தால்தான் பரீட்சித்து ராஜாவும் எவ்வளவு முயற்சி செய்தும் தப்பிக்க முடியாம தஷகன்கற பாம்பு கடிச்சி செத்துப் போனான். இதை வெச்சுதான் விதியை யாராலும் மாத்த முடியாதுங்கற ஒரு கருத்தே வலுப்பட்டது."

"சரிம்மா... நீ ஆஸ்திகர் பற்றி சொல்லாம பரீட்சித்து ராஜா பத்தி சொன்னா என்னம்மா அர்த்தம்?"

"அவசரப்பட்றியே கருணா... விஷயத்துக்கு வரேன். இந்த பரீஷித்து மகாராஜாவை தட்சகன்ற பாம்பு கடிச்சு அவன் செத்துப் போகவும் அது பரீஷித்து ராஜாவோட மகனான ஜெனமே ஜெயன்கறவனை

ரொம்பவே பாதிச்சது... பாம்புன்னு ஒன்னு இரு
தால தானே தன் அப்பா தப்பு செய்தார். அந்த இ
தையே பூண்டோட அழிச்சிட்டா அந்த இனத்
யாருக்கும் எந்த பிரச்சனையும் இருக்காதுன்னு
நினைச்சான். அதுக்காக ஒரு யாகம் பண்ணான். அ
யாகத்துல இந்த உலகத்துல இருக்கற அவ்வள
பாம்புகளும் வந்து விழுந்து சாகணும்கறது
பாம்புகளோட தலையெழுத்து...”

“அது எப்படிம்மா இவன் யாகம் பண்ண
பாம்புகள் சாக முடியும்? அப்படி எல்லாம் ஒரு இனத்
ஒரு மனுஷனால அழிச்சுட முடியுமா?”

“நல்ல கேள்விதான்... யாகம்கறது ஒன்னு
சாதாரண விஷயம் கிடையாது. அந்த யாகத்தின் பே
சொல்லப்பட்ற மந்திரங்கள் எப்பேர்ப்பட்ட பாம்பை
அந்த யாகத்துக்கு இழுத்துக்கிட்டு வந்துடும். அ
மந்திரத்துக்கு அப்படி ஒரு சக்தி...”

“அப்படி ஒரு மந்திரம் இப்பவும் இருக்கா... அ
சொல்லி டெஸ்ட் பண்ணா பாம்புகள் வந்து செ
போகுமாம்மா... ஏன் கேக்கறேன்னா நாகனாங்குறிச்
திரியற பாம்புகளை அப்படி அழிச்சாதான் உண்டு.”

“நீ தப்பா யோசிக்கறே கருணாகரா... பாம்பு
தெய்வத்துக்கு சமமானவை. பாம்பை பற்றி ஆழ
யோசிச்சுப் பாத்தா நமக்கு பல பெரிய உண்மைக
தெரியவரும். அதுக்கு கையும் கிடையாது, கால
கிடையாது காதும் கிடையாது. கண்ணும் வாயும் மட்டு
தான் அது வாழறதுக்கு உதவற புலன்கள். இந்த இரண்
மட்டுமே ஒரு மனிதன்கிட்ட இருந்தா அவனால எ
யாவது செய்ய முடியுமா? இருந்த இடத்துலே
பட்டினி கிடந்து சாக வேண்டியதுதான். அடுத்



அதுக்கு உயிருள்ள தவளை புழு பூச்சிகள் தான் உணவு. இதனால அதுக்கு உயிர் விழுங்கின்னும் ஒரு பேர் உண்டு. அந்த வகையில் ஒரு பாம்புக்குள்ள ஒராயிரம் உயிர்கள் உள்ள அடங்கிடும். எல்லாத்துக்கும் மேலா அது தண்ணிக்குள்ளயும் இருக்கும் நிலத்துலயும் இருக்கும். நிலத்து அதிர்வை வெச்சே அது வர்றவங்கள போறவங்கள கண்டு பிடிச்சிடும். நம்ப நாக்குல விஷம் பட்டாலே நாம இறந்துடுவோம். ஆனா அது வாய்லயே எப்பவும் விஷம் இருந்தும் அதை அது எதுவும் பண்றது கிடையாது. அந்த வகைல அது நம்மை விட பலமானது தானே?”

- சாரதா பாம்புகளைப் பற்றி ஒரு பி.ஹெச்.டி. பண்ணுமளவு விஷயங்களைச் சொல்லிக் கொண்டே போனாள். கருணாகரன் வாய் பிளந்துவிட்டிருந்தான்!

# 7

‘அரவம் ஒரு அதிசயம்...
அதன்
வாழ்வே ஒரு ரகசியம்
அரவம் ஒரு ஆச்சரியம்...
அதன்
உருவம் உயிரில் பயம்
சொரியும்.....’

**சா**ரதாவின் பாம்பைப் பற்றிய விளக்கங்கள் தொடர்ந்தன. ‘பாம்பைப்பத்தி இப்படி இன்னும் நிறைய பேசலாம்.... ஒரு உண்மை தெரியுமா உனக்கு.... நம்ம உயிரணுவை டெலஸ்கோப்ல பார்த்தா அதுல பாம்பு வடிவம்தான் தெரியும்... நம்ப உயிர் மூலமே பாம்புதான்.

பரிணாம வளர்ச்சியாலதான் நாம இப்படி கை கா
காது மூக்குன்னு உறுப்புகளையும், பேசற ச
யோசிக்கற சக்தி இதை எல்லாம் அடைஞ்சிருக்
அதனாலதான் பாம்புகளை நாம் அடிச்சு கொ
சர்ப தோஷம்கற ஒரு விஷயம் நம்மை பிடிச்சுக்குது. ச
தோஷம் மட்டும் ஒருவருக்கு வந்துட்டா அவரு
முதல்ல நல்லபடியா கல்யாணம் நடக்காது - நடந்தா
பிள்ளை பிறக்காது. ஏன்னா பாம்பைக் கொன்ன பா
அவனோட உயிரவைப் போய் சேர்ந்து அதுவும் செத்
போகும்."

- சாரதா இப்படி சொல்லவும் கருணாகரனு
அது நம்ப முடியாத ஒன்றாக இருந்தது.

"என்னம்மா நீங்க... கடைசில பாம்பை நம்மோ
ஜீன்ஸோட போய் முடிச்சு போட்டீங்களே... நம்ப
மாதிரி இல்லையே...?"

"இந்த உலகத்துல பல விஷயங்களை நாம நம்ப
தாம்பா ஏத்துகிட்டாகணும். நான் பாக்கறத மட்டு
தான் நம்புவேன்னா நம்ம தலைக்கு பின்னால இருக்
எதையும் நாம இல்லைன்னு தான் நினைக்கணு
ஆனா அந்த வகைல நாம பாக்க முடியாத ஒரு பா
யான பின்பகுதியை நம்பி நாம ஒத்துக்கறோ
காரணம் கேட்டா திரும்பிப் பார்க்கும்போது இரு
துன்னு சொல்லிடுவோம். இப்ப உன் கூட பே
கிட்டிருக்கேன். உன் வயித்துல குடல் இருக்கு. மார்
கிட்ட இதயம் இருக்கு. உடம்பு பூரா ரத்தம் இருக்
இது பார்வைக்கு தெரியாததால அதை இல்லைன்
சொல்லிட முடியாது இல்லையா?"

"அம்மா உங்க லாஜிக் நல்லாதான் இருக்
ஆனாலும் பாம்போட நம்ப உயிரணுவை தொடர்
படுத்தறத என்னால ஏத்துக்க முடியாது..."



கருணாகரன் தான் ஒரு இந்த கால இளைஞன் என்பதுபோல பேசினான்.

"அப்ப ஏம்ப்பா அதை பார்த்தா உயிரே நடுங்குது..."

"அது உயிர் போயிடும்கற பயத்தால..."

"சிங்கம் புலியை பார்க்கும்போது அந்த அளவு பயம் வர்றது இல்லையே...?"

"சரி நீங்க என்ன சொல்ல வர்றீங்க...?"

"பாம்புக்கும் நம்ம ஆழ் மனதுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கு கருணா... நம்ம உடம்புக்குள்ளேயே குண்டலினிங்கற பேர்ல ஒரு பாம்பு இருக்கிறதா பாம்பாட்டி சித்தர் சொல்றாரு..."

"போதும்மா... ஆஸ்தீகர்ல ஆரம்பிச்சு எங்கெங்கியோ போயிட்டீங்க..."

"ஆஸ்தீகர் கிட்டதான் வரப் போறேன். இந்த ஜெனமே ஜெயன் பாம்புகளை அழிக்க நடத்தின யாகத்தைத் தடுத்து நிறுத்தி பாம்பு இனத்தை காப்பாத்தினவர்தான் ஆஸ்தீகர்ங்கற முனிவர். இவர் ஜரத்காருங்கற நாககன்னிக்கு பிறந்தவர். மிகப் பெரிய தவசி. இவர் வந்து ஜெனமே ஜெயன் தவத்தை நிறுத்தச் சொல்லவும் ஜெனமே ஜெயன் நிறுத்தினான். இல்லேன்னா குரு சாபத்துக்கு ஆளாக வேண்டி வரும்கற பயம்."

"எப்படிம்மா... ஒரு இனத்தையே அழிக்கற அளவு கோபத்துல யாகம் பண்ணவன் ஒரு குருவுக்கு பயந்து நிறுத்தினான்கறது நம்பற மாதிரி இல்லையே..."

"இந்த காலம் நல்ல விஷயங்களை சொல்லிக் கொடுத்திருக்கோ இல்லையோ நல்ல விஷயங்களை

சந்தேகப்பட அது நல்லாவே கத்துக் கொ
துருக்கு..."

"என் கேள்விக்கு பதில் சொல்லும்மா - காலத்
குத்தம் சொல்லாதே..."

"ஏம்ப்பா பரீட்சித்து ராஜாவுக்கு பிரச்சி
வந்ததே ஒரு குருவோட சாபத்தால தானே?"

"ஓஹோ அதனால பையன் கிட்டயும் ஒரு பய
சொல்ல வர்யா?"

"நிச்சயம்... அந்த காலத்துல தவத்துல சி
ரிஷிகள் கடவுள்களான சிவன், விஷ்ணு, பிரம்மாவுக்
சாபம் கொடுத்திருக்காங்க..."

"அப்ப கடவுளைவிடவே அவங்க பெ
வங்களா?"

"அப்படி கேக்கக்கூடாது... தவம்கறது கடவுளை
கூட தட்டிக் கேக்கற வல்லமை உடையதுன்னு அர்த்
பண்ணிக்கணும்."

"சரி... ஆஸ்தீகர் வந்தாரு.... யாகத்தை தடுத்தா
அப்புறம்...?"

"அப்புறம் என்ன... பாம்பு இனம் அழியாம தடுத்
நிறுத்தப்பட்டது. அதனாலதான் இப்பவும் அந்த இன
உயிரோட இருக்கு..."

"சரிம்மா... பாம்புங்கறது சக்தியை குறிக்குதுன்னு
சொன்னியே அது எந்த அர்த்தத்துல?"

"அதை இப்ப நான் கதை சொன்ன மாதி
சொல்லி புரிய வைக்க முடியாது. இந்த விஷயத்தை
உன் கல்லூரிப் படிப்புக்கு பயன்பட்ட அறிவை
மட்டும் வெச்சும் புரிஞ்சுக்க முடியாது. பாம்பை முதல்ல



கடவுளுக்கு இணையா நினைக்கணும். அப்புறம் அதன் மேல பக்தி செலுத்தணும். அந்த பக்தி உணர்ச்சி ஒருநாள் பாம்புங்கறது எந்த வகைல சக்தியை குறிக்குதுங்கறத புரிய வைக்கும்.

ஒரு மிலிட்டரிகாரரோட உடைல இருக்கற பதக்கங்களையும், பட்டைகளையும் வெச்சு அவரோட சாதனையையும், அவர் மிலிட்டரில எந்த பொறுப்புல எந்த பதவில இருக்கார்னு சொல்ல முடிஞ்ச மாதிரி பாம்பை வெச்சே தெய்வ நிலைகளை நாம தெரிஞ்சுக்கலாம். உதாரணமா சிலரோட கழுத்துல பாம்பு இருக்கு - பிள்ளையாரோ பாம்பை அரைஞாண் கொடியாகவே கட்டிகிட்டிருப்பார்.

சக்தியே பாம்பு குடை பிடிக்கும்... கிருஷ்ண பரமாத்மாவோ பாம்போட தலை மேல நாட்டியமே ஆடுவார். விஷ்ணு பாம்பு மேலயே படுத்திருப்பார். முருகன் காலடில பாம்பு இருக்கும். இப்படி நம்ம மதத்துல கடவுள்களோட பாம்புகள் இருக்கிறதுக்கு பின்னால இருக்கற விதத்தை வெச்சே அர்த்தம் சொல்லலாம். ஒவ்வொண்ணுக்கும் ஒரு பொருள். அந்தப் பொருளை தத்துவமா ஒளிச்சி வெச்சிருக்காங்க..."

"அம்மா.... உனக்கு இவ்வளவு விஷயங்கள் தெரியும்கறதே எனக்கு இப்பத்தான் தெரியும். நீ சொல்ற விஷயங்களுக்கு பின்னால எந்த அளவுக்கு உண்மையான பொருள் இருக்குன்னு எனக்கு தெரியாது. ஆனா நாகனாங்குறிச்சிக்கு போய்ட்டு வந்ததை வெச்சு எனக்குள்ள பல புது கருத்துக்கள் உருவாகியிருக்கு... கேள்விகளும் உருவாகியிருக்கு..."

"அது என்னன்னு நீ சொல்லு. பாம்பு... புரிஞ்சிகிட்டிருக்கற வெச்சு எனக்கு தெரிஞ்... நான் சொல்றேன்...."

"அப்ப சரி... அம்மா.... அந்த காலத்துல ... ரோட அப்பாவோ இல்ல தாத்தாவோ ஒரு... குடும்பத்தை அழிச்சிருக்காங்க. பதிலுக்கு... குடும்பத்தை பாம்புகள் நிம்மதியா வாழ விடாம... கிட்டிருக்குன்னு அவர் சொன்னார். அதோட ... தான் அவ்வளவு அழகான பூர்ணிமா தேவிக்கு... முப்பதை கடந்தும் இன்னும் கல்யாணமாகலை."

"இப்படி ஒரு நிலை ஏற்பட வாய்ப்பு இ... கருணாகரா. அதுலயும் சர்ப சாபம் ரொம்ப கொ... யானது."

"அது சரிம்மா... அதுக்காக நடு ரோட்டுல ... படம் விரிச்சுகிட்டு நிக்கும்போது கூட அதை கா... ஏத்தி கும்புட்றதுல்லாம் டூ மச் இல்லையா?"

"ஓ அப்படி எல்லாமும் நடந்ததா?"

"நடந்ததாவா....? ஊருக்கு வர்ற தபால்காரர் ... தபால் இருக்கோ இல்லையோ... கற்பூரமும் தீப்பெ... யும் கட்டாயம் இருக்கு! அதேபோல ஊருக்குள்... நுழையறவங்க ஊர் எல்லைல இருக்கிற நாகர் சிலை... வணங்கலைன்னா அவங்களுக்கு ஆபத்தாம்!"

நம்ம புரோக்கர் சவரிமுத்து சும்மா இல்லா... ரோட்டை மறிச்சி நின்ன பாம்பு மேல தன் ஜீப்பை ஏத்... அதை காலி பண்ணிட்டு போய்ட்டாரு. பதிலுக்கு அ... பாம்போட சார்பா ஒரு பாம்பு சவரிமுத்துவை தே... வந்து கடிச்சதுல அவர் இப்ப ஆஸ்பத்திரில இருக்கா... இதை எல்லாம் கூட்டி கழிச்சா நீ சொன்ன புராண... கதையை விட நம்ப முடியாததா இருக்கு.



விஞ்ஞானமோ பாம்பு பால் குடிக்காது - அதுக்கு காதும் கிடையாது. மற்றபடி அதுக்கு புத்தி, மனசு, பழிவாங்கற குணம்னு ஒரு எழவும் கிடையாதுங்குது... நீயோ இப்படி ஒரு கதை சொல்றே... எனக்கோ வித்யாசமான அனுபவங்கள்... இதுல எது உண்மை எது பொய்னு தெரியலியேம்மா..."

- கருணாகரனின் அலுப்பு சாரதாவை வெகு ஆழமாக சிந்திக்க விட்டது. புருவத்தை இடுக்கிக் கொண்டு சிந்தித்தாள்.

"என்னம்மா.... என் கேள்வி உன்னையே குழப்பிடிச்சா?"

"இல்ல கருணா.... பாம்பை பாக்க ஒரு விதி அமைப்பு இருக்கு. அது கையால நாம சாகறதோ, இல்ல நம்ம கையால அது சாகறதோ கூட ஒரு விதி அமைப்புதான்... பாம்புகள் பழி எல்லாம் வாங்காது. இன்னும் சொல்லப்போனா அது நம்மால அடி பட்டு சாகும்போது பாவிங்க அடிச்சுட்டாங்களேன்னு நினைக்கல்லாம் அதுக்கு தெரியாது. ஆனா அதை துன்புறுத்தற நம்ம மனசுக்கு நாம என்ன செய் தோம்கறது தெரியுமில்லியா?"

"நிச்சயமா..."

"நம்மோட அந்த எண்ணம்தான் வேலையை காட்டும். அதுக்குதான் அளவிட முடியாத சக்தி உண்டு..."

"முடிவா நீ என்ன தான் சொல்லவரே..."

"ஜமீன்தார் குடும்பம் பாம்பை அடிச்சு கொன்னுருக்கலாம். அதனால அந்த பாம்பை கொன்ன சர்ப்ப தோஷமும் வந்து சேர்ந்துருக்கலாம். அப்படி வர்ற சர்ப்ப

தோஷம் சந்ததிகளை தான் பாதிக்கும். அந்த குழந்தை பிறக்காமலும், தோல் வியாதி கஷ்டப்படுவாங்க. இல்ல கல்யாணம் நட நடந்தாலும் விவாகரத்து ஆயிடும்... இப் விபரீதங்கள் தலையெடுக்கும். ஆனா எந்த பாம்புகள் தங்களை ஜேம்ஸ்பாண்டா நினை தேடிப் பிடிக்கறதோ பழிக்குப் பழி வாங்கறதோ இல்லவே இல்லாத பாம்பை கேவலப்படு விஷயங்கள்னுதான் நான் நினைக்கறேன்..."

"ஆனா சவரிமுத்துவை ஒரு பாம்பு தாக் கடிச்சதே..?"

"அது துரத்தி வந்ததா நிச்சயம் இருக்கா செயலா வந்ததா இருக்கலாம்."

"சரிம்மா. நான் நாகர் சிலையை கு மறுத்தப்போ என் கார் விபத்தாகி சேத்துல இறங் என் உதவியாளர் கிரிதர் இறங்கி சாமி கும்பிடவும் புதை சேத்துல இருந்து வண்டியை வெளியே எ முடிஞ்சது... இதை என்னன்னு சொல்வே?"

"ரொம்ப சிம்பிள். உனக்கு ஏற்பட்டது ரொம் தற்செயலான விஷயம்..."

"இடம் வாங்க வந்தவங்க எல்லாம் பாம்பு கடி செத்துப் போயிருக்கறது..?"

"அதுவும் தற்செயல்தான்..."

"அது எப்படிம்மா ஒரே சமயத்துல பல தற்செ சம்பவங்கள் நடக்க முடியும்? ஒன்னு நடக்கும் - இ இரண்டு நடக்கும்."

"அப்ப சந்தேகமே வேண்டாம். யாரோ ச வேலை பண்றாங்க."



சாரதாவின் பளிச்சென்ற பதில் கருணாகரனை ஒரு விநாடி மிரட்டியே விட்டது.

"அம்மா... என்னம்மா கொஞ்சம் கூட யோசிக்காம இப்படி சொல்லிட்டே..."

"இதுல யோசிக்க என்ன இருக்கு? நான் தான் பல வருஷமா இந்த பாம்புகள பத்தி நெந்திச்சகிட்டு தானே இருக்கேன். இதுகளுக்கு போலி மரியாதை. பயமுறுத்தறது. அரசியல்வாதி மாதிரி கும்பிட வெச்சப்பாக்கறதெல்லாம் தெரியவே தெரியாதுப்பா..."

"அப்ப உன் வரைல நாகனாங்குறிச்சி பாம்புப் பிரச்சினைக்கு பின்னால மனிதர்கள் தான் இருக்காங்களா?"

"நிச்சயமா..."

"அப்ப உறுதியா பாம்புகளோட கண்ட்ரோல்ல அந்த ஊர் இல்லேங்கறே..?"

"தெய்வாதீனம்கறதோ, அருள்ங்கறதோ சுதந்திர மானது. அருட்தன்மை உடையது. அருட்தன்மை உடையவர்கள் தங்களுடைய எதிரிகளையும் எதிரி களாக நினைக்க மாட்டாங்க. என் கெட்ட நேரம்தான் இப்படி நடக்க காரணம்னு துன்பங்களையோ ஏமாற்றங் களையோ இல்ல இழப்புகளையோ தாங்கிக்குவாங்க. தாங்கிகிட்டாதான் அவன் ஞானியும்கூட...!"

"எப்படிம்மா இவ்வளவு திடமா சொல்றே..."

"ஒரு படி மேல போயே சொல்றேன்... சவாலாவும் சொல்றேன். எந்த பாம்புச் சாபத்தால் தன் மகளுக்கு கல்யாணம் கூட நடக்க மாட்டேங்குதுன்னு அந்த ஜமீன்தார் நினைக்கறாரோ அவர் தன் மகளை உனக்கு தர்றதா இருந்தா அந்த பெண்ணை மருமகளா ஏதுக்க

நான் தயார். அப்ப தெரியும் நான் செ...
இல்ல பிராக்டிகலான்னு."

- சாரதா பூர்ணிமா தேவியிடம் வந்த...
கருணாகரனே ஜிவ்வென்று ஆகிவிட்டான்...

"அம்மா..."

"உனக்கு அந்த பெண்ணை பிடிச்சிருக்கா..."

"அது வந்தும்மா..."

"மென்னு துப்பாதே... வெட்டு ஒன்னு து...
இரண்டுன்னு பதில் சொல்லு..."

"ரொம்ப பிடிச்சிருக்கும்மா..."

"அப்ப பேசி முடிச்சிடட்டுமா..."

"தாராளமா..."

"உனக்கு அதனால ஒன்னும் பயமில்லையே"

"எனக்கு தான் நீ இருக்கியே... நீ இருக்கும்...
எனக்கு என்னம்மா பயம்..."

"இது போதும் கருணா... நான் உனக்கு இப்ப...
மந்திரத்தை உபதேசிக்க போறேன். நல்லா ம...
வாங்கிகிட்டு உனக்கு முடியும்போது சொல்லு...
சொல்லுவியா?"

"தாராளமாம்மா..." கருணாகரன் உற்சாக...
சம்மதிக்கவும் சாரதா வேகமாய் பூஜை அறை நோக்...
போனாள்.

திரும்பி அவன் வந்தபோது அவன் கையி...
பதினெட்டு புராணம் என்னும் புராண புத்தக...
அதில் சக்தி புராணத்தில் பரீஷித்து ராஜாவின் க...
உள்ள சர்க்கத்தில் ஆஸ்திகரால் உபதேசிக்கப்பட்...



மந்திரமான ஒரு சம்ஸ்கிருத மந்திரம் அவன் கண்களில் பட்டது அதை சொல்லத் தொடங்கினாள்.

"கருணா... நான் இப்ப சொல்லப் போற மந்திரம் உண்மையானது. ரொம்ப வலிமையானது. இந்த மந்திரத்தை ஒவ்வொரு நாளும் ஜெபிக்கறவங்களை எந்த சர்ப்பமும் எதுவும் செய்யாது."

"அப்படி ஒரு மந்திரமாம்மா அது..?"

"ஆமாம்... நல்லா கேட்டுக்கோ...

ஜாத்காரோர் ஜாத்காரவாம்
ஸமுத்பன்னோ மஹாயசா!
ஆஸ்தீக சத்ய சந்தோ மாம்
பந்த கேப்யோ அபிரக்ஷது!!
அபஸர்ப்ப ஸர்ப்ப பத்ரமிதே
தூரம் கச்ச மஹாயசா!
ஜனமே ஜயஸ்ய யக்ஞாந்தே
ஆஸ்தீக வசனம் ஸ்மரன்...'

- என்று சாரதா மந்திரத்தை கூறவும் கருணாகரனும் அதை நன்றாக உள் வாங்கிக் கொண்டான்.

"இதை நீ ஒரு நாளைக்கு ஒரு வேளை உருக்கமா பக்தியோட சொன்னா கூட போதும் கருணாகரா... உன் மேல் நூறு பாம்புகள் வந்து விழுந்தாலும் ஒரு பாம்பு கூட கடிக்காது..'

"நிஜமாவாம்மா..?"

"சில விஷயங்களுக்கு அனுபவம் தாம்பா சரியான பதில்.."

"சரிம்மா... நாம நாகனாங்குறிச்சிக்கு போறோம். அங்கேயே தங்கறோம். அப்பதானே இது பாம்போட...

சாபமா, இல்ல மனுஷங்களோட பாபமாங்கறது

தெரியும்."

"நீ யார் காரணம்கறத கண்டுபிடி... நான் எ

மருமகளை அங்க கண்டுபிடிக்கறேன்..."

"அம்மா ஜமீன்தார் மலேசியாவுக்கு போய் வாழ

மூட்ல இருக்கார். அந்தஸ்த்து ஜாதின்னு யோசிச்சா நாம

தான் அடிபடுவோம்..."

"உனக்கு எதுலடா குறைச்சல்... ஊரே வேண்டாம்

கற பொண்ணை ஆசையா நாம பொண்ணு கேக்க

றோம்கறதே ரொம்ப பெருசுடா... நிச்சயம் ஜமீன்தார்

சம்மதிப்பார்ங்கறது தான் என் அபிப்ராயம்."

சாரதாவிடம் அசாத்ய நம்பிக்கை... கருணாகரன்

வரையிலோ எங்கோ ஆரம்பித்து அது எங்கோ வந்து

நின்றது போலிருந்தது. இருப்பினும் அம்மா என்ன

தான் புராணக் கதைகளை சொல்லியிருந்தாலும் அதை

நாகனாங்குறிச்சியில் தொடர்பு படுத்தாமல் மனிதச் சதி

என்று ஒரு வார்த்தையில் சொன்னதுதான் அவன்

வரையில் அதிர்ச்சி ஆச்சரியம் என்று எல்லாவற்றிலும்

மூழ்க வைத்திருந்தது!

# 8

'மாந்தர்கள் புரிவது
தந்திரம்
மனமதில் ஒளிர்வது
மந்திரம்
மந்திரத்தாலே வந்திடும்
சுந்தரம்
சுந்தரமே என்றும்
சுகம்தரும்!'



சாரதாவோடு கருணாகரன் நாகனாங்குறிச்சிக்கு கிளம்பிவிட்டான்! காரில் போகும் வழியில் கருணாகரன் கிரிதருக்கு போன் செய்தான்.

"கிரிதர்..."

"குட்மானிங் சார்..."

"வெரிகுட்மார்னிங்... அப்புறம் கிரிதர் நான் இப்ப நாகனாங்குறிச்சிக்கு போய்கிட்டிருக்கேன். ஆபீசுக்கு வர முடியுமான்னு தெரியல... ப்ளீஸ் டேக் கேர்..."

"யெஸ் சார்... என்ன சார் திடீர்னு நாகனாங் குறிச்சிக்கு..."

"என்ன கிரிதர் பயப்பட்டீங்களா?"

"எப்படி சார் பயப்படாம இருக்க முடியும். அந்த அனுபவங்களை நினைச்சுப் பாருங்களேன்..."

"உண்மைதான்.... ஆனா இந்த விஷயத்துல ரொம்ப பயப்படுவாங்கன்னு நான் நினைச்ச என் அம்மாவே கொஞ்சம்கூட பயப்படலைன்னா பாத்துக் குங்களேன்..."

"அதான் சார் எனக்கும் ஆச்சரியமா இருக்கு..."

"இன்ஃபாக்ட் நாகனாங்குறிச்சிக்கு போய் ஜமீன்தாரை பார்க்கலாம்னு சொன்னதே என் அம்மாதான். இப்ப அவங்களும் என்கூட கார்ல வந்துகிட்டிருக்காங்க..."

"இது இன்னும் ஆச்சரியமா இருக்கு சார்... நான் கேக்கறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க... அம்மாகிட்ட

நமக்கு ஏற்பட்ட எல்லா அனுபவங்களையும் சொ
னீங்களா?"

"எல்லாத்தையும் ஒண்ணு விடாம சொன்னேன்... என்ன நம்புங்க..."

"அப்புறம் எதை வெச்சு சார் அம்மா பயப்படாம இருக்காங்க..."

"அதை நீங்க அம்மாகிட்டயே கேளுங்க... நான் போனை அம்மாகிட்ட தரேன்...'

- கருணாகரன் போனை சாரதாவிடம் தந்தவனாக, "அம்மா லைன்ல கிரிதர் இருக்காரு... பேசுங்க." என்றான்.

"என்னப்பா கிரிதர்... எப்படி இருக்கே?"

"நல்லா இருக்கேன்மா... நீங்க எப்படி இருக்கீங்க."

"எனக்கென்னப்பா குறை... தொழில்ல சக்கைப் போடு போட்ற மகன். அவனுக்கு உறுதுணையா உங்களப் போல நல்லவங்க இருக்கும்போது."

"அதெல்லாம் சரிம்மா... இந்த நாகனாங்குறிச்சி இடம் விஷயத்துல நீங்க இண்ட்ரஸ்ட் காட்றதுதாம்மா எனக்கு பெரிய சர்ப்ரைசா இருக்கு..."

"ஏம்பா... பாம்புன்ன உடனேயே பயந்து போய் தொடை நடுங்குவேன்னு நினைச்சியா?"

"பாம்புன்னாதான் படையே நடுங்குமேம்மா.. அதுலயும் நாகனாங்குறிச்சில நடக்கற விஷயங்கள கோர்வையா புரிஞ்சுக்கறதே கஷ்டமா இருக்கு எனக்கு... அதனால சொன்னேன்..."

"அப்ப அதை என்னன்னுதான் பார்த்துடுவோமே..."



"எதுக்கும்மா... நமக்கு வாழ்க்கைல இதைவிட முக்கியமான வேலையெல்லாம் இருக்குதே.."

"என் வரைல இதுவும் ஒரு முக்கியமான வேலை தான் கிரிதர். பாம்பைப் பத்தி இந்த சமுதாயத்துல பலவிதமான கருத்துக்களும் நம்பிக்கைகளும் இருக்க லாம். ஆனா என் வரைல அது கடவுள். குறிப்பா எங்க குடும்பம் வரைல அதுதான் எங்க குலதெய்வம்."

"அதனால எந்த தப்பும் நடந்துடாதுன்னு நீங்க நினைக்கறீங்களா?"

"நிச்சயமா... அதுல என்ன சந்தேகம்...?"

"இல்லம்மா...... உங்க நம்பிக்கையை நான் குத்தம் சொல்றதா தயவு செய்து நினைக்க வேண்டாம். எனக் கென்னவோ நீங்க... நீங்க....."

"என்ன... மூடத்தனமா நடந்துக்கறதா சொல்ல வர்றீங்க - அப்படித்தானே?"

"ஆமாம்மா... இது உயிர் பிரச்சனை! புரோக்கர் சவரிமுத்து கூட இன்னும் பூரண குணமாகலை. ஆஸ்பத்திரியில்தான் இருக்கார்."

"அவர் விஷயமெல்லாம் எனக்கு தெரியாது. ஆனா கருணா வரைல நிச்சயம் எந்த தப்பும் நடக்காது. அதோட நான் மலிவான விலைல வர்ற இடத்தை வாங்கப் போறதா மட்டும் நினைச்சுடாதீங்க..."

"வேற நோக்கமும் இருக்காம்மா...?"

"நிச்சயமா... சொல்லப்போனா அதுதான் என் வரைல முக்கியம். இந்த நிலம் நீச்சு, அதுல பூந் தோட்டம் வியாபாரம்கறதெல்லாம் எனக்கு ஒரு விஷயமே இல்லை..."

"அது என்னம்மா?"

"சொல்றேன். ஜமீன்தாரையும் அவர் மகளையும் நான் பாத்த பிறகு சொல்றேன்..."

"புரிஞ்சு போச்சும்மா... நீங்க சாருக்கு பொண்ணு பார்க்க போறீங்க..."

- கிரிதர் படுவேகமாய் புரிந்து கொள்ளவும் சாரதாவுக்கே அது ஆச்சர்யமளித்தது.

"பரவாயில்ல கிரி... உனக்கு ரொம்பவே கற்பூர புத்தி..."

"அம்மா பாத்தும்மா.... அந்தப் பெண் ரொம்பவே அழகா இருக்காங்க. சாருக்கு பொருத்தமான ஜோடியும் கூட... ஆனா ஜமீன்தார் குடும்பமே பெரிய மர்ம தேசமாதான் தெரியுது. இந்த பாம்புச் சாபத்தால ரொம்பவே சிக்கிக்கிட்டிருக்கறது அவங்க தான்..."

"எல்லாத்தையும் புரிஞ்சுக்கவும் தெரிஞ்சுக்கவும் தானே போறேன்."

"நல்லதும்மா... எல்லாம் நல்லபடியா நடந்தா சரி... ஆனா ஜமீன்தார் ஜாதி, அந்தஸ்த்து பார்க்காம பொண்ணு கொடுப்பாராங்கறது ரொம்ப பெரிய கேள்வி.."

"நாகராஜன் அருளால எல்லாம் நல்லபடியாவே நடக்கும்னு நான் நம்பறேன்..."

- சாரதா ஒரு கேள்விக்கு கூட சஞ்சலமோ சலனமோ அடையவில்லை. ஆனால் அவள் கருணாகரனுக்கு பெண் கேட்கத்தான் வருகிறாள் என்பது கருணாகரனுக்கும் தெரியவில்லை.

"என்னம்மா கிரி ரொம்ப பயப்படறாரா?"



"ஆமாம்ப்பா... ஜாக்ரதை - எதுக்கு ரிஸ்க்குன்னு ரொம்பவே பயப்படறான்.."

"ஊர் உலகமே பயப்படும்போது அவர் தானா பயப்பட மாட்டார். ஆமா ஜமீன்தாரையும் அவர் மகளையும் பார்த்த பிறகு சொல்றேன்னு ஏதோ சொன்னீங்களே... என்னம்மா...?"

"பார்க்கும்போது நீயும் தெரிஞ்சுக்கதானே போறே?"

- அவனை அழகாக சமாளித்த சாரதா காரின் விண்டோ வழியாக வெளியே பார்த்த போது தார்ச் சாலையில் இருந்து வளைந்து நாகனாங்குறிச்சிக்கு செல்லும் சாலையில் திரும்பியது கார்.

சிலுசிலுவென்று காற்று!

"கார் ஏ.சி.யை நிறுத்து... கண்ணாடியை இறக்கு இயற்கையான காத்து மேல படட்டும்..." என்றாள்.

அவனும் அவ்வாறே செய்தான். அப்படியே "அம்மா இங்க இருந்தே ஊர் ஆரம்பமாயிடுது..." என்றான்.

கச்சிதமா நாகர்சிலை உள்ள சாலை முக்கு பகுதியும் வந்தது. யாரோ இரண்டு பேர் கற்பூரம் ஏற்றி வணங்கிக் கொண்டிருந்தனர்... சற்று தொலைவில் சாலை மேலான பாலத்தின் திட்டின் மேல் ஒரு வயதானவர் கையில் ஒரு கோலுடன் அமர்ந்திருந்தார்.

"அம்மா இந்த நாகர்சிலைதான் ஊரோட எல்லை... ஊருக்குள்ள வர்றவங்க இதை கும்பிட்டுட்டுதான் வரணுமாம். போகணுமாம். மதிக்காம போனா பாம்புகளால ஆபத்தாம்..."

- சுருக்கமாக அதன் பின்புலத்தை கூ...
காரை நிறுத்தச் சொல்லி இறங்கினாள் சாரதா.
பார்த்தபடியே அருகில் சென்றவள் துளியும் கூச்...
தேக்கமோ இன்றி தரையில் மண்டியிட்டும் வ...
முடித்தாள்.

பார்த்துக் கொண்டே இருந்தார் அந்த
பெரியவர்.

திரும்பவும் காரில் ஏறிக் கொண்டு புறப்...
சமயம் அவரைத் தாண்டும்போது கருணாகரன் அ...
பார்த்தான். அவர் கோலை முன்னால் நீட்டி கா...
தடுத்து நிறுத்தினார்.

"என்ன பெரியவரே?"

"நீ நேத்தோ முந்தா நேத்தோ இந்த ஊருக்கு வ...
தானே?"

"ஆமாம்..."

"பரவால்லியே தைரியமா திரும்பி வந்து...
கியே...?"

"ஊருன்னு இருந்தா வருவாங்க. போவாங்...
இதுக்கும் தைரியத்துக்கும் என்ன சம்பந்தம்?

"என்னப்பா.... உன் கூட்டாளி ஒருத்தனை கூ...
பாம்பு கடிச்சிடலை...?"

"அதனால...?"

"ஏன் இப்படி ஆபத்தை தேடி வந்து விலைக்...
வாங்கறீங்க?" - பெரியவரின் கேள்விக்கு முதல் முறையா...
அவரை கூர்மையாக பார்த்தான். எதுவும் பேசாம...
காரை கிளப்பினான்.



"நல்ல காரியம் பண்ணே... இந்த மாதிரி வேலை வெட்டி இல்லாம எதையாவது பேசிக்கிட்டிருக்கறவன எல்லாம் திரும்பிக்கூட பார்க்கக்கூடாது.." என்றாள்.

கார் சிறிது தூரம் சென்ற நிலையில் நடுச் சாலையில் ஒன்றுக்கு இரண்டு நாகங்கள் படம் விரித்த நிலையில் நின்றபடி இருந்தது. அவைகளை பார்க்கவும் சாரதாவுக்கே சற்று அச்சமாகத்தான் இருந்தது.

"அம்மா... பாத்தீங்கல்ல.... இது ஒரு ஆரம்பம் தான்! நாம ஜமீன்தார் வீட்டுக்குப் போய் திரும்பிப் போறதுக்குள்ள நம்ம தலையெழுத்த பொருத்து பல பாம்புகள பாக்கலாம். நமக்கும் என்னவேணா நடக்கலாம்" - என்றபடி காரை நிறுத்தினான்.

"இப்படி வழி மறிச்ச ஒரு பாம்பு மேலதான் புரோக்கர் சவரிமுத்து ஜீப்பை ஏத்திட்டார். பதிலுக்கு அவரை காருக்குள்ளேயே பூந்து ஒரு பாம்பு கடிச் சிடிச்சு..."

"நாம இதை கும்பிட்டா போயிடும் தானே?"

"தபால்காரர் அதைத்தான் செய்தார். இந்த ஊருக்குள்ள வர்றவங்க கைல விரல்கள்கூட இல்லாம இருக்கலாம். ஆனா கட்டாயமா கற்பூரம் இருந் தாகணும்."

"நீ எந்த அர்த்தத்துல சொன்னாலும் சரி... இதை வணங்கறதால எனக்கு எந்த குறைவும் வந்துடாது" - என்றபடியே காரைவிட்டு இறங்கிய சாரதா நேராக அந்த படம் விரித்து நிற்கும் பாம்புகளுக்கு மிக சமீபத்தில் போய் நின்றாள்.

உதடிரண்டும் ஆஸ்திகரின் மந்திரத்தை ஜெபித்த படி இருந்தன. அப்படியே கைகளை கூப்பினாள்.

பார்த்தபடி இருந்த கருணாகரன் பயத்தில் இருந்தா அந்த பாம்புகள் ஒருவேளை சாரதாவை கடிக்க மு பட்டால் அடிப்பதற்கு தோதாக கீழே குனிந் ரோட்டில் கிடந்த கல் ஒன்றையும் எடுத்துக் கொ டான். ஆனால் அதற்கு அவசியமே ஏற்படவில்லை. அந் பாம்புகள் அவள் வணக்கத்திற்கு கட்டுப்பட்டது போ விலகிச் செல்லத் தொடங்கியது. கருணாகரனுக்கே அ ஆச்சரியமாகத்தான் இருந்தது. சாரதா சற்று பூரிப்போ திரும்பி வந்தாள்.

"காரை எடுப்பா.." என்றாள்.

"அம்மா... என்னம்மா பண்ணீங்க... ஒண்ணுமே பண்ணாம அந்த பாம்புங்க போயிடிச்சேம்மா..."

"மனசுல அன்பு... உதட்டுல ஆஸ்திகரோட மந்திரம். இந்த இரண்டும் இருந்தா போதும்பா. எந்த பாம்பும் எதுவும் செய்யாது. நான்தான் சொன்னேன்ல."

- பேசிக் கொண்டே ஏறி அமர்ந்தாள். காரும் சீறத் தொடங்கியது. பக்கவாட்டில் பார்த்தபடி வந்தாள்.

"அம்மா இந்த நிலமெல்லாம் ஜமீனுக்கு சொந்தம்.... இதுல தான் பூந்தோட்டம் போட்ர எண்ணத்துல இருக்கேன். ஆனா ஜமீன்தார் பொண்ணே வேண்டாங்கறா... அதான் நீயும் அவ லெட்டரை பார்த்தேல்ல...?"

"அது அவ நல்ல மனசை காட்டுது கருணா... தங்களோட இடத்தை வாங்கற ஒருத்தருக்கு எந்த கெடுதலும் நடந்துடக் கூடாதுன்னு நினைக்கறா... அவளுக்கு ரொம்ப பெரிய மனசு."

"ஆமாம்மா.... ஆள் மட்டும் அழகு இல்ல... மனசும் அவ வரைல அழகாத்தான் இருக்கு..."



- அவன் ரசனையோட சொன்னதை கூர்ந்து கேட்டுக் கொண்டவள் மெல்லிசாய் சிரித்தாள்.

"என்னம்மா சிரிக்கறே...?"

"நீ அவளை விரும்பறையாப்பா..." அவனுக்கு பதில் கூறாமல் பளிச்சென்று அவள் கேட்கவும் அவனிடம் திக்குமுக்காடல்.

"என்னம்மா உடனே இப்படி போய் கேட்டுட்டே..."

"நீ மழுப்பாம பதில் சொல்லு.."

"அதெல்லாம் இல்லம்மா.."

"கருணாகரா... நான் உன்னை பெத்தெடுத்தவ.. எந்த விஷயத்துல நீ எப்படி நடந்துப்பே... எந்த மாதிரி கேட்டா எப்படி பதில் சொல்வேன்னு இந்த அம்மாவுக்கு தெரியாதுன்னா நினைக்கறே...?"

"அம்மா... அது வந்து..."

"இதோ பார் - மென்னு விழுங்காம ஆமாம்னு பளிச்சின்னு சொல். உனக்கு பிடிச்ச அவளையே நானும் பேசி முடிக்கத்தான் இப்ப உன் கூட வந்துகிட்டிருக்கேன்..."

"ஐயோ அம்மா... என்னம்மா நீ - இடம் பாக்க வரேன்னுதானே சொன்னே?"

"பெண் பாக்கறதையும் நல்ல இடம்னுதான் சொல்வாங்க..."

"எல்லாம் சரி... அந்த பெண்ணுக்கு என்னை பிடிக்கலேன்னு சொல்லிட்டா..."

“எப்ப உன் மேல பரிவோட அவ கடிக்க போட்டாளோ அப்பவே அவ மனசு எனக்கு தெரிஞ்சு போச்சுடா...”

“அம்மா நீ என்னென்னமோ சொல்றே... இந்த ஊர் விஷயத்துலயும் சரி, அவ விஷயத்துலயும் சரி உன் அணுகுமுறையே ஆச்சரியமாத்தாம்மா இருக்கு. உன்னை தைரியசாலின்னு சொல்றதா இல்ல புத்தி சாலிங்கறதான்னே எனக்கு தெரியல...”

- அவன் புளங்காங்கிதப்பட்டுப் போனான். அவன் பார்வை அப்போது நிலத்தின் மேல் குடியிருக்கும் குடிசைகள் மேல் சென்றது.

“என்னப்பா... ஜமீன்தார் இடம்னே? ஊர் மாதிரி நிறைய பேர் குடி இருக்காங்களே...”

“இவங்கலெல்லாம் இந்த இடம் காலியா இருக்கற தால குடிசை போட்டுருக்காங்கம்மா... நாளைக்கு நான் தோட்டம் போடும்போது இவங்க காலி பண்ணிடுவாங்க...”

“அப்படியா..?”

“இல்லேன்னா யாரும்மா வாங்குவா..?”

- அவன் கேள்வியை ஆழமாய் உள் வாங்கிக் கொண்டவள் முகத்தில் தீவிரமாய் சிந்தனை!

# 9

‘பதுங்கி இருப்பதுவே
பாம்பு - ஆனாலும்
அதற்குண்டு பெரும்



மாண்பு - மனிதரில்
பதுங்கி இருப்பவனே
பகைவன் - இவனே
பண்பட வேண்டிய
மனிதன்!’

ஊருக்குள் காரின் பிரவேசம்... வழக்கம்போல வீட்டுக்கு வீடு ஆச்சரியப் பார்வை.

ஜமீன்தாரின் கோட்டை மதில் முன் கார் நிற்கவும் சப்தம் கேட்டு மேல் மாடத்திலிருந்தே எட்டிப் பார்த்தாள் பூர்ணிமா!

கருணாகரனும் சாரதாவும் இறங்கி வருவதைப் பார்க்கவும் ஆச்சரியத்தில் கண்களை அகட்டி விரித்தாள்.

அவள் துளியும் எதிர்பார்த்திராத காட்சி.

சாரதா காரின் டிக்கியை திறந்து தான் கொண்டு வந்திருந்த வெள்ளித் தட்டில் பூ பழங்களை வைத்து அதை கையில் ஏந்தியபடி அந்த பங்களாவினுள் நுழையலானாள். ஜமீன்தார் துரைசிங்கமும் ஆச்சரியத் தோடு எதிர் கொண்டார்.

“வாங்க தம்பி... வாங்கம்மா...”

“ஜமீன்தாருக்கும் என்னோட பணிவான நமஸ்காரங்கள்...”

“அடடே... நான் இப்ப ஜமீன்தார் இல்லம்மா... எந்த காலத்துலயோ ஜமீன்தாராக இருந்தவங்களோட வாரிசு. அவ்வளவுதான்...”

“வாரிசா இருந்தாலும் அந்த பழைய பெருமை பெருமைக்குரியதுதானே?”

"அது என்னவோ வாஸ்தவம்தான். உக்காருங்க"

- ஜமீன்தார் பெரும் பரிவு காட்டினார். பூ பழத்த யும் வாங்கிக் கொண்டார். பூர்ணிமா வரவும் அவ வசம் தந்து சாரதாவுக்கும் அறிமுகம் செய்தார்.

"இவதான் என் மகள்.. பேர் பூர்ணிமா தேவி."

"பேரும் அழகு... நீயும் அழகா இருக்கேம்மா."

- பதிலுக்கு பூர்ணிமா சிரித்தாள்... நடுவில் கண்கள் சற்று படபடக்க கருணாகரனையும் பார்த்தாள்.

அவனுக்கும் புரிந்தது. ஆனாலும் அதை காட்டி கொள்ளாமல் சிரித்தான்.

"என்ன தம்பி... அம்மா இடம் பார்க்கணும்னாங் களா - அதான் கூட்டிகிட்டு வந்தீங்களா?"

"ஆ... ஆமாங்க..."

"நீங்க வருவீங்கன்னு நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கல..."

"இல்லையே நான் இடத்தை வாங்கிக்கிறேன்னு தானே சொல்லியிருந்தேன்..."

"இருக்கலாம்... ஆனா இங்க இருய்யான்னு சொல்லச் சொல்ல கேட்காம வந்த சவரிமுத்துவை பாம்பு கடிச்சு ஆஸ்பத்திரியில இருக்காரு? அதை பாத்துட்டு இங்க வர எப்படி மனசு வரும்?"

"ஆமாங்க... அதை நினைச்சா இப்ப கூட மனசு படபடங்குது."

"அதுக்குதானே நானும் போகாதய்யா... பரிகார பூஜை எல்லாம் செய்ததுக்கு பிறகு போகலாம்னேன்.



கேக்கலியே... என்கிட்ட கூட சொல்லாம இங்க இருந்த போனான்.. இப்ப ஆஸ்பத்திரில கிடக்கறான்...?"

"எப்படியோ... உயிர் பிழைச்சுட்டாருங்களே... அது போதும்..."

"இல்ல தம்பி..." - என்று ஜமீன்தார் ஏதோ சொல்ல வந்தார்.

"இல்லையா... நீங்க எதையோ சொல்ல வந்த மாதிரி தெரியுதே?"

"அத நான் எப்படி சொல்வேன்... அந்த சவரி முத்துவை காப்பாத்தல்லாம் முடியாதாமே."

"என்னங்க சொல்றீங்க...?"

"குணமாகி வீட்டுக்கு வந்தாலும் நல்லபடியா வாழ முடியாது. செத்துப் போன பாம்போட ஜோடி சும்மா விடாது..."

"இல்லீங்க அப்படி எல்லாம் ஆகாது. நீங்க தைரியமா இருங்க." - என்றாள் சாரதா. துரைசிங்கம் கொஞ்சம் அதிர்வோடு பதிலுக்கு சாரதாவை பார்த்தார்.

"என்ன பாக்கறீங்க... என் பேச்சை உங்களால நம்ப முடியலியா?"

"அது இல்ல.. இப்படி ஒரு கருத்த இந்த தம்பி சொன்னா கூட நான் ஆச்சரியபட மாட்டேன். இந்த காலத்துல பசங்க இந்த சாபம் பாவத்தை எல்லாம் நம்ப மாட்டாங்கன்னு தான் தெரியுமே... ஆனா நீங்கள்ளாம் அந்த காலம், அதாவது என் காலம்..."

"அதனால?"

"நீங்க கொஞ்சம்கூட பயப்படாம பேசறதுதான் ஆச்சரியமா இருக்கு..."

"அதுக்கு காரணம் இருக்குங்க..."

"அப்படி என்ன காரணம்... நான் தெரிஞ்சுக்கலாமா?"

- சாரதாவும் கருணாகரனிடம் சொன்ன அவளது தாத்தா கதையை சொல்லி "பாம்பு பழி வாங்கும்னு சொல்றதெல்லாம் பொய். இதை நான் எங்க வேணா வந்து சொல்வேன். அதுக்காகதான் என் குடும்பத்தோட பூர்வ கதையை உங்களுக்கு சொன்னேன்" - என்று முத்தாய்ப்பாக கூறவும் துரைசிங்கம் முகத்தில் தீவிர சிந்தனை. அப்போது உறுமி மேல சப்தமும் உடுக்கை சப்தமும் வாசற்புரம் கேட்டது. பூசாரி பிரசாதங்களோடு வந்து கொண்டிருந்தார்.

"ஒரு நிமிஷம்மா..." என்று எழுந்து போய் பூசாரியிடம் பிரசாதத்தை வாங்கிக் கொண்டார். அப்படியே காலில் விழுந்து ஒன்பது முறை வணங்கி எழுந்திருந்தார்.

அவ்வேளையில் பூசாரியின் பார்வை கருணாகரன் மேலும் சாரதாவின் மேலும்தான் இருந்தது.

"பாத்துப்பா... இன்னிக்கு என் தேகம் அளவுக்கு அதிகமா எரியுது. உன்னை சுத்தி தப்பா யாரோ இருக்காங்கன்னு அர்த்தம். கவனம்.. கவனம்.. கவனம்..." - என்று கவனத்தை மூன்று முறை சொல்லி உடம்பையும் உதறிக் கொண்டார்.

பின் வில் போல் வளைந்து ஆ ஊ என்றெல்லாம் அரற்றியவர் பொத்தென்று மயங்கி விழுந்தார்.

வேலைக்காரர்கள் ஓடி வந்து பானை தண்ணீர் தெளிக்கவும் ஒரு பணிவான வேலைகாரனை போல எழுந்தவர், துரைசிங்கத்தையும் மிக பணிவாக பார்த்தார்.



"சரி பூசாரி... நீங்க போகலாம்..."

"உத்தரவுங்க... அருள் வாக்குல சொன்ன மாதிரி நடந்துக்குங்க."

"காலம் காலமா அப்படி தானே நடந்துகிட்டே வரேன்..."

"அதனாலதான் உங்க குடும்பத்தையும் அந்த நாகம்மா விட்டு வைச்சிருக்கா..." என்றார்.

அதற்கு ஜமீன்தார் துரைசிங்கத்திடம் பெரிதாய் பதிலில்லை. ஒரு பெருமூச்சு தான் வெளிப்பட்டது. பூசாரியும் திரும்பித் திரும்பி பார்த்தபடி விலகத் தொடங்கினார்.

"இது என்ன கூத்து?" - சாரதா கொஞ்சமும் தயக்கமின்றி கேட்டாள்.

"கூத்தா... குல தெய்வ பூஜைம்மா..."

"பாத்தா அப்படி தெரியலியே..."

"என்ன சொல்றீங்க..."

"நான் வெளிப்படையாவே பேச விரும்பறேன். உங்களுக்கு ஆட்சேபம் இல்லையே.."

"தாராளமா பேசுங்க..."

"அம்மாடி கொஞ்சம் இப்படி வா... என் பக்கத்துல வந்து உட்கார்.."

"இருக்கட்டுங்க..."

"வா... வந்து உட்கார். நீ நின்னா எனக்கு கால் வலிக்குது.."

- பூர்ணிமாவும் சாரதா அருகில் சென்று அமர்ந்தாள்.

சாரதாவும் சுற்றி ஒரு பார்வை பார்த்தாள். வேலை காரர்கள் சற்று தூரத்தில்தான் இருந்தனர். அவளுக்கும் அதுதான் தேவைப்பட்டது.

"ஐயா... இந்த பூசாரி நல்லவன் இல்ல.."

- சாரதாவின் ஆரம்பமே அதிரடியாக இருந்தது.

"என்னம்மா சொல்றீங்க..."

"நாங்க கார்ல வரும்போது ஊர் எல்லைலயே இந்த ஆளை நான் பார்த்தேன்..."

"அதனால என்னம்மா...?"

"இல்ல... நான் பாத்தப்போ ஒரு ஆடுமாடு மேய்க்கறவர் மாதிரி இருந்தாரு. கொஞ்சம் மிரட்ற மாதிரி பேசினாரு... இப்ப என்னடான்னா பூசாரி வேஷம் போட்டுகிட்டு வந்து மிரட்டாம மிரட்டிட்டு போறாரு."

- சாரதாவின் பேச்சு கருணாகரனையும் நிமிர்த்தியது. ஆனால் அவனால் அந்த கிழவன்தான் பூசாரி என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை.

"அம்மா நானும்தான் அவரைப் பார்த்தேன்.. அவர் வேற யாரோம்மா..." - என்றான்.

"இல்லப்பா... அவரேதான்! கண்ணுக்கு லென்ஸை மாத்திகிட்டு தலப்பாவை மாத்தி கட்டிட்டால்லாம் என்கிட்ட இருந்து தப்ப முடியாது. குறிப்பா நான் அங்க பார்த்தப்போ முதுகுல முள்ளு கிழிச்சு ஒரு தடயம் இருந்தது. இப்ப இங்க வந்தப்பவும் அதுதான் காட்டிக் கொடுத்தது.."

- சாரதா அசத்தினாள். பூர்ணிமா முகத்திலும் ஒரு புதுவித பொலிவு.

"சரிம்மா நீங்க என்ன சொல்ல வர்றீங்க?"



"உங்கள இந்த பூசாரி பாம்புகளை வெச்சு பயமுறுத்தி கட்டிப்போட்டுருக்கான். அதுக்கு உங்க முன்னோர்கள் எப்பவோ புத்தை இடிச்சதை பயன் படுத்திகிட்டு வரான்... குறிப்பா உங்க இடத்தை நீங்க யாருக்கும் வித்துடக் கூடாதுங்கறது இவன் விருப்பம்... அதனாலதான் யார் வாங்க வந்தாலும் அவங்களும் மிரட்டப்பட்டுருக்காங்க. நம்பாம மீறினவங்க இவங்க ஏவிவிட்ட பாம்புகளால இறந்தும் போயிருக்காங்க..."

- சாரதா ஒரு தேர்ந்த போலீஸ் அதிகாரி போல கூட்டிக் கழித்து சொன்னதை கேட்டு துரைசிங்கம் ஆடிப் போய்விட்டார்.

"அப்ப பூசாரியா எல்லா சிக்கல்களுக்கும் காரணம்?"

"பூசாரிதான் மூலகாரணம்... பின்னால நிச்சயம் ஒரு கூட்டம் இருக்கணும். அனேகமா அவங்க உங்க நிலத்துல குடியிருக்கறவங்களா இருக்கலாம். நீங்க இடத்தை வித்துட்டா வாங்கறவங்க அவங்கள காலி பண்ணச் சொல்லிடுவாங்களே?"

"அப்படின்னா என் மக வாழ்க்கைல எதுக்கு தலையிடணும். இவளுக்கு என்னால மாப்பிள்ளைகளையே பார்க்க முடியலியே..."

"அங்கதான் அவங்களோட பெரிய தந்திரமும் ஒளிஞ்சிருக்கு. நான் இப்ப சொல்ற மாதிரி அந்த பூசாரிகிட்ட நீங்க பேசினா நான் சொல்றதெல்லாம் உண்மையா, இல்லை என் யூகமான்னு உங்களுக்கு தெரிஞ்சிடும்..."

"சரி நீங்க என்னம்மா சொல்ல வர்றீங்க?"

"பூசாரிக்கு நிச்சயமா ஒரு பையன் இருக்கணுமே..."

"இருக்கான்..."

"அவனுக்கு கல்யாணம் ஆகியிருக்க வாய்ப் பில்லைன்னும் நினைக்கறேன்."

"ஆமாம்... ஆனா பூசாரி தன் மகனை எஞ்ஜினியரிங் படிக்க வெச்சிருக்காரு..."

"அப்ப நான் யூகிச்சது ரொம்பவே சரி. அந்த பையனுக்கே உங்க பொண்ணை கொடுக்கறேன்னு சும்மா சொல்லி பாருங்களேன்."

"இது என்ன விஷப் பரிட்சை...?"

"விஷத்தால தானே இவ்வளவு நாளுமே நீங்க பாதிக்கப்பட்டிருக்கீங்க. அதுல இருந்து விடுபடணும்னா தீர்க்கமா ஒரு விஷப்பரிட்சைல நீங்க இறங்கித்தான் தீரணும்!"

"என்னம்மா நீங்க... என் பெண்ணை மருமகளா அடைய அவருக்கு கசக்குமா.... மறு வார்த்தை பேசாம அடுத்த முகூர்த்தத்துலயே கல்யாணத்த வெச்சுக்க லாம்னு தாம்மா சொல்வாரு..."

"சொல்லட்டும்... கூடவே நாங்க பெண் கேட் டோம்னும் ஒரு வார்த்தை சொல்லுங்க.."

"இது எதுக்கு...?"

"அப்பதானே எங்களை கொல்ற முடிவுக்கு வருவார்...."

"இது என்ன விபரீத விளையாட்டு..."

"விளையாட்டு இல்லை.. இது ஒரு வித வலை. குற்றவாளியா தேடி வந்து வலைல விழ வைக்க செய்யற ஒரு முயற்சி.."



"அம்மா.. போதும்மா.. நீங்க இனி எதையும் பேச வேண்டாம். நான் பாத்துக்கறேன். நீங்க போட்ட கோட்டுல நான் ரோடே போட்டு காட்றேன்...,"

கருணாகரன் ஒரு புதிய உற்சாகத்தை காட்டினான்.

ஜமீன்தார் துரைசிங்கமோ சாரதாவின் பேச்சால் யானைகள் வந்து இறங்கிய குளம் போல குழம்பிப் போயிருந்தார்.

"என்னங்க யோசிக்கறீங்க... நான் சொன்னதெல் லாம் உங்களுக்கு நம்ப முடியாத மாதிரி இருக்குதா?"

"கொஞ்சம் அப்படி தாம்மா இருக்கு... இந்த பூசாரி ஒரு படிப்பறிவில்லாத தற்குறி. கோயில்ல மணி அடிச்சு பொழப்ப நடத்தறவரு. இவரு இப்படி ஒரு பெரிய ஜமீனுக்கு எதிரா திட்டம் போட்டு நடக்கறதெல்லாம் நடைமுறை சாத்யமாவே எனக்கு தெரியல..."

"அப்ப பாம்புகளுக்கு பழி உணர்ச்சி இருக்கு.. அதோட சாபம் தான் எல்லாத்துக்கும் காரணம்னு நீங்க நம்பறீங்களா?"

"சட்டுன்னு என்னால ஒரு முடிவுக்கு வர முடியல..."

"நான் வந்துட்டேன்... காரணம் நான் உங்க கிட்ட முன்பே சொன்ன என் முன்னோர்கள் பத்தின விஷயம்தான். பாவம் பாம்புகள்.. அதன் தலைல இருக்கற விஷம் அது தன்னை தற்காத்துக்க இயற்கை கொடுத்துருக்கற கொடை. நம்ம கைவிரல்ல நகங்கள் இருக்கற மாதிரி.. மற்றபடி அதுக்கு பழி உணர்ச்சி சாபம் கொடுக்கற தன்மை எல்லாம் கிடையாது. அதேசமயம் அவைகளுக்கு தெய்வீக குணம் உண்டு. அதை நாம வணங்கினா அதனால நம்ம வாழ்க்கை நிச்சயம்

வளப்படும். பாம்புகளை வணங்கற குடும்பம் [illegible] சிறப்போட குறிப்பா பிள்ளை பாக்யத்தோட இருந் [illegible]

- சாரதாவின் விளக்கம் ஜமீன்தார் துரைசிங்கத்தை ஒரு தெளிவுக்குள் தள்ளியது.

"சரிம்மா... நீங்க சொல்ற மாதிரியே நான் பூசாரி கிட்ட பேசறேன். தப்பித் தவறி பாம்புகளால் உங்களுக்கு ஏதாவது ஆயிட்டா...?"

"நிச்சயம் ஆகாது... அதுமட்டுமல்ல... நான் உங்களை பாக்க இங்க வந்துருக்கறது இடத்தை பாத்து [illegible] இல்ல... என் மகன் கருணாகரனுக்கு உங்க பொண்ணை கேக்கத்தான்... என் மகனுக்கு உங்க பொண்ணை கொடுப்பீங்களா?"

- சாரதா தேங்காய் உடைப்பது போல உடைத்து கேட்கவும் பூர்ணிமாவே திணறி விட்டாள். குபீர் என்று வந்த வெட்கத்தோடு கருணாகரனை பார்த்தாள்.

துரைசிங்கத்திடமும் திணறல் தெரிந்தது.

"என்ன யோசனை?"

"என்னம்மா சொல்ல... நிஜமா சொல்றேன்... பூர்ணிமாவை தைரியமா யார் கட்டிக்க முன் வந்தாலும் கட்டி வைக்கற எண்ணத்துல தான் நான் இருக்கேன். இவருக்கு தானா மாட்டேன்னு சொல்வேன்."

"அப்ப அது போதும்... இந்த பூ பழத்தட்டையே ஒரு அச்சாரமா வாங்கிக்கங்க. இந்த நிமிஷத்துல இருந்து பூர்ணிமா என் மருமகள். அதேசமயம் உங்கள சுத்தி இருக்கற சதி வலையை அறுக்கறதுதான் அடுத்த வேலை. அதுக்காக நீங்க நான் சொன்ன மாதிரி நடந்துக்கிட்டா போதும். குறிப்பா அந்த பூசாரிகிட்ட நாங்க பெண் கேட்டு வந்துருக்கறதா மட்டும் சொல்லுங்க. அப்படியே



[illegible] யாருக்கு வேணா என் பொண்ணை கட்டித் [illegible] ணும் வாய விடுங்க. அப்படியே என் குடும்ப [illegible] யை நல்லா தெரிஞ்ச உங்க மகனுக்கே நான் [illegible] ணை கட்டித்தந்து அந்த இடத்தையும் சீதனமா [illegible] ன்னு சொல்லிப் பாருங்க. அப்பதான் தெரியும் [illegible] ரோட சுரூபம்..."

"சரிம்மா... எனக்கும் பயந்து பயந்து வாழ்ந்து [illegible] த்துப் போச்சு. ரெண்டுல ஒண்ணு பார்த்துட்றேன். [illegible] துவரை நீங்க இங்க இந்த பங்களாவுலையே தங்கியிருங்க."

"வேண்டாம்... எங்கள தனியா ஒரு இடத்துல [illegible] ருங்க. அப்பதான் அங்க எங்கள கொல்றதுக்காக அந்த நபர் ரொம்பவே தைரியத்தோட வருவான்... அவன் வந்துட்டு போறதை என் மகனும் உங்களுக்கு [illegible] ட்டுமில்ல இந்த ஊருக்கே நிரூபிச்சு பாம்புகள் [illegible] ரால மனுஷன் எவ்வளவு மோசமா நடந்துகிட்டான் [illegible] ங்கறதையும் நிரூபிப்பான்..."

"அப்படின்னா எங்க ஜமீனுக்கு சொந்தமான தோப்புவீட்ல நீங்க தங்கலாம்..." - என்ற துரைசிங்கம் வேலைகாரர்களை அழைத்து இருவரையும் தோப்பு வீட்டுக்கு அழைத்துச் செல்லச் சொன்னார். அப்படியே பூசாரியையும் வரச் சொல்லு என்றார்.

கருணாகரன் சாரதாவுடன் புறப்பட்டான்.

வெட்கத்துடன் அவனைப் பார்த்த பூர்ணிமா தன்னையும் மீறி, "ஜாக்ரதை..." என்றாள்.

"ஜாக்ரதையா இருக்க வேண்டியது நாங்க இல்ல. சதிகாரங்க தான்..." என்று சொல்லி சிரித்தான் கருணாகரன்!

# 10

'என்றும்
உண்மைக்கில்லை அழிவு!
பொய்மை சுயநலத்தின்
பிழிவு...
வாய்மையே வாழ்க்கைக்கு
உயர்வு
தூய்மையுடன் வாழ்ந்திட
இல்லை தாழ்வு...'

பங்களா ஹாலில் துரைசிங்கம். பூசாரி உ நுழைந்தபடி இருந்தார்.

"வாங்க பூசாரி.. உக்காருங்க."

"இருங்கட்டுங்க.. கூப்பிட்டுவிட்டதா சொ னாங்க.."

"ஆமாம் பூசாரி.. ஒரு முக்கியமான விஷயத் உங்ககிட்ட பேசணும்."

"அப்படி என்னங்க விஷயம்..?"

"நீங்க காலைல வந்தப்போ இங்க இரண்டு பே இருந்தாங்க பார்த்தீங்களா?"

"சொல்லுங்க.. அவங்களுக்கென்ன?"

"என் நிலத்தை வாங்கறேன்னு வந்த அந்த தம்பி இப்ப என் பொண்ணையே கேக்கறான்.."

பூசாரி முகம் அடுத்த நொடி அதிர்வைக் காட்டியது.

"என் குடும்பச் சிக்கல் உங்களுக்குத் தெரியும். ஆனா அந்த தம்பிக்கு தெரியல.."



"தெரியாட்டி எடுத்து சொல்ல வேண்டியது னேங்க."

"சொன்னேன். குறிப்பா எங்க குடும்பத்து ல இருக்கற சர்ப்ப சாபத்தை அப்படியே ன்னேன்.."

"அதுக்கு என்ன சொன்னானுங்க அந்த புள்ள?"

"எதையும் நான் நம்ப மாட்டேன்.. பாம்பாவது பழி வாங்கறதாவது அதெல்லாம் சினிமாலதான் ...ட்டான்."

"அப்ப புரோக்கர் பாம்பு கடிபட்டு இப்ப ஆஸ்பத்திரில இருக்கறது?"

"அது தற்செயலா நடந்த சம்பவமாம்."

"மொத்தத்துல எதையும் நம்ப தயாரா இல்ல - அப்படித்தானே?"

"ஆமாம்.. அதனாலதான் கல்யாணப் பேச்சு பேச பெத்த தாயையும் கூட்டிகிட்டு வந்துட்டாரு.."

"அந்த அம்மா கூடவா பயப்பட மாட்டேங்க றாங்க."

"அவங்கதான் ரொம்பவே தைரியமா இருக் காங்க."

"இதை என்னால நம்பவே முடியலீங்க."

"என்னாலயும்தான்."

"சரி.. நீங்க என்ன பதில் சொன்னீங்க."

"ரெண்டு நாள் இங்க தங்கி இருங்க.. யோசிச்சு சொல்றேன்னு சொல்லியிருக்கேன்."

"இதுல யோசிக்க என்னங்க இருக்கு இரண்டு நா... அவங்க இங்க தங்குனா அநியாயமா சர்ப்பங்க... செத்துதான் போவாங்க.."

"அது தான் அவங்க தலைவெழுத்துன்னா நா... என்ன பண்ண முடியும். அதேசமயம் நான் ஒரு முடிவு... வந்துருக்கேன்.."

"என்னங்க..?"

"இனியும் காலம் கடத்தாம என் பொண்ண... உள்ளூர்லயே என் குடும்ப பிரச்சனை பத்தி நல்... தெரிஞ்ச யாராவது ஒருத்தருக்கு கட்டிக் கொடுத்து... லாமான்னு பாக்கறேன்."

துரைசிங்கத்தின் அந்த கருத்து பூசாரி முகத்தி... ஒரு மத்தாப்பையே கொளுத்திப் போட்டது.

"இப்ப தான் நீங்க ஒரு நல்ல முடிவுக்கும் வ... துருக்கீங்க."

"ஆமாம் பூசாரி.. கல்யாணம் ஆகாம ஒரு பொண்ணு... வீட்ல இருக்கப்போய் தானே இப்படி யாராச்சு... வந்து பொண்ணு கேக்கறாங்க. சீக்கிரமா கட்டிக்... கொடுத்து மாப்ளைக்கே இந்த பங்களா நிலம் நீச்... அவ்வளவையும் சீதனமா கொடுத்துட்டு நான்... மலேசியா போய் அங்க இருக்கற என் மனைவி மக்க... ளோட செட்டில் ஆயிடலாம்னு பாக்கறேன்."

"தங்கமான முடிவுங்க... தங்கமான முடிவு... பாப்பாவுக்கு ஏத்த படிச்ச புள்ளை யார்னு பாருங்க... உங்க விருப்பம் போல கட்டி கொடுங்க.."

"என்ன பூசாரி நீங்க.. நான் நேரா கேட்டாதான் நீங்க சம்மதிப்பீங்களா.. உங்க பையன விடவா ஒரு படிச்ச புள்ள இந்த ஊர்ல இருக்காரு?"



... ஜமீன்தார் துரைசிங்கம் நேருக்கு நேர் பளிச் ... கேட்கவும் பூசாரியே ஒரு விநாடி வெல ... வெலத்துப் போனார்.

"அது — அது..."

"என் பூசாரி.. உங்களுக்கும் என் குடும்ப சாபத்த நினைச்சு பயமா இருக்குதா.. அப்படின்னா வேண் டாம்.."

"சேச்சே.. அதெல்லாம் இல்லீங்க! நீங்க இப்படி நிநெப்பீங்கன்னு கேப்பீங்கன்னு நான் கனவுல கூட நினைக்கல..

"எதிர்பாராம பல விசயங்கள் நடக்கறது தானே வாழ்க்கை!"

"இருந்தாலும் நீங்க எங்க.. நான் எங்கே?"

"அந்த பேச்செல்லாம் இனி கூடாது.. சரின்னு சொல்லுங்க.."

"சரிங்க.."

"இரண்டு நாள் இவங்கள நம்ம குலசாமி உயிரோட விட்டு வெச்சா இவங்க கிட்டேயும் நான் இந்த விசயத்தை சொல்லி கல்யாணத்துக்கு வரச் சொல்றேன். இல்லாட்டி விதிப்படி நடக்கட்டும்.."

"எதுக்குங்க.. அதான் முடிவெடுத்துட்டீங்களே.. அவங்கள ஊரப் பார்க்க போகச் சொல்லுங்க.."

"சொல்லிட்டேன் பூசாரி.. என் பொண்ணுக்கு இப்ப நான் கல்யாணம் பண்ணப் போறதில்ல. இங்க இருந்தா உங்க உசிருக்கும் ஆபத்துன்னேன். அது எப்படி வருதுன்னு பாக்கறோம். சாபமாவது பேயாவது எல்லாம் பொய்ங்கறாங்க.."

"அப்ப விடுங்க... இங்க இருந்து செத்து போகட்டும். எவ்வளவோ பேர் போய் சேர்ந்தாச்சு அந்த லிஸ்ட்டுல இவங்களும் கடைசி கடைசியா சேர்ந்துக் கட்டும்."

பூசாரியின் பதிலில் ஒரு தீர்க்கம் தெரிந்தது அது துரைசிங்கத்துக்கும் புரிந்தது!

தோப்பு வீடு!

ஓட்டு வில்லை வீடாக இருந்தாலும் நேர்த்தியாக இருந்தது. சோபா கட்டில் ஃப்ரிட்ஜ், டி.வி. என்று எல்லா வசதிகளும் இருந்தன. வீட்டை சுற்றி ஆயிரக்கணக்கில் தென்னை வாழை என்று பசுமையின் கொண்டாட்டம்.

ஏராளமான அணில்கள் துள்ளி விளையாடிக்கொண்டு இருக்க பட்டுப்பூச்சிகளும் பறந்து கொண்டிருந்தன.

சாரதாவோடு அங்கு வந்து இறங்கிய கருணாகரன் உள்ளே நுழைந்த கையோடு தாயின் கையை பிடித்துக் கொண்டான்.

"என்னப்பா.."

"நீ ரொம்பவே வித்யாசமான அம்மாம்மா."

"அப்படியா?"

"அது மட்டுமில்ல... நீ போலீஸ்ல இருக்க வேண்டியவ."

"போடா பைத்தியம். புத்தகம் படிக்கற பழக்கம் இருக்கறவங்களுக்கு எப்பவுமே தெளிவும் கூர்மையும் தானா வந்துடும். தெரிஞ்சுக்கோ."

"அதெல்லாம் சும்மா.. நான் கூட இந்த ஊருக்கு வந்தப்போ நீ பார்த்த கோணத்துலயே பாக்கல. என்னால



[illegible] முடியல. ஆனா நீ பூசாரிய கரெக்டா கண்டு [illegible] பார். இரேட்டும்மா நீ.."

"என்ன புகழறத விடு.. நான் கோடு போட்டா [illegible] ரோடு போடுவேன்னியே அதை செய். [illegible] என்னையும் கடிக்க சர்பங்கள் வரப் போறது [illegible]."

"அப்படி வரப்போற சர்பங்கள யாரு எப்படி ஏத்துக்கிட்டு வரப் போறாங்கங்கறது தானே [illegible]."

"ஆமாம்.... அவங்கள நாளைக்கு இந்த ஊர் தெரிஞ்சுக்கணும். குறிப்பா ஜமீன்தார் துரைசிங்கம் தெரிஞ்சுக்கணும்."

"நிச்சயம் தெரிஞ்சுக்குவார்மா... அதுக்கு என்ன செய்யணுமோ அதை செய்ய எல்லா ஏற்பாட்டையும் செஞ்சுட்டேன்.."

"பாக்கறேன்.. நீ என்ன செய்யப் போறேங்கறத.."

"சரிம்மா நீங்க ரெஸ்ட் எடுங்க.. நான் அப்படியே வெளிய போய்ட்டு வரேன்.."

"பார்த்துப்பா.."

"சரிம்மா.." கருணாகரன் உற்சாகமாக சாரதாவை அந்த வீட்டில் விட்டுவிட்டு புறப்பட்டு போனான். சாரதாவும் எந்த அரவமும் இன்றி டி.வி.ஐ போட்டுக் கொண்டு உட்கார்ந்து கொண்டாள்!

இரவு நேரம்!

ஹாலில் அமர்ந்து கொண்டிருந்தனர் கருணாகரனும், சாரதாவும். ஜல் ஜல் என்று கொலுசு சப்தம்

கேட்கவே திரும்பிப் பார்த்தான். பூர்ணிமா தேவி கையில் அவர்களுக்கான டின்னர் சாப்பாடு...

"வாம்மா... என்ன கைல...?"

"உங்களுக்கு சாப்பிட டிபன் கொண்டு வந்திருக்கேன்..."

"நீ தான் கொண்டு வரணுமா, யார் கிட்டயாவது கொடுத்து விடலாமே..."

"இல்ல.. அது வந்து..." அவன் கருணாகரனை பார்த்தபடி ஒரு மாதிரி நெளிந்தான்.

"புரியுது.. ஏதோ பேச நினைக்கறே - இதை சாக்கா வெச்சு வந்துருக்கே அப்படி தானே?"

"ஆமாம்மா.. எனக்கு பயமா இருக்கு.."

"நான் எதிர்பார்த்ததுதான் இதை.. பயப்படாதே எங்களுக்கு எதுவும் ஆயிடாது."

"அம்மா உங்க நம்பிக்கை தைரியம் எல்லாம் எனக்கு ரொம்ப ஆச்சர்யமா இருக்கு.. இதே நம்பிக்கை தைரியத்தோட என்னை பெண் பார்க்கவும், இப்ப வாங்கவும் வந்தவங்கல்லாம் இப்ப உயிரோட இல்லை அதை நினைச்சா தான்..."

"உன் நல்ல மனசை நினைச்சு சந்தோஷப்பட்டேன் பொறந்துட்டோம் - அதனால வளர்ந்துட்டு வேலை வந்தா செத்துப் போறது வாழ்க்கை இல்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும் அர்த்தத்தோட இருக்கணும்னு நினைச்சு வாழறவ நான். எனக்கு எதுவும் ஆகாது.."

- சாரதா பூர்ணிமா தேவிக்கு முடிந்த அளவு சமாதானம் சொல்லிவிட்டு வந்து அவன் கொண்டு வந்த டிபனையும் மகனோடு அமர்ந்து சாப்பிட்டான்.



...ரிச ருசியாக இருந்தது.

"டேய்.. இது அவ தன் கைப்பட சமைச்சது" ...கிறாள்.

"எதை வெச்சும்மா சொல்றீங்க.."

"இதே மசால் வாசனை அவ கையை நான் பிடிச்ச அப்பவும் வந்தது.."

"அம்மாாா..."

"நல்லா சமைக்கறா இல்லை.."

"நல்லாவா.. சூப்பர்!"

"இனி நானே வேண்டாம்னாலும் நீ கேட்க மாட்டே.. கல்யாணம் பண்ணிட்டுதான் விடுவே. அப்படித்தானே?"

"போம்மா.."

"நீ வெட்கப்பட்டு இப்பதான்டா பாக்கறேன்.." இருவரும் எந்தவித டென்ஷனும் இன்றி பேசியபடி இருந்தபோது 'ஸ்ஸ்ஸ்' என்கிற சப்தம் கேட்டது!

திரும்பிப் பார்த்தனர். அவர்கள் அமர்ந்திருந்த இடத்துக்கு மிக பக்கத்திலேயே ஒரு நல்ல பாம்பு படம் விரித்தபடி.. சாரதாவுக்கு லேசாக விதிர்த்தது 'அம்மா..' என்று அவளருகில் வந்து நின்று கொண்டான் கருணாகரன்.

அந்த பாம்பை என்ன செய்வது என்று குழம்பிய போது சாரதா ஆஸ்திகரின் மந்திரத்தை முணுமுணுக்கத் தொடங்கியிருந்தாள்.

"என்னம்மா.. இது மந்திரம் சொல்ற நேரமா?"

"நீயும் சொல்லு.. அடி மனசுல இருந்து நம்பி... யோட சொல்லு... இது மாய மந்திரம் இல்ல... நம்பிக்கை மந்திரம்.."

இருவரும் மெல்ல நகர்ந்து சென்று படிக்கட்டில் அமர்ந்து கொண்டனர். சாரதா அந்த மந்திரத்தை திரும்பத் திரும்ப சொன்னாள். கருணாகரன் ஒரு... எடுக்க முற்பட்டான்.

"தப்பு பண்ணாதே.. என் மேல் சத்தியம்... ஆகாது" என்றாள். அவன் அப்படி சொல்லிக் கொண்டிருக்கும்போதே ஒன்று இரண்டு மூன்று நான்கு என வரிசையாக பாம்புகள் அவர்கள் முன் வாசல் வழியாக... ஜன்னல் வழியாக என்று வந்து அவர்கள் முன்னால் படம் விரித்தபடி நிமிர்ந்து நின்றன.

"அம்மா என்னம்மா ஒரு பெரிய படையே வந்துருக்கு.."

"நாக படைப்பா? வரட்டும்.. இதை ஒரு தரிசனமா நினை.. கண்ணுல பயத்த காட்டாதே. பக்தியோட பார்."

"அம்மாாா.."

"நீ பயப்படலேன்னு தெரியும்... கோபப்படவும் கூடாது. இங்க இருக்கற ஒரு பாம்புக்கு கூட எதுவும் ஆக கூடாது. பாவம் இதுங்க. மனுஷன் தப்புக்கு இதுங்க என்ன பண்ணும்."

சாரதா அவைகளை பார்த்தபடியே பேசினாள். அவனும் அம்மாவுக்கு கட்டுப்பட்டு அந்த அதிசய காட்சியை ஆச்சரியத்தோடு பார்த்தான். இருவரும் பார்த்தபடியே இருந்தனர்!

விடிந்துவிட்டது!



இப்போது அங்கே ஒரு பாம்புகூட இல்லை.

சாரதா கண்களை மூடி ஜபத்தில் இருந்தாள். ...படியில் கருணாகரன் அப்படியே சாய்ந்து விட்டிருந்தான். பூர்ணிமா வரவும் தான் விழித்தனர். ...யும் உறவுடன் பார்க்கவும் பூர்ணிமாவிடம் ... அறிவு

பயந்துகிட்டே வந்தேன்.. வர்ற வழியில பூசாரியும் ...ணுல பட்டார். நீங்க பிணமா கிடப்பீங்கன்னு சொல்லிகிட்டிருந்தார்.."

அதை கேட்டு சிரித்த கருணாகரன் அவளையும் அழைத்துக் கொண்டு வெளியே சென்றான். அங்கே மரங்களில் தொண்டியல் கேமரா பொருத்தப்பட்டு அவர்கள் வரவும் படம் பிடித்தபடி இருந்தது.

"நாலா புறமும் கேமரா... ஆன் கண்டிஷன்ல இருக்கற இதை ரிவைண்ட் பண்ணி ஓடவிட்டா பாம்புகள் எப்படி வந்ததுன்னு தெரிஞ்சிடும்" - என்றவன் எல்லாம் கேமராவை கழற்றி எடுத்தவனாக அதை எல்லாம் ரிவைண்ட் செய்து தன் லேப்டாப் மானிட்டரிலேயே பார்க்கத் தொடங்கினான்.

கறுப்பு போர்வை போர்த்திக் கொண்டு பூசாரியும், பூசாரியின் மகனுமே ஒரு கூடையில் பாம்புகளை கொண்டு வந்து உள்ளே விட்டபடி இருப்பது தெளிவாக பதிவாகியிருந்தது.

உள்ளே விட்டுவிட்டு ஓசைப்படாமல் அவர்கள் திரும்பிச் செல்வதும், தெளிவாக பதிவாகியிருந்தது.

அதை சாரதாவும் பார்த்தாள்.

"கருணாகரா... நான் போட்ட கோடு மேல நல்ல பெரிய ரோடாவே போட்டுட்டப்பா" என்றாள்.

பூர்ணிமா தேவி முகத்தில் ஒரே பிரகாச[illegible]

"ஆமா... அந்த பாம்புகள் கிட்ட இருந்[illegible] தப்பிச்சிங்க?" என்று கேட்டாள்.

"அமைதியா வேடிக்கை பார்த்தோம்[illegible] மனசு மட்டும் எனக்கு தெரிஞ்ச மந்திரத்தை [illegible] கிட்டேயிருந்தது. நாம எதுவும் செய்யாதப்[illegible] மட்டும் ஏதாவது செய்யுமா என்ன? அது [illegible] மனுஷனா.. வம்பா வந்து சண்டை போட[illegible] வாயில்லா ஜீவன்மா... ரொம்ப நேரம் [illegible] பாத்துகிட்டே இருந்துட்டு வந்த வழியே தி[illegible] போயிடிச்சுங்க" என்றாள்.

அடுத்த நொடியே பரவசமான உணர்வுகளோ[illegible] "அத்தை" என்கிற நெகிழ்வோடு அவள் கால்[illegible] விழுந்தாள் பூர்ணிமாதேவி.

அவளுக்குத்தானே தெரியும் அது எவ்[illegible] பெரிய விடியல் என்று!

முற்றிற்று